Registered as a News Paper
விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் - 16
வெள்ளிநாதம் Weekly
நாதம்—14 வெள்ளி—06 04—10 ஏப்பிரல் 2003






ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 04.04.2003


# போர் நிறுத்தத்திற்கான புதிய வரைபுகளின் அவசியம்

எதிர்வரும் ஏப்ரல் 24ஆம் திகதியிலிருந்து, அரசுக்கும் புலிகளுக்குமிடையேயான போர்நிறுத்த உடன்பாட்டின் விதிமுறைகளில் புதிய வரைபுகள் உருவாக்கப்படவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான ரெகில்சன் தெரிவித்துள்ளார். இந்தப் புதிய வரைபுகளை சிறிலங்கா அரசு, விடுதலைப்புலிகள், கண்காணிப்புக்குழுவினர் ஆகிய முத்தரப்பினரும் இணைந்து உருவாக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்ட நிலையில் இந்த ஓராண்டுகால போர்நிறுத்த அமுலாக்கலின் சாதக, பாதக நிலைகளை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்வது என்பது ஒரு அவசியமானது என்றாகி விட்டுள்ளது.

இந்த ஓராண்டு கால போர் நிறுத்த அமுலாக்கலின் அனுபவமானது உடன்பாட்டின் பலம் மற்றும் பலவீனங்களை மிகத்தெளிவாகவே சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த ஓராண்டுகால போர் நிறுத்த அமுலாக்கலின் பெறுபேறாக ஒரு சமாதானத் தோற்றம் காட்டும் அமைதி நிலை நிலவினாலும், நிரந்தரமான உறுதியான, அச்சமற்ற சமாதானச் சூழல் இன்னமும் அரச தரப்பினரின் செயற்பாடுகளால் உத்தரவாதப்படுத்தப்படவில்லை என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகியுள்ளது.




சிறிலங்காவில் அமைதி முயற்சிகளை ஆரம்பித்து போர்நிறுத்த உடன்பாட்டில் கையொப்பமிட்ட ரணிலின் அரசுக்கும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு... குறிப்பாக சமாதானம் மற்றும் அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்பான புரிந்துணர்வு என்பது ஓடும் புளியம் பழமுமாகவே உள்ளது.

முப்படைத் தளபதி என்ற வகையில் ஆயுதப்படைகள் மீதான ஆதிக்க அதிகாரவலு சனாதிபதியின் கைகளிலேயே இருப்பதால், சமாதான முயற்சிகளின் போதான படைத்தரப்பினரின் அனுசரணையை, ஆதரவை ரணிலின் அரசு முற்று முழுதாக பெற்றுக் கொள்ளமுடியாத முரண் நிலையொன்று நிரந்தரமாகியுள்ளது.

இதுவே சமாதான நகர்வுகளுக்கான பெரும் அச்சுறுத்தலாக இன்று விரிவாக்கம் பெற்று வருகிறது.

அதிகார பலமற்ற பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுகள்.

தீர்மானங்கள் திட்டவட்டமாக எடுக்க முடியாத பிரதமர் சமாதான நகர்வுகளை மனப்பூர்வமாக அங்கீகரித்து ஒத்துழைக்காத சனாதிபதி.

அமைதிப் பேச்சுவார்த்தைகளை அடியோடு நிராகரிக்கும் ஜே.வி.பி. உட்பட எதிர்க்கட்சிகளின் பேரினவாதக் கூட்டணி...

சனாதிபதிக்கு தலையையும் பிரதமருக்கு வாலையும் காட்டியபடி சந்திரிகாவின் அபிலாசைகளுக்கே தலையசைத்து செயற்படும் முப்படைத்தலைமைகள், மற்றும் காவல்துறை,

என ஒருவகையான நச்சு வளையங்களின் ஆபத்தான வியூகங்கள் சமாதான செயற்பாடுகளை சுற்றியுள்ள நிலையில் அமைதி முயற்சிகள் ஓராண்டு காலத்தை இழுத்துப் பறித்து ஒரு மாதிரி கடந்துள்ளது என்றால் அதற்குள்ள சர்வதேச ஆதரவுப்பலமே மூல காரணமாகும் .

நோர்வே அனுசரணையிலான சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் வழங்கும் ஆதரவை விரும்பாவிட்டாலும் அதனை நிராகரித்து ஒதுக்கும் திராணி சிறிலங்காவின் ஆளும் வர்க்கத்தினருக்கு இல்லை.

இதுவே சமாதானம் தொடர்பாக தமிழ் மக்களுக்கு இருக்கும் நூழிழை அளவிலான நம்பிக்கைக்கும் காரணம்.

இந்த ஓராண்டு கால சமாதான யாத்திரை சந்தித்த இடையூறுகள் அனைவரும் அறிந்த ஒன்றே. குறிப்பாக இராணுவத்தரப்பும், கடற்படையினரும் ஏற்படுத்திவரும், மேற்கொண்டுவரும், செயற்பாடுகள், நடவடிக்கைகளின் தாக்கங்கள் பல தடவைகளில் சமாதானத்தை கேள்விக் குறியாக்கி விட்டுள்ளதுடன். இன்னமும் தொடர்ந்து அதே நிலைமையையே ஏற்படுத்தி வருகின்றது.

இயல்பு வாழ்க்கை என்ற சமாதானத்தின் அடிப்படை அம்சமே தமிழ் மக்களுக்கு இன்னும் எட்டவில்லை. அவர்களின் வாழ்வியல் உரிமைகளுக்கான அடிப்படை அம்சங்களையே பாதுகாப்பு தரப்பு உதாசீனம் செய்வதில் முனைப்பாக இயங்கி வருகிறது.

இதற்கு வெளிப்படையாகவே சனாதிபதி தரப்பின் பின்பலம் இருப்பதும், அதனைக் கட்டுப்படுத்த பிரதமர் தரப்பின் பலம் இல்லாதிருப்பதும் தான் போர்நிறுத்த உடன்பாட்டின் ஆரம்பகால நம்பிக்கையின் அடிப்படையிலான வரைபுகளை பலவீனமாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கடல்வலய நடமாட்டம் தரைப்பிராந்திய எல்லைகள் தொடர்பான சிக்கலான பிரச்சினைகளை வெறும் புரிந்துணர்வின் அடிப்படையில் மட்டும் தீர்க்க முடியாதென்பதை கடந்த ஓராண்டு கால அனுபவம் உணர்த்தியுள்ளது.

எனவே தான் கண்காணிப்புக் குழுவினர் தம்பணிகளை மேலும் உறுதியாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டவர்களாகியுள்ளனர்.

ஆகவே போர் நிறுத்தத்திற்கான புதிய வரைபுகள் என்பது அனுபவப் பாடத்தின் - தாக்கத்தின் - வெளிப்பாடாகவும், மிக உறுதியாகவும் அமுல்படுத்தப்பட வேண்டியதாகவும் உருவாக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## தூரனின் பார்வை

# அரசின் மௌனங்கள்... தொடரும் சந்தேகங்கள்...

சிறிலங்காவின பாதுகாப்புப் படையினர் தொடர்ந்தும் தமது, சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டே வருகின்றனர்.

யாழ். குடாநாட்டை முற்று முழுதாக ஒரு இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசமாகவே மாற்றும் நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்ந்தும் தீவிரம் காட்டி வருவதன் மூலம் இது ஒரு திட்டமிட்ட, வெளிப்படையான - அரச அனுசரணையுடன் கூடிய செயற்பாடாகவே என்ன வைத்துள்ளனர்.

அரசின் ஆதரவோ. அல்லது உள்ளார்ந்த விருப்பமோ இன்றி ஆயுதப்படையினர் சுயேச்சையாக, தமது சுயாதீனமான எண்ணத்திற்கமைய, தமது மேலதிக்கச் செயற்பாடுகளைச் செய்கிறார்கள் என எவரும் எண்ணக்கூடாது.

அப்படி அரசின் அனுசரணையின்றி, தமிழ் மக்களின் வாழ்விடப் பிராந்தியங்களை, படைத்தளங்களாகவும், இராணுவ முகாம்களாகவும் ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளை ஆயுதப்படையினர் மேற்கொள்ளுகின்றார்கள் என எவரும் கூறுவார்களேயானால் சிறிலங்காவில் அரச நிர்வாகத்தை விட இராணுவ நிர்வாக அதிகாரமே மேலோங்கியுள்ளது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதே அர்த்தமாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஓராண்டுக்கு மேலான பின்னரும், பேச்சுவார்த்தைகளை நாடுமாற்றி நாடாக மேற்கொள்வதில் ஆர்வமும் அக்கறையும் காட்டும் அரசு அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலான சமாதானத்திற்கான மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்த அம்சங்களில், குறிப்பாக அவர்கள் தங்கள் தங்கள்.... சொந்த... பாரம்பரிய வாழ்விடங்களில் மீண்டும் தமது வேர்களை பதிக்க எடுக்கும் முனைப்புக்களில் பெருமளவில் அக்கறை கொண்டதாக இல்லை.

அதன் இலக்கு, உள்நாட்டு பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் என்ற பெயரில், நலிந்துகிடக்கும் சிறிலங்காவின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கான சர்வதேச நிதி உதவிகளை மிக அதிக அளவில், மிக வேகமாக பெற்றுக்கொள்வதற்கான உள்நோக்கத்திலேயே குவிமையம் கொண்டிருக்கிறது.

சமாதானம் என்பதன் அர்த்தம், இராணுவச் சமநிலையைப் பேணலும், ஆயுதப் படைகளின் வளத்தைப் பெருக்குதலும், பாதுகாப்பு என்ற சொல்லை உச்சரித்துக் கொண்டே, 'உயர் - பாதுகாப்பு வலயம்' போன்ற ஆக்கிரமிப்புகளை நியாயப்படுத்த சர்வதேச இராணுவ ஆய்வாளர்களை ஆலோசனை கோரிக்கொண்டு அதனை வலுப்படுத்துதல் மட்டும்தான் என அரசாங்கம் நினைப்பதாகத் தெரிகிறது.

இல்லையெனில், ஆயுதப்படைகளின் அத்துமீறல்களை புரிந்துணர்வுக்கு எதிரான செயற்பாடுகளை சமாதான நகர்வுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசால் தீர்க்கமாக கட்டுப்படுத்தியிருக்க முடியும். அவர்கள் அப்படி எதனையும் செய்ய முயற்சிப்பதாகவே தெரியவில்லை.

ஆயுதப் படைகளின் சுயாதீனமான செயற்பாடுகளில் தலையிட்டு அவர்களின் எதிர்ப்பையும், பேரினவாத சக்திகளின் ஆதரவின்மையையும் சனாதிபதியின் எரிச்சல் மற்றும் அச்சுறுத்தலையும் பெற்றுக்கொள்ள அரசு தயாராக இல்லை என்பதும் தெளிவாகவே தெரிகிறது.

இடம்பெயர்ந்த இன்னலுடனும் மக்களின் இயல்பு வாழ்வுக்கான உத்தரவாதத்தை அவர்கள் சொந்த மண்ணில் நிலைகொண்டு சொந்தமண்ணில் உழைத்து, சுதந்திரமாக நிம்மதிப் பெருமூச்சு விட்டு வாழும் வாழ்வுக்கான பாதுகாப்பு உறுதியை வழங்கத் திராணியற்று 'சமாதானத்தின் ஓராண்டுப் பெறுபேறுகளைத் தமிழ் மக்கள் இன்னமும் முற்றாக அனுபவிக்கவில்லை' என ஒப்புதல் வாக்கு மூலத்தை அளிக்கும் அரசு, மக்களின் இயல்பு வாழ்வு என்ற அழுத்தமான சனநாயக உரிமைகளுக்கு உயிர்ப்பளிக்காது 'தேர்தல்' போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செயற்படுவதானது கேலிக்குரிய கோமாளித்தனமான நடவடிக்கை மட்டுமல்ல மிகவும் திட்டமிட்ட உள்நோக்கத்தைக் கொண்ட 'சதி'யாகவும் இருக்கவே செய்கிறது.

மக்கள் இன்னமும் தமது நிலைகளில், இருப்புக்கொள்ளாத நிலையில், ஒரு தேர்தலை 'வெற்றிகரமாக' விடுதலைப்புலிகளின் அனுசரணையுடன் நடத்திக் காட்டுவதன் மூலம் மக்கள் தமது சனநாயக சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான இயல்புச் சூழ்நிலை வடக்கு மற்றும் கிழக்கில் உருவாகி விட்டதாக, அரசு உருவாக்கி விட்டதாக சர்வதேச சமூகத்திற்கு ஒரு செய்தியை உரத்துச் சொல்ல விரும்புகிறது என்றே எண்ண முடிகிறது.

இராணுவ பாதுகாப்பு வலயத்திற்குள், முகாம்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் எவ்வித அச்சமுமின்றி, ஒரு தேர்தலில் சுயாதீனமாக பங்கு கொள்ளும் சுதந்திரம்மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்று பிரச்சாரம் செய்வதற்கான உத்தியாகவே உள்ளூராட்சித் தேர்தல்களை அரசு பயன்படுத்தமுனைகிறது.

மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதிப்படுத்தப்படாத நிலையில் ஆயுதப்படைகளினதும், அவர்களின் துணைப்படைக் கைக்கூலிகளினதும் ஆக்கிரமிப்பும், நிலைகொள்ளலும் அகலாத நிலையில், அகற்றப்படாத நிலையில் தேர்தல் என்பது மக்களை ஏமாற்றும் சர்வதேச சமூகத்தைப் பேய்க்காட்டும் ஒரு நிகழ்ச்சியாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் ஒரு காலத்தில் யாழ். மாநகர மக்களின் கலாசார நிலையமாகவும், நிர்வாக மையமாகவும் விளங்கி, போரின் தாக்கத்தால் சிதையுண்டு போன யாழ் மாநகர வளாகம், மற்றும் யாழ் குழந்தைகளின், சிறார்களின் மகிழ்ச்சிப் பூங்காவாகத்திகழ்ந்த 'சுப்பிரமணியம் பூங்கா' வளாகம், ஆகிய பகுதிகளில், புதிய பாரிய இராணுவ படைத்தளம் ஒன்றை அமைக்கும் முயற்சியில், மக்களதும், பொது அமைப்புகளதும் எதிர்ப்புகளைப் புறந்தள்ளி, படைதரப்பு ஈடுபட்டு வருவதானது, தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளை அவமதிக்கும் அதியுச்ச நடவடிக்கையாக மட்டுமல்ல, அரசின் சமாதான நகர்வுகளைக் கொச்சைப்படுத்தும் செயற்பாடாகவும் உள்ளது.

கோவில், தேவாலயங்கள், பாடசாலைகள், மக்கள் குடியிருப்புகள், கடற்தொழிலுக்கான நீர்ப்பரப்பு, பொதுசன நூல் நிலையம், வீரசிங்கம் கலாசார மண்டபம், யாழ். விளையாட்டரங்கு....... என மக்கள் குழுமும்' இயங்கும், வாழ்வியல் மையங்களுக்கு மத்தியில் ஒரு பாரிய படைத்தளத்தை ஒரு வர்மத்துடன்' இராணுவம் உருவாக்க முயல்வதானது தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றாக சீரழிக்க முனையும் திட்டமிட்ட அடாவடித்தனமாகவே உள்ளது.

இது தொடர்பாக எத்தனையோ கண்டனங்கள், மகஜர்கள், மனுக்கள் என, அரசுக்கும் அதுசார்ந்த அமைச்சுக்கும் அனுப்பியும் இன்னமும் 'மௌனம்'தான் பதிலாக இருப்பது, அரசு அதற்கு சம்மதம் என்ற எண்ணத்தை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

மக்கள் வதிவிடப்பகுதிகளில் படைத்தளமோ, முகாமோ இருப்பதென்பது அமைதிக்கு அச்சுறுத்தலான விடயம் என்பது ஐயமில்லை. அது சமாதானத்திற்கு எவ்வகையிலும் உதவப் போவதுமில்லை.

இத்தகையதோர் செயற்பாடு இராணுவ மேலாதிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் வெளிப்பாடேயாகும்.

இந்த செயற்பாட்டில் அரசின் மௌன அங்கீகாரமானது அரசுக்கும் அதன் சமாதான செயற்பாடுகள் குறித்த, பற்றுறுதி குறித்த, விசுவாசம் குறித்த, சந்தேகம் இருப்பதையே தெளிவுபடுத்துகின்றது.

இது சமாதானம் குறித்த எதிர்கால நகர்வுகளுக்கு ஆபத்தானது.

உயர்பாதுகாப்பு வலயம் புதிய இராணுவ முகாமைத்தல், தளமமைத்தல் போன்றவை, அரசின் இராணுவ சமநிலையை - ஆக்கிரமிப்பு நிலையை உறுதிப்படுத்தவும், பேரினவாதிகளை திருப்திப்படுத்தவும் அரசுக்கு அவசியமானதாக இருக்கலாம். ஆனால், அது புரிந்துணர்வின் அடிப்படையிலான இயல்பு வாழ்க்கையை தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்தவும், சமாதான சமநிலையை உத்தரவாதப்படுத்தவும் எந்த வகையிலும் உதவப்போவதில்லை....

மாறாக மீண்டும் ஒரு 'போர்' குறித்த பதற்றநிலையை தோற்றுவிக்கவே உதவும்.

இதனைத் தவிர்க்க மனித நேயத்துடனும், மனோதர்மத்துடனும், அரசு செயற்படுவதை கண்காணிக்கும் அதீத பொறுப்பு சமாதான ஏற்பாட்டாளர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் மட்டுமே உண்டு...

நம் இதயங்கள் கோணலாக இருந்தால், தலைகள் சீராக இருந்து பயனில்லை. - எட்வர்ட் யங்

# சிங்களவரும் சமாதானத்துக்கான நிதியும்

நிலாந்தன்

அண்மையில மாற்றுக் கொள்கைகளுக்கானமையம் சமஷ்ரி பற்றி சிங்களவர் மத்தியில் ஒரு கருத்துக் கணிப்பைச் செய்தது. இதில் 29 விகிதமான சிங்களவர்களே சமஷ்ரியை ஆதரிப்பதாக முடிவுகள் காட்டின. அதாவது 71 விகிதமான சிங்களவர்கள் சமஷ்ரியை எதிர்க்கிறார்கள்.

அதுவும் கடந்த ஓராண்டுகால யுத்த நிறுத்த அனுபவத்தின் பிறகும் அவர்கள் சமஷ்ரியை எதிர்க்கிறார்கள்.

இதை எப்படி எடுப்பது?

சிங்களவர்களுக்கு இப்பொழுதும் கூட சமஷ்ரி என்றால் என்னவென்று விளங்கவில்லை என்று எடுப்பதா?

அல்லது அவர்கள் சமஷ்ரியைச் சரியானபடி விளங்கிக் கொள்ள அவர்களுடைய அரசியல்வாதிகள் தடையாக இருக்கிறார்கள் என்று எடுப்பதா?

அல்லது சிங்களவர்கள் இன்னமும் திருந்தவில்லை என்று எடுப்பதா?

அப்படியானால் அவர்களுக்கு என்னதான் வேண்டும்?

யுத்தமும் வேண்டாம்

சமஷ்ரியும் வேண்டாம்

யுத்தநிறுத்தம் மட்டும் தானா வேண்டும்?

தீர்வெதற்கும் போகாது இப்படியே இழுபட்டுச் செல்லும் ஒரு யுத்தநிறுத்தம் மட்டும் தானா சிங்களவரின் தெரிவு?

அப்படியானால் சமாதானம் என்று அவர்கள் கருதுவது எதனை.

இது தான் பிரச்சினை.

சிங்களவர்கள் சமாதானம் என்று கருதுவது தோற்கடிக் கப்பட்ட தமிழர்களின் மீது திணிக்கப்படும் ஏதோ ஒன்றைத்தான்.

யுத்தமோ சமாதானமோ அதன் இறுதி நிலையில் தமிழர்களைத் தோற்கடித்து விட வேண்டும் என்றே



ஆசான் விரும்புகிறார்கள்.

எதிர்தரப்பை தோற்கடிப்பது என்பது யுத்தத்துக்குப் பொருந்தும். யுத்தத்தில் வெல்பவருக்கே எல்லாமும். அதில் வெற்றியை எதிரியுடன் சேர்ந்து பங்கிடுவது என்பதெல்லாம் கிடையாது.

மாறாக சமாதானம் எனப்படுவது சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒருவர் மற்றவரை தோற்கடிப்பதில்லை. அங்கே யாருக்கும் தோல்வியில்லை பதிலாக வெற்றியைப் பங்கிடுவதே சமாதானம்.

இது தான் முக்கியம்.

பங்கிடுவது. அதாவது எதிரியுடன் சேர்ந்து பங்கிடப் படுவதே சமாதானம். இதில் யாரும் தோற்கடிக்கப்படுவதில்லை.

மாறாக, சிங்களவர்கள் தமிழர்களோடு சேர்ந்து இச்சிறு தீவை பங்கிடத் தயார் இல்லை என்பதைத்தான் அவர்களில் 71 விகிதமானவர்கள் சமஷ்ரியை எதிர்ப்பது காட்டுகிறது.

ஆனால் பேராசிரியர் பீரிஸ் கூறுகிறார் சமாதான முன்னெடுப்புக்களில் "திரும்பிச் செல்லல் இல்லை" என்று. அதாவது Irreversible. இதை அவர் ஆறாங்கட்டப் பேச்சுக்கள் முடிந்த கை யோடு ஜப்பானில் ஹைறக்கூனில் வைத்துக் கூறியுள்ளார்.

எத்தகைய அர்த்தத்தில் அவர் இப்படிச் சொன்னார்? தரப்படப் போகும் நன்கொடையை, கடனை நம்பியா?

நன்கொடைகளால் தூக்கி நிறுத்தப்படும் ஒரு விவகாரமாகத்தான் அவர் சமாதான முயற்சிகளைக் கருதுகிறாரா?

அதுவும்சமாதானத்தின் றிவேர்ஸ் கியரை சந்திரிகா வைத்துக் கொண்டிருக்கும் வரை நிதி உதவிகளால் சமாதானத்தை எவ்வளவு தூரத்துக்கு பொறியாமல் பாதுகாக்க முடியும்?

சிங்கள புத்திஜீவிகளில் சமாதானத்தை ஒப்பீட்டளவில் ஆதரித்து எழுதுபவர் ஜெகான்பெரேரா. தேசிய சமாதானக் கவுன்சிலின் பணிப்பாளரான இவர் கூறுகிறார் "ஆறாங்கட்டப் பேச்சுக் கள் ஜப்பானில் முடிவடைந்த நிலை யிலும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தடையாக இருப்பது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பே" என்று.

வாழ்க்கைச் செலவு எப்படி அதிகரித்தது? யுத்தச் செலவு கூடியபடியால் தானே? யுத்தச் செலவை நிறுத்தினால் தானே வாழ்க்கைச் செலவைக் கீழே கொண்டு வரலாம்? யுத்தச் செலவைக் குறைப்பதென்றால் சமாதானம் இனி றிவேர்ஸ் எடுக்காது என்றவொரு ஸ்திர நிலை தோன்றவேண்டும்.

> **'பேராசிரியர் பீரிஸ் கூறுகிறார் சமாதான முன்னெடுப்புக்களில்திரும்பிச்செல்லல் இல்லை'என்று.அதாவது *Irreversible*. இதைஅவர் ஆறாங்கட்டப் பேச்சுக்கள் முடிந்தகையோடுஜப்பானில் ஹைறக்கூனில் வைத்துக்கூறியுள்ளார்.**

இது நன்கொடைகள் மூலமோ அல்லது பேரரசுகளின் நிர்ப்பந்தங்கள் மூலமோ உருவாகும் ஒன்றல்ல. மாறாக இது தானாக மலர வேண்டிய ஒரு மன மாற்றம். தமிழர்களோடு சேர்ந்து இச்சிறு தீவைப் பங்கிடத் தயாரான ஒரு உன்னதமான மனோநிலை.

வெளிநாட்டுக் காசு வந்து அதை உருவாக்கி விடாது. அல்லது வெளி நிர்ப்பந்தங்களாலும் அதை உருவாக்க முடியாது. அப்படி உருவாக்கப்படும் சமாதானம் ஒரு பொறியைப் போன்றது. அது யுத்தத்தின் கருக்களை தன்னுள் கொண்டிருக்கும் ஒரு சமாதானப் போலியாயிருக்கும்.

ஆனால் கடந்த ஓராண்டு கால யுத்தநிறுத்த அனுபவத்திலிருந்து சிங்களவர்கள் கற்றுக்கொண்ட விசயங்களை விடவும் மறந்து விட்ட விசயங்களே அதிகம் போல தோன்றுகிறது.

யுத்தநிறுத்தத்தின் ருசி தெரிந்த பிறகும் அவர்கள் சமஷ்ரியை எதிர்ப்பது இதைத்தான் காட்டுகிறது. யுத்தம் இல்லை என்றதும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு பெரிதாகத் தெரிகிறது.

கடந்த சுமார் இரு தசாப்த காலமாக கடன்பட்டுச் செய்த யுத்தத்தால் வாழ்க்கைச் செலவு படு வேகமாக உயர்ந்து வந்துள்ளது.

யுத்தச் சூழலில் அதை யுத்தத்தின் பெயரால் நியாயப்படுத்துவதும், யுத்தத்தைக்காட்டி சிங்களவரின் அதிருப் தியை யேதிசை திருப்புவதும் இதற்கு முன்பிருந்த எல்லா அரசாங்கங்களுக்கும் வசதியாக இருந்தது.

ஆனால் இப்பொழுது யுத்தநிறுத்தச் சூழலில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பது பற்றிய சிங்களவரின் கசப்பையும் வெறுப்பையும் திசைதிருப்ப அரசாங்கத்தால் முடியாமல் இருக்கிறது.

என்பதால் தான் இப்பொழுது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஜெகான் பெரேரா சொல்வது போல பயங்கரமான ஒரு பிரச்சினையாக மேலெழுந்துள்ளது. இதை ஜே.வி.பி யின் ஏனைய சமாதானத்தின் எதிரிகளும் சமயோசிதமாகக் கையாள்வது போல்தெரிகிறது.

அவர்களுக்குத் தேவை சமூகத்தில்எதன் பெயரிலாயும் இருக் கலாம் அதைத் தமிழர் களுக்கு எதிராக திசை திருப்புவது சுலபம்.யுத்த காலங்களில் இதை அரசாங்கங்கள் செய்தன. யுத்த நிறுத்த காலத்தில் இதை அரசாங்கம் செய்ய முடியாது.

ஆனால் சமாதானத்தின் எதிரிகள் செய்யலாம். ஏதோ ஒரு விதத்தில் அரசாங் கத்துக்கு எதிராக சனங்களைக் கிளப்பி விட்டால் சரி.

இதையிட்டு அரசாங்கம் மிகவும் முன்னெச்சரிக்கை உணர்வோடு இருப்பது போலத்தெரிகிறது.

சமாதானத்துக்கான நிதி எனப்படுவது தனிய தமிழர்களுக்கு மட்டுமல்ல அதாவது - வடக்கு கிழக்குக்கு மட்டுமல்ல. மாறாக, அது முழுத்தீவுக்கும் தான் என்று அரசாங்கம் கூறிவருகின்றது.

அதோடு மட்டும் நிற்காமல் உதவி வழங்கும் நாடுகளின் பிரதி நிதிகளையும் அவ்வாறு சொல்ல வைக்கிறது. இதை நிருபிக்கும் ஆகப் பிந்திய உதாரணங்கள் வருமாறு.

ஆறாங்கட்டப் பேச்சுக்களுக்கு முன்பு கெல்ஹெசன் வன்னிக்கு வந்திருந்தார். வன்னியில் அவர் புலிகளின் பிரதானிகளைச் சந்தித்த பின் தென்னிலங்கைக்குப் போனார். அங்கே பகிரங்கமாக நடந்த ஒரு வைபகத்தில் அவரும் கொழும்புக்கான நோர்வேத் தூதரும் கலந்து கொண்டார்கள். அதில் தெற்கு நெடுஞ்சாலையை அமைப் பதற்கான நோர்வேயின் நிதி உதவிகள் குறித்த ஆவணங்கள் கைமாறப்பட்டன. சுமார் 200 மில்லியன் டொலர்கள் பெறுமதி மிக்க நிதி உதவி அதில் வாக்களிக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

பகிரங்கமாக நடந்த இந்த வைபவத்தின் நோக்கம் நோர்வே சிங்களவர்களுக்கும் உதவுகிறது என்று சிங்களவர்களை நம்ப வைப்பதே.

இது போன்றதே ஆறாம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் ஜப்பானின் சிறப்புத் தூதுவர் அகாஷி அதில் கூறிய சில கருத்துக்களும்.

வடக்கு கிழக்குக்கு மட்டுமல்ல முழு இலங்கைத்தீவுக்கும் தான் நிதி உதவி என்ற தொனிப்பட அகாஷி அதில் கூறியிருந்தார்.

இதெல்லாம் தவிர்க்க வியலாதபடி சுமார் பதி னைந்து ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நினைவில் கொண்டு வருகின்றன.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய வேளையில் அதைக் குறித்து யாழ் பல் கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஒரு கருத் தமர்வு நடந்தது. அதில் இந்தியாவில் இருந்து வந்து கலந்து கொண்ட பேராசிரியர் பெரியார் தாசன் ஒரு சுவாரஸ்யமான விளக்கத்தைச் சொன்னார்.

"பெருவிரலில் உள்ள காயத் துக்கு மருந்து கேட்க அவர்கள் சின்னிவிரலில் உள்ள காயத்துக்கு மருந் தைத் தந்து விட்டு. அது மட்டுமல்ல எல்லா விரலுக்குமே ஏன் எல்லாவியாதிக்குமே இதுதான் மருந்து



என்று கூறுகிறார்கள்."

அன்று இலங்கை இந்திய ஒப்பந்தமும் கூட முழுத்தீவுக்குமான மாகாண சபைகளை உருவாக்குவது பற்றியே கூறியது.

இப்பொழுது சமாதானத்துக்கான நிதி உதவியின் போதும் அதேகதைதான் வேறு வடிவத்தில் வேறு நபர்களால் கூறப்படுகிறது.

சிங்களவர்களுக்கும் பிரச்சினைகள் உண்டுதான். ஆனால் அவற்றில் அதிகமானவை அவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தயாராக இல்லாத படியால் வந்தவைதான்.

யுத்தத்தால் சிதைந்து போயிருக்கும் தமிழர்களுக்கே உடனடியாக உதவி தேவை.

சிங்களவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது 'மனமாற்றம்.

இச் சிறு தீவை தமிழர் களோடு சேர்ந்து பங்கிடத் தயாரான மனமாற்றம்.

அந்த மனமாற்றம் நிகழ்ந்தால் தவிர சமாதானம் திரும்பிச் செல்லவியலாத ஒரு வளர்ச்சியடையப் போவதில்லை.

மாறாக, அந்த மனமாற்றம் நிகழாத ஒரு பின்னணியில், செய்யப்படும் எந்தவொரு நிதி உதவியும் சிங்கள வருக்கும்



சேர்த்துத்தான் என்று கூறுவது சிங்கள ஈகோவை (Ego) இன்னு மின்னும் வீங்கவைக்கும் ஒரு முயற்சியே.

அதாவது சமாதானத்தை றிவேர்சில் கொண்டு போகும் ஒரு முயற்சியே.

ஒவ்வோர் இதயத்திற்கும் தனியான சுமையும் வேதனையும் உண்டு. — வின்ஸ்ட்டன் சர்ச்சில

# மணற்புயலில் தீணறும் ஈராக் யுத்தம்




பல உலக நாடுகள் சாட்சிகளாக இருக்க ஈராக்கில் அக்கினி ஹோமம் அமெரிக்கா பெயரில் வளர்க்கப்படுகிறது. அமெரிக்கா தன்னுடைய நாகரீகமான பாணியில் காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இப்படி பலவாறாக அமெரிக்கா தொடுத்துள்ள தன்னிச்சையான யுத்தத்தை எடுத்துரைக்கலாம். உலக நாடுகள் பலவற்றிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களுக்கும், கண்டனங்களுக்கும் அமெரிக்கா என்ன பதில் கூறியுள்ளது? அதாவது நான் சனநாயக வழியில் நடக்க மாட்டேன். என்னுடைய தேசிய விளையாட்டு யுத்தம்தான் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளது. எதுவாக இருப்பினும் இந்த யுத்தம் மூலம் வெள்ளை மாளிகையில் கறுப்பு புள்ளிகள் தோன்றும் என்பது மட்டும் நிச்சயம்.

தான்தோன்றித்தனமாக ஆக்கிரமிப்புச் செய்வதை தடுப்பதற்காகவே அமைக்கப்பட்ட ஐக்கியநாடுகள் சபையின் நிலை கேலிக்குரியது. அதிலும் வீட்டோ அதிகாரம் என்பது சும்மா ஒரு வெட்டிப்பேச்சு மட்டும் தான் என்பதை உறுப்பு நாடுகள் நன்றாகவே உணர்ந்துள்ளன. ரஷ்யா,சீனா, பிரான்ஸ் போன்ற நாடுகள் சாதாரணமான எதிர்ப்புகளை காண்பிக்கும் போதும் பெரிதாக ஒன்றும் செய்யப் போவதில்லை. காரணம் இவையும் ஒரு புறத்தில் அமெரிக்காவின் கைப்பொம்மைகளே. சிலவேளை இவைகூட இந்த யுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து இருக்கக் கூடும். ஆனால் உள்நாட்டு எதிர்ப்பலைகளே அதனைத் தடுத்தது எனலாம்.

இத்தனைக்கும் இந்த யுத்தத்தில் பிரிட்டனின் பங்கு குறித்து எவரும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் பிரிட்டனும் அமெரிக்காவும் இரத்த உறவுகள். பிரிட்டனில் இருந்து சென்று குடியேறியவர்களே அமெரிக்கர்கள் ஆவர். என்றாலும் கூட பிரிட்டனின் பிரதமர் ரொனிபிளேயர் சில வாரங்களுக்கு முன் சிக்கலுக்குள் மாட்டியிருந்தார். இதன் தாக்கத்தால் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் இருந்து பிரிட்டன் விலக வேண்டிய நிலை கூட காணப்பட்டது. எனினும் பின்னர் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட யுத்தத்திற்கு எதிரான பிரேரணை தோல்வியடைந்ததன் மூலம் பிளேயர் சட்டபூர்வமாக யுத்தத்திற்கு அங்கீகாரம் பெற்றுள்ளார் எனலாம். இது ஒரு புறம் இருக்க ஐக்கிய நாடுகள் சபையின் வீட்டோ அதிகார நாடுகளால் ஏன் இந்த யுத்தத்தை தடுக்க முடியாமல் போனது? ஒவ்வொரு உறுப்பு நாடும் ஏதோ ஒருவகையில் அமெரிக்காவிடம் தங்கியுள்ளது. அதாவது சுருக்கமாகக் கூறினால் வீட்டோ அதிகாரம் என்பது அமெரிக்காவின் செயற்பாடுகளுக்குரியதல்ல என்பதாகும்.





இந்த யுத்தத்திற்கு அமெரிக்கா கூறியுள்ள காரணம் நகைச்சுவைக்குரியது. அணுவாயுத பரவல், இரசாயன ஆயுத பரவல் விடயத்தில் அமெரிக்கா வித்தியாசமான போக்கைக்

**ஆர்.ஜீ.ஜெயமயூரன்**

கடைப்பிடிக்கின்றது. உண்மையில் அமெரிக்கா என்பது அணு குண்டுகளின் உறைவிடம். அத்துடன் பென்ரகனின் இரசாயன ஆயுதங்கள் தொடர்பாக அடிக்கடி பத்திரிகைகளில் கிசுகிசுக்கப்படுகிறது. இப்படியாக அணு குண்டுகளின் மேலே ஏறிநின்று கொண்டு ஜோர்ஜ்புஷ் ஈராக் விடயத்தை அணுகுவது



வியப்பிற்குரியது. அப்படியாக ஒரு நாடு ஆயுத விதிகளை மீறுவதாக இருந்தால் கூட அது ஐ.நா. சபையின் ஊடாகவே அணுகப்பட வேண்டும். அதிலும் ஈராக் என்பது சகல வரையறைகளையும் உள்ளடக்கிய ஒரு சுதந்திரநாடு. அமெரிக்காவைப் போல சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஈராக்கும் செய்ய முடியும். ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்பு மாத்திரம் கருத்தில் கொள்ளும் ஜோர்ஜ் ஈராக்கின் பாதுகாப்பை புறக்கணிக்க பார்க்கின்றாரா? அப்படியாக ஈராக் உண்மையில் சட்டவிரோத ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டால் அது தொடர்பாக ஐ.நா சபையில் தீர்மானம் நிறை[illegible]பட்டு அதற்குரிய அங்கீகாரம் கிடைத்த பின்பே ஆயுதகளைவு தொடர்பாக சிந்திக்க முடியும். ஆனால் அமெரிக்காவின் வேகமான செயற்பாடுகள் உலக நாடுகளை எரிச்சலூட்டும் வகையிலேயே அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத பரிசோதகர்கள் ஈராக்கை சல்லடை போட்ட பின் சட்டவிரோத ஆயுதத்திற்கான அறிகுறி தொடர்பான ஆதாரங்கள் எதுவுமில்லை எனத் தெளிவாக கூறியுள்ளனர். ஆனால் எதையும் ஏற்றுக் கொள்ள அமெரிக்கா தயாராக இல்லை. யுத்தத்திற்கான காரணத்தை தேடுவதிலேயே முனைப்பாக இருந்தது. அதன் ஒரு அங்கமே சதாம் ஹுசைன் தொடர்பாக புஷ் வெளியிட்ட ஒரு குறிப்பு ஆகும். அதாவது சதாம் ஒரு நாகரிகமற்றவர் என்றும் அவரால் அந்த நாட்டு மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இது சதாமுக்கும் ஜோர்ஜ்புஷ் சிற்கும் இடையில் தனிப்பட்ட தகராறு இருக்குமோ



என சந்தேகிக்க வைக்கிறது. ஈராக்கிய மக்களின் பெரும் செல்வாக்கை பெற்ற சதாம் ஹுசைன் தொடர்பாக புஷ்சிற்கு வந்த கவலை என்னவென்று தெரியவில்லை.

ஈராக் அரசாங்கம் போரைத்தவிர்க்க பல வழிகளிலும் முயன்றுள்ளது. ஐ.நா பரிசோதகர்கள் தொடர்பான இறுக்கமான கொள்கைகளை தளர்த்தியமையும் அவர்களுக்கு ஈராக் வழங்கிய ஒத்துழைப்பும் இதனை தெளிவாக்குகின்றது. அதேவேளை அமெரிக்கா போருக்கான இறுதிச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் விசித்திரமான நிபந்தனையை முன்வைத்தது. சதாமும் அவர் புதல்வர்களும் ஈராக்கைவிட்டு 48 மணிநேரத்தில் வெளியேற வேண்டும் என்பதே அந்த நிபந்தனை ஆகும். இதனை எந்த ஒரு நாட்டின் குடிமகனும் ஏற்றுக்கொள்வாரா?



இதையே சந்தர்ப்பமாக பாவித்து அமெரிக்கா யுத்தத்தை ஆரம்பித்துள்ளது. எனினும் இந்த போரிற்கான உண்மைக் காரணங்கள் யாவை?

* ஈராக் எண்ணை வளத்தில் செல்வாக்கை ஏற்படுத்தல்.

*அமெரிக்க சார்புடைய புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தல் மூலம் பிராந்திய வல்லாதிக்கத்தை உருவாக்கல்

* நவீன ஆயுதங்களின் பரிசோதனைக் களமாக ஈராக்கை பாவிக்க முயற்சித்தல்.

ஈராக்கில் உருவாக்கப்பட இருக்கும் புதிய அரசாங்கம் பற்றி அடிக்கடி புஷ் கூறியுள்ளார். இந்த புதிய அரசு நிச்சயமாக அமெரிக்காவின் பொம்மை அரசாகவே செயற்படும் இதன் மூலம் மறைமுகமான பிராந்திய ஆதிக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா முயல்கின்றது. வளைகுடா பிராந்தியத்தில் அநேகநாடுகள் அமெரிக்காவிற்கு நட்புறவுடையவை. ஈராக் மாத்திரம் தான் அரசியல் ரீதியில் அடிபணியாமல் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நவீன ஆயுதங்களை சதாரணமாக பரிசோதனை செய்வதில் ஏற்படும் பிராந்திய சிக்கலை இந்த யுத்தம் மூலம் தவிர்த்து விடலாம். ஆனால் கொல்லப்படப்போவது அப்பாவி ஈராக்கிய மக்களே. இதனை போர் வெறிபிடித்துள்ள ஜோர்ஜ் புஷ் உணர்ந்துகொள்ள நியாயமில்லை. ஆப்கான் யுத்தம் மூலம் உண்மையான குற்றவாளியான ஒசாமா பின்லேடனை அமெரிக்க படைகளால் பிடிக்க முடிந்ததா? ஆனால் புதிதாக பல அகதி முகாம்களையே அப்படைகளால் ஏற்படுத்த முடிந்தது.

இந்தப் போரினால் பல நாடுகளிலும் வீசப்போகும் எதிர் புயல்களைத் தணிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா முன்னரே இறங்கிவிட்டது. துருக்கிக்கு வழங்கப்போகும் பெருந்தொகை நிதி இதற்குரிய உதாரணமாகும். அத்துடன் இலங்கைக்கு வழங்கப்பட இருக்கும் ஆழ்கடல் கண்காணிப்பு கலமும் அதன் உத்தியாகவே இருக்க வேண்டும். இலங்கையும் அதற்குரிய நன்றியுணர்வை காட்டத் தொடங்கிவிட்டது. அதன் ஒரு அங்கமே அமெரிக்க தூது வராலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள பிரஜைகள் தமது மனச்சாட்சிப் படி கண்டனங்கள், ஆர்ப் பாட்டங்களை வெளிப்படுத்தும் உரிமைகளை கொண்டிருக்கும் போது ஆர்ப்பாட்டங்களை தடைசெய்யும் இலங்கை அரசின் நடவடிக்கை ஒரு நன்றியுணர்வு தான்.

மேலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு யப்பானில் நடப்பதற்கு முன்பாக அமெரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முன்னோடி மாநாடு மூலம் அமெரிக்கா தன்னை ஜென்டில்மேன் ஆக பிரகடனம் செய்கிறது. அதாவது சினிமாவில் வரும் கதாநாயகன் வில்லன்களுடன் போரிடும் அதேவேளை தன் காதலியுடன் டூயட் பாடாமல் இருந்ததில்லை. அதேபோல என்ன தான் யுத்தம் என்றாலும் உலக விவகாரத்தை ஒதுக்க மாட்டேன் என அமெரிக்கா கூறுகிறது. இதன் மூலம் பெரும்பாலான நாடுகளை திசை திருப்பி விடலாம் என அமெரிக்கா நம்புகின்றது.

அத்துடன் பெரும்பாலான உலக நாடுகள் எதிர்ப்பை காட்டும் போது குவைத், துருக்கி போன்ற ஈராக்கின் அயல் முஸ்லிம் நாடுகளின் போருக்கான ஆதரவு என்பது கவலைக்குரியது. இந்த நாடுகள் என்ன தான் அமெரிக்காவால் விலைக்கு வாங்கப்பட்டாலும் அவற்றின் இனஉணர்வு இல்லாமல் போனது சோகமான விடயமே.

(15ம் பக்கம்பார்க்க)

# நறுக்கென...

## ஜே.வி. பியினரின் அரசியல் கண்ணீர்



"அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை கடவுளாகக் கருதி பிரதமர் ரணிலும் அவரது அமைச்சர்களும் மண்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே ஈராக் மீதான தாக்குதல் குறித்து மௌனமாக இருக்கிறார்கள்.'' என்று அரசை சாடியிருப்பவர் வேறுயாருமல்ல அந்த பெருங்குரலெடுத்து பேசிவரும் ஜே.வி.பியின் விமல் வீரவன்சதான்..

ஈராக் மக்கள் மீது அவர்காட்டும் அக்கறையை வரவேற்கத்தான் வேண்டும். ஆனால் இது ஒரு உளப்பூர்வமான, உணர்வுபூர்வமான அக்கறையாக இருக்குமா என்பது தான் சந்தேகம்.

தங்களின் சொந்த நாட்டிலேயே தங்களின் சொந்த மக்களையே விடுதலையென்ற பேரில் ஆயிரக்கணக்கில் பழிவாங்கும் வெறியுடன் கொலைசெய்து குற்றுயிராக ரயர் போட்டு நடுத்தெருவில் வைத்து எரித்து, கங்கைகளில் தள்ளி மிதக்க விட்ட கலாச்சார பாரம்பரியப் பெருமையைக் கொண்ட இந்த புரட்டு(சி?) வாதிகளின் ஈராக் மக்களுக்கான ஒப்பாரியை எப்படி நம்புவதாம்?

இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் இங்கு நிலை கொண்டிருந்தபோது பெரும் தேசபக்தர்களாக தம்மை இனம்காட்டி அவர்களை எதிர்த்து அறிக்கைவிட்டவர்கள், இந்தியப் பொருட்களை வீதிகளில் போட்டு எரித்து அவற்றின் விற்பனையைத் தடுத்தவர்கள், இன்று இந்தியாவின் நிழலைத்தேடி ஒண்டிக்கொண்டு சமாதானத்திற்கு எதிராக குரலெழுப்பிக்கொண்டு சந்திரிகாவின் அனுசணையுடன் மீண்டும் போர்ச் சூழலை ஏற்படுத்தி தமிழ்மக்களை ஒடுக்க நினைப்பவர்கள் எங்கோ உள்ள ஈராக் மக்களுக்காக அரசு குரல் கொடுக்கவில்லை என்று கண்டனம் தெரிவிப்பது தான் வேடிக்கையாக உள்ளது...

ஒருவேளை ஆரம்பத்திலேயே ரணில் அரசு ஈராக்கிற்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருந்தால் நிச்சயமாக இவர்கள் அமெரிக்காவின் செயலை நியாயப்படுத்தியே அறிக்கை விட்டிருப்பார்கள்...

பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேலை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த இவர்கள், தமிழர்களை அழிக்க இஸ்ரேலின் இராணுவ ஆலோசனைகளையும் ஆயுத உபகரணங்களையும் சிறிலங்காவின் அரசுகள் பெற்றுக்கொண்டபோது மௌனம் காத்தார்கள்.

அமெரிக்கா சிறிலங்காவுக்கு வழங்கவுள்ள கடற்படைக்கான கப்பல் 1960 ஆம் ஆண்டில் தயாரித்தது என்று குமுறும் வீரவன்ச... அது 2001இல் உருவாக்கப்பட்டதாக இருந்தால் வரவேற்கலாம் என்றும் இக்கப்பலில் ஒரு உலங்கு வானூர்தி மட்டுமே தரித்து நின்று செயற்பட முடியும் என்றும் குறைப்பட்டும் உள்ளார்.

"ஈராக்கிற்கு அமெரிக்கா தாக்கினால் அதனைக்கண்டிக்க வேண்டும். தமிழர்களை தாக்க அமெரிக்கா அதிநவீன கப்பல்கள், ஆயுதங்களைத் தந்தால் அதனை வரவேற்க வேண்டும்..'' இது தான் ஜே.வி.பி. யினரின் அரசியற் கோட்பாடு....

அதுவும் புரட்சிகர அரசியற் கோட்பாடு ...

சிவப்பு நிறத்திற்கே அவமானம்!

## திஸ்ஸவிதாரணவுக்கு ஒரு கேள்வி!



"அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ்சும், பிரிட்டிஸ் பிரதமர் ரொனிபிளேயரும் யுத்த கிரிமினல்கள்'' இவ்வாறு பொதுசன ஐக்கியமுன்னணியின் பேச்சாளர் திஸ்ஸவிதாரண கடுமையாகக் கண்டித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் கருத்துக்களையும், ஐக்கியநாடுகள் சபையின் ஆலோசனைகளையும் புறக்கணித்து விட்டு ஈராக்மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும் அமெரிக்கா-பிரிட்டிஸ் தலைமைகளின் போக்கினை தீவிரமாக விமர்சித்த பொ.ஐ. முன்னணிப் பேச்சாளர் இந்த யுத்தத்தை மனிதாபிமானத்திற்கு எதிரான யுத்தம் என்றும் வர்ணித்ததுடன் ஈராக்மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்கப்படைகளுக்கு இலங்கை அரசாங்கம் எத்தகைய உதவிகளையோ,ஒத்துழைப்புகளையோ வழங்கக்கூடாது என்றும் கூறினார்.

'இலங்கையில் அமெரிக்க விமானங்கள் தரித்துச் செல்வதற்கோ, எரிபொருள் நிரப்புவதற்கோ அல்லது வான்பரப்பை பயன்படுத்துவதற்கோ அனுமதிவழங்கக் கூடாது' என்று அவர் கூறியுள்ளார்.

நல்லது திஸ்ஸவிதாரண அவர்களே...

புஷ்சும், பிளேயரும் யுத்தக்கிரிமினல்கள் என்றால் உங்களின் அதிமேன்மை மிகுசனாதிபதி சந்திரிகாவும், அவரின் அருமை மாமனாரும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் இருப்பவரும் புகழ் பெற்ற முன்னாள்பிரதிப்பாது காப்பு அமைச்சருமான அனுருத்தரத்வத்தையையும் எந்தவகையான கிரிமினல்களாக கருதப்போகின்றீர்கள்.

தமிழினத்தையே அழித்தொழிக்க பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் என்ற பெயரில் பல ஆண்டுகளாக காட்டுமிராண்டித்தனமான மனித உணர்வுகளுக்கு எவ்வித மதிப்பும் அழிக்காத, அநாகரிகமான ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்ட கைங்கரியத்தை மேற்கொண்ட இவர்களுக்கு நீங்கள் என்ன பட்டம் சூட்டப்போகின்றீர்கள். இதே...உங்களால் யுத்தக்கிரிமினல்கள் என வர்ணிக்கப்படும் புஷ் மற்றும் பிளேயரின் அனுசரணையுடனும் இராணுவ ஆயுத உதவிகளுடனும் தானே உங்களின் அதியுத்தம சனாதிபதி தனது ஆட்சி அதிகாரஆணவபலத்தை தமிழ் மக்கள் மீது காட்டினார். அது உங்களின்கண்களுக்கு 'கிரிமினல்' நடவடிக்கையாகத் தெரியவில்லையா?

வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி, பூவும் பிஞ்சுமாக தமிழர்களைக் கொன்றழிக்கையில் உங்களின் கிரிமினல்களை இனம்கண்டு குமுறும் இதயத்தை எங்கே அடைவுவைத்திருந்தீர்கள்?

சொல்லமுடியுமா மிஸ்டர் திஸ்ஸவிதாரண!

செங்குட்டுவன்

## மதவடி மயிலர்



**செய்தி:-** ஆனந்தசங்கரியின் கூற்று கூட்டமைப்புக்கு முரணானது. இதனைக் கூட்டமைப்பு ஒருபோதும் வரவேற் காதுஎன்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரா

**மயிலர்:-** சங்கரியார் சங்கதியே இப்படித்தான். கன்னாபின்னா என்று அறிவிக்கைவிடுவதும், தான் அப்படிச் சொன்னதை இப்படி மாற்றிவிட்டார்கள் என்று மறுப்பதும் அவரது சுபாவம்... உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் கூட்டணி தனித்தே போட்டியிடும் என்பதும் விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என தாம் ஒருபோதும் கூறவில்லையென்பதும் அவர் இன்னமும் அரசியலில் சுயாதீனமாக, கருத்து நிலைப்பாட்டில் உறுதியாக இல்லை என்பதையே காட்டுகிறது. தமிழினத்தை சங்காரம் செய்ய நிற்பவர்களோடு சங்கரியாரும் சேர்ந்து சங்கீதம்பாட நினைக்கிறாரோ...

**செய்தி:-** இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பிக்குள் இழுபறி.

**மயிலர்:-** அவையின்றை இப்பத்தைய அரசியலுக்கு இனப்பிரச்சினைதான் அடித்தளம். அதுவும் தீர்ந்து போனா... அல்லது தீர்வுகாண முயற்சிஎடுத்தா... அவை எதைப் பற்றியாம் மேடையில் கொக்கரிப்பது? தீர்வு காணும் விடயத்திலைதான் இழுபறியே யொழிய தமிழரை தீர்த்துக் கட்டிறதென்றால் இருதரப்பும் ஒற்றுமைதான் பாருங்கோ... சுதந்திரமும்... விடுதலையும், ஐக்கியமும் இவையின்ர கட்சிகளின்ர பெயரிலைமட்டும்தான் இருக்கு... மற்றப்படி ஒரே பிணக்குப்பாடும்... முரண்பாடும் தான்... நாட்டாமைக்காரர்நாத்தம் நாலு நாளிலை தெரியும் பாருங்கோ....!

**செய்தி:-** விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ரின்மீன் இறக்குமதிக்கு அரசு அனுமதி.

**மயிலர்:-** இருபது வருஷத்துக்கு முந்தி ஆனந்த விகடன் மணியன் எங்கட மாமனிதர் சிரித்திரன் சுந்தரத்திடம் இலங்கையைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது, அவர் நாலுபக்கமும் கடலால் சூழப்பட்ட நாடு ரின்மீன் இறக்குமதி செய்கிறது... அவ்வளவுதான் சொல்லமுடியும் என்றார். மணியன் அதிர்ந்து போய்விட்டார்... இன்னும் அந்த நிலைதான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கோ!

**செய்தி:-** இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தபின் முதற்தடவையாக அமெரிக்கா தலைமையிலான படைகள் கடும் பதிலடியை எதிர்கொள்ளுகின்றன. போர் அதிக காலம் நீடிக்கும் அபாயம்; இடைவிடாது தொடரும் வான் மற்றும் ஏவுகணைத்தாக்குதல்கள்...

**மயிலர்:-**அப்பன் புஷ் எட்டடி பாய நினைச்சால்... இப்ப மகன் புஷ் பதினாறடி பாயநினைத்து பாலைவனத்தில் இறங்கியுள்ளார்... விமானம் மட்டும் இல்லாட்டி மானம் எப்பவோ ஏவுகணை ஏறியிருக்கும்... அயலவன் பேச்சை மதிக்காது அடுத்தவன் வேலிக்குள்ள காலை வைக்க நினைத்தால் அசிங்கப்படத்தான் வேணும்... மூண்டு நாள்ள போர் முடியும் எண்டவை இப்ப மூண்டு மாதத்திலையும் முடியுமோ எண்டு சொல்ல முடியாமல் முழுசத் தொடங்கிட்டினம்...

## புஷ்ஷின் அறிவுறுத்தல் ஊருக்கு உபதேசம்....



போர்க்கைதிகளை ஈராக் ஜெனீவா உடன்படிக்கையின் பிரகாரம் கௌவரவமாக நடத்த வேண்டும். இல்லையேல் கடும்நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். இது அமெரிக்க சனாதிபதி புஷ் அவர்கள் ஈராக்கிற்கு விடுத்துள்ள எச்சரிக்கையில் ஒரு பகுதி.

அமெரிக்க இராணுவத்தினர் அல்லது கூட்டுநாடுகளின் படையினர் ஈராக்படையினரால் பிடிக்கப்பட்டுள்ளனர், பலர் சரணடைந்தும் உள்ளனர் என ஈராக் மற்றும் சில மத்தியகிழக்கு நாடுகளின் செய்தி ஊடகங்கள் தெரிவித்தபோது அமெரிக்கா அதனை நிராகரித்தது, மறுத்தது சில படையினர் காணாமல் போயுள்ளனர் என்று மட்டும் சிறிலங்கா பாணியில் தெரிவித்தது.

ஆனால் கைதானவர்கள் தொலைக்காட்சி அறிவிப்புகளில் தோற்றம் காட்டியபோது புஷ் அதிர்ச்சியடைந்ததாகவும், குழப்பமடைந்ததாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

போர் என்று வந்து விட்டால் கைதாகுதல் சரணடைதல் எல்லாம் இயல்பான நிகழ்வுகளே... அமெரிக்கப்படையினர் மட்டும் இதற்கு விதிவிலக்காக முடியாது. போர்க் கைதிகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைகள் பல விதிகளை வகுத்திருந்தாலும் அதனை உலக நாடுகள் ஒப்புக்கொண்டிருந்தாலும் எல்லா நாடுகளுமே விதி முறைகளை நாணயமாக அனுசரித்து நடக்கின்றனவா என்பது கேள்விக்குறியானவிடயமே...

சரி,ஜெனீவா உடன் படிக்கைகளை, ஐ.நா சாசனத்தை எல்லாநாடுகளும் மதித்தா நடக்கின்றன.?

மதித்து நடப்பதானால் இவ்வளவு பிரச்சினைகள், குழப்பங்கள், கலவரங்கள் போர்கள் உலகில் ஏற்படக்காரணம் தான் என்ன?

விதிமுறைகள் எழுத்திலும் பேச்சிலும்தானேயொழியநடை முறையில் இல்லை என்பதே யதார்த்தம்.

சரி ஜெனீவா உடன் படிக்கையை- ஐ.நா. சாசனத்தை, அமெரிக்காவோ, பிரிட்டனோ ஈராக்கோ மதித்து நடந்திருந்தால் இந்தப்போரே நடக்க வாய்ப் பிருந்திருக்காதே...

ஐ.நா.வை புறந்தள்ளிவிட்டுத்தானே, புஷ் அவர்களே நீங்கள் ஈராக் மீதான யுத்தத்தை, சுயாதீனமாகப் பிரகடனம்செய்து நடத்துகின்றீர்கள்! இந்த விடயத்தில் ஐ.நா. சபையை செயலற்ற அமைப்பாக்கிய நீங்கள் ஜெனீவா உடன்படிக்கையை ஈராக் கடைப்பிடிக்க வேண்டும் என்றால் எவர்தான் உங்கள் பேச்சை மதிப்பார்கள்...?

'எனக்கல்ல உபதேசம்... ஊருக்குத்தான்....' என்ற கருத்து சரியாகத்தான் இருக்கிறது... புஷ் விடயத்திலும் கூட...

# UTHR-J என்பவர்கள் யார்?

ஐ.தே.மு. அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னுள்ள காலப் பகுதிகளில் தென்னிலங்கை ஆங்கிலப்பத்திரிகைகளின் மனித உரிமைகள் மீறல் தொடர்பான 30க்கு மேற்பட்ட முழுப்பக்க அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஒப்பந்தத்துக்குப்பின் ஏனைய பத்திரிகைகள் இந்த அறிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளத் தீவிர இனவாத பத்திரிகையான ஐலன்ட் மட்டும் தொடர்ந்து இந்த அறிக்கைகளை வெளியிட்டு வந்தது. இந்த அறிக்கைகளில் முஸ்லிம் மக்களை யாழில் இருந்து வெளியேற்றியதிலிருந்து நிகழ்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் சிறுவர்களை படையில் சேர்த்தல் வரையான விடயங்கள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் திரும்பத்திரும்ப அரைக்கப்பட்டிருக்கும். இந்த அறிக்கைகளின் நடுநிலைத்தன்மையை நிலைநாட்டும் முயற்சியில் அரசினாலும் அதன் ஆயுதப் படைகளாலும் இழைக்கப்படும் சில மனித உரிமை மீறல்களும் கறிவேப்பிலை போல் கலந்திருக்கும்.

பல்கலைக்கழகத்துப் புத்திஜீவிகள் தரும் அறிக்கை என்பதால் சர்வதேச அமைப்புகளால் ஆரம்பகாலத்தில் கவனத்திலெடுக்கப்பட்டதோடு, அந்த அறிக்கைகளில் காணப்படும் விடயங்களை மேற்கோள் காட்டி புலிகள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்த அண்மைக் காலங்களில் முயற்சி செய்பவர்களில் முதலிடம் சனாதிபதி சந்திரிகாவுக்கு உண்டு. 02.06.2002 சண்டேலீடர் பத்திரிகையில் ஒரு வாசகர் சுவாரஸ்யமான ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார்.

UTHR - J வெளியிடும் அறிக்கைகளில் இந்தத் தீவில் தற்போது இடம்பெறும் முரண்பாடுகள் பற்றிய உருத்திரிக்கப்பட்ட செய்திகளைக் காண்கிறோம். இந்தUTHR - J என்பது என்ன? பதிவு செய்யப்பட்ட சங்கமா? அவர்கள் யாரை பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்? அவர்களுடைய இலக்குகள் என்ன? இதில் தற்போதுள்ள உறுப்பினர்கள் யார்?

இவை எல்லாமே நியாயமான கேள்விகள் தான். ஏனென்றால் UTHR - J என்ற அமைப்பு IPKF இங்கிருந்து அகன்றதோடு கலைக்கப்பட்டுவிட்டது!

UTHR அமைப்பு JVP இன் 2வது எழுச்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சிறியானந்த அதன் தலைவராக இருந்தார். யாழ்/பல்கலைக் கழகஉபவேந்தர் பேராசிரியர் துரைராஜா அதன் இணைத் தலைவர் ஆக்கப்பட்டார். UTHR இன் யாழ்.கிளையான UTHR - J இல் IPKF இன் அட்டுளியங்களை எதிர்த்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் பேராசிரியர் துரைராஜாவின் கீழ் பெருமளவில் அணி திரண்டனர். UTHR இன் செயற்படும் கிளையாக UTHR - J மட்டுமே இருந்தது.

1988 ஒக்ரோபரில் UTHR - J இன் செயற்பாடுகள் உச்சகட்டத்தை எட்டின. இக்காலப் பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்தின் 50 கல்விமான்கள் ஒப்பமிட்டு "மாயைகளைப் புறந்தள்ளுதல்" (LAYING ASIDE OF ILLUSIONS) என்ற அறிக்கையை இந்திய இராணுவக் கொடுமைகளை கண்டித்து வெளியிட்டனர்.

இந்த கல்விமான்களின் முன்னணியில், முன்னாள் பல்கலைக்கழக துணைவேந்தர் P. பாலசுந்தரம்பிள்ளை (புவியியல் பேராசிரியர்) V.K. கணேசலிங்கம் (விலங்கியல் பேராசிரியர்), S.V. பரமேஸ்வரன் (உடலியல் பேராசிரியர்) A.துரைராஜா (குடிசார் பொறியியல் பேராசிரியர்), A.சண்முகதாஸ் (தமிழ் மொழித் துறைப் பேராசிரியர்), ஆகியோர் உட்பட்ட பலர் செயற்பட்டனர்.

**வின்சென்ற் புலோருதஸ்**

90 களின் பிற்கூறுகளில் UTHR - J முடிவுக்கு வந்தது. மர்மமான பிரசுரங்கள், விசமத்தனமான அறிக்கைகள், பத்திரிகை அறிக்கைகள் தொடர்ந்தும் அதன் பெயரில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு கல்விமான்களைக் கொண்ட மனித உரிமைகள் பேணும் அமைப்பு இது என்று தென்னிலங்கை ஆங்கில தினசரி ஒன்று வர்ணித்திருந்தது. ஆனால் இந்த வட கிழக்கு பல்கலைக்கழகங்களின் முன்னணிக் கல்விமான்கள், தற்போதைய UTHR - J இதற்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கைகழுவி விட்டிருக்கின்றார்கள். உள் நோக்கங்கள் கொண்ட சிலரால் மதிப்புக்குரிய ஒரு பெயர் வசதியாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.




UTHR - J இற்கு ஒரு தபால் முகவரியோ, பதிவு செய்யப்பட்ட அலுவலகமோ இல்லை. சட்டபூர்வமான அமைப்பாகவும் அது இல்லை.

கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு முன் யுத்தம் தீவிரமாக இடம் பெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் தென்னிலங்கை தினசரி ஒன்றில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

"ஊடகவியலாளர்களோ, மனித உரிமை ஆர்வலர்களோ யாழ் செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரே விதிவிலக்காக UTHR - J இருக்கிறது. தகவல்களை நேரடியாகப் பெறும் வல்லமை அதற்கு இருக்கிறது போல் தோன்றுகிறது. UTHR - J க்கு உள்நோக்கம் ஏதோ இருக்கிறது. அது யாழில் இருந்து செயற்படுவதில்லை. தற்போதுள்ள முரண்பாடானது தமிழ், சிங்கள மக்களுக்கு இடையேயானதல்ல; புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயானது என்பதே அதன் நிலைப்பாடாக இருக்கிறது. UTHR - J இல் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் எவரும் இல்லை. மேற்படி நிலைப்பாட்டை நோக்கியதாகவே அதனுடைய தகவல்களும் தரவுகளும் வியாக்கியானப்படுத்தப்படுகின்றன."

1989 - 90களிலே இந்திய புலனாய்வு அமைப்பான "றோ" UTHR - J க்குள் நன்கு ஊடுருவி விட்டதாகவும், தனது நோக்கங்களுக்கு ஏற்ப UTHR - J யைக் கையாளமுயல்கிறது என்றும் வலுவான சந்தேகங்கள் எழுந்திருந்தன. இதற்கான சரியான பாதுகாப்பான அமைப்பை மூடிவிடும் முடிவு எடுக்கப்பட்டது.

UTHR - J க்குள்ளே 'றோ'வின் கையாளாக செயற்படத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர் பேராசிரியர் ரத்னஜீவன் H கூல் தான் என யாழ்பல்கலைக்கழக வட்டாரங்களில் பலமாக நம்பப்பட்டது. IPKF இற்கு எதிராக குரலெழுப்பியே திரு. ரத்னஜீவன் புகழ்பெற்றார். சோகமான விதத்தில், றோவினால் தெரிவு செய்யப்பட்டதாக கூறப்படும் அவருக்கு சிறிலங்காப் படைத்துறைப் புலனாய்வுப் பிரிவினருடன் ஒத்துழைப்பது ஒன்றும் கடினமானதாக இருந்திருக்காது என நம்பப்படுகிறது.

பேராசிரியர் கூல் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல்துறை விரிவுரையாளராக இருக்கிறார். வடகிழக் குக்கு அவர் வருவதில்லை என்றே கூறலாம். அவர் UTHR - J இன் பெயரால் வெளியிடுவதாக கூறப்படும் அறிக்கைகள் அவர் வடகிழக்கின் ஒவ்வொரு மூலையையும் அறிந்திருப்பதான தோற்றத்தையே தரும். ஆனால் அவர் எல்லாம் அறிந்தவரும் அல்ல. எங்கும் நிறைந்தவரும் அல்ல. சுருக்கமாக சொல்வதானால் அவர் புலனாய்வுச் சேவைகளால் ஆட்டுவிக்கப்படுகிறார் என்றே கூறப்படுகிறது. அண்மைக் காலமாக அவர் பெருக்கெடுக்க வைக்கும் அறிக்கைகள் சர்வதேச அமைப்புகளால் ஐயுறவோடு நோக்கப்படுகின்றன என்றே கருதப்படுகின்றது. இவரின் பின்னணியில் இவரது குடும்பத்தினரும் வடக்கின் புகழ்பெற்ற கவிஞர் ஒருவரின் புத்திர சிகாமணியும் வேறு பலரும் உள்ளதாகவும் வதந்திகள் உலாவுகின்றன. இவர்கள் தங்கள் பெயர்களுக்கு பின்னால் உள்ள எழுத்துக்களின் வலிமையை தங்கள் அறிக்கைகளை வலிமையாகப் பயன்படுத்துவது தான் சோகமாகும்.


இவர்களைப் பற்றி எண்ணும் பொழுது புகழ்பெற்ற உகண்டா நாட்டுக் கவிஞர் ஒகொட் பிற்ரெக்கின் "லாவினோவின் பாடலிலிருந்து" என்ற கவிதை வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

**"ஒக்ககொல் தன் தலையை**
**நூல்கள் என்ற காட்டில்**
**தொலைத்து விட்டார்....**
..............................
**வகுப்பறைகளில்வைத்து**
**அவர்களுடைய விதைகள்**
**பெரிய புத்தகங்களால்**
**நசுக்கப்பட்டுவிட்டன."**

---

# கைக்குள் இருக்கும் உலகம்

**பேரறிஞர்களும் ,மேதைகளும் ,பண்டிதர்களும், சிந்தனையாளர்களும் எம்முன் வானொலி வடிவிலும் நூல்கள் வடிவிலும் காத்துக் கிடக்கின்றனர்.**



நமக்காக இன்னுமோர் உலகம் காத்துக்கிடக்கின்றது. எம்முடன் தொட்டு உறவாட, எம்முடன் அன்போடும் கனிவோடும் பேசவும் எந்த நாளிலும் எந்த நேரத்திலும் எமை மகிழ்விக்கவும் எம் அறிவினை விருத்தி செய்யவும் வானொலி வடிவிலும் நூல்கள் வடிவிலும் எமக்காக எம்மில் பெரும்பாண்மையினர் நுழையாத இன்னுமோர் உலகம் காத்துக்கிடக்கின்றது. பேரறிஞர்களும், மேதைகளும், பண்டிதர்களும், சிந்தனையாளர்களும் எம் முன் வானொலி வடிவிலும், நூல்கள் வடிவிலும் காத்துக்கிடக்கின்றனர். அவற்றை நாம் ஆர்வத்துடன் நாடினால் நல்லறிவினைப் பெற்றிடலாம். நாம் நேரடியாகக் காணமுடியாத உரையாட முடியாத அறிவாளிகள் பலரின் கருத்துக்களை வானொலி நிகழ்வூடாக அறிவியல் நூல்கள் ஊடாக மிகச் சுலபமாகப் பெற்றுக் கொள்ளமுடிகிறது.

நல்ல நூல்களையும் செய்திகளையும் வாசிக்கும் போதே அவற்றை எமக்குத் தந்த பேரறிஞர்களுடன் நாம் உறவாடுகின்றோம்.

இன்று புகழ் பெற்ற நாட்டுத்தலைவர்கள் பலர் பல நூல்களாலும் செய்திகளாலும் பல நன்மைகளைப் பெற்றிருக்கின்றனர். உதாரணமாக ஆபிரகாம் லிங்கனை எடுத்துக்கொண்டால் அவர் அமெரிக்க சனாதிபதியாக வருவதற்கு அவரைத் தூண்டியது, ஜோஜ் வோசிங்டன் வீரவரலாற்றுப் புத்தகமுமே.


போர் நெருக்கடி மிகுந்த சூழலில் எம்மில் சிலரிற்கு வானொலி கேட்கும் வசதி இல்லாது இருந்திருக்கலாம். ஆனாலும் இலவசமாக நூல்களைப் படிக்க பொது நூலகங்கள் பல உள்ளனவே! அவற்றை பிரயோசனப்படுத்தலாம். அதனால் பெறும் பயன்கள் அளப்பெரியன.

'வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்.' நாம் வாசிக்க வாசிக்க எமது தேடல் விருத்தியடைந்துகொண்டேபோகும். 'தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசி இருக்கும்.' தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும்....' என்பது சினிமாப் பாடல் அடியாக இருந்தாலும் கூட மிக அற்புதமான உண்மையை அது விளக்கி நிற்கின்றது. எம் வாழ்வில் தேடல் என்பது அவசியம். அந்தத் தேடலுக்கான புதையல் வானொலி மூலமாகவும் நூல்கள் மூலமாகவும் அபரிதமாக எமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது.

எமக்குக் கிடைக்கும் நேரத்தில் சிறு பகுதியை நாம் நூல்கள் வாசிப்பதற்காயும் வானொலி கேட்பதற்காயும் ஒதுக்குவோம். பேரறிஞர்களிடமும் வரலாற்று நாயகர்களிடமும் தங்கு தடையின்றி நாம் உரையாடுவோம்.

எம் கையில் இருக்கும் புதையலைத் தேடிப்பார்ப்போம். திரவியம் பெறுவோம்.

**புனிதன்**



தொடர்கதை

அத்தியாயம் -03

# இடம் பெயர்ந்தவன்

ஆங்கில மூலம் பிளானறி ஓ' கொணரின்

தமிழில் சு.மகேந்திரன்

காா பார்வையிலிருந்து மறைந்ததும் சுற்றுப் பாதையால் மல்பரி மரததை திருமதி. சோட்லி அடைந்தாள். அந்த இரண்டு நீக்ரோக்களிடமிருந்து பத்து அடி பின்னால் நின்றாள். அங்கு நின்றவர்களில் கிழவனாக இருந்தவன் ஒரு வாளியில் அரைவாசி அளவுக்கு நிறைந்திருந்த கன்றுக் குட்டிகளுக்கான உணவை ஏந்தியபடி நின்றான். மஞ்சள் கலந்த நிறமுடைய இளைஞனான மற்றவனது தலை மரத்தாலான முயலைப்போல் இருந்தது 'சரிதான்' என சாவாதானமாக அவள் சொன்னாள் 'நீங்கள் அதிகநேரம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது'.

'நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்' என அஸ்ரர் கூறியது புதிய தகவல் ஒன்றை அவன் அவளுக்கு கூறுவது போல் இருந்தது 'யாரவர்கள்' என்றான் அஸ்ரர். கைகளை வீசிக்கொண்டு 'அவர்கள் கடல் கடந்து வந்துள்ளார்கள் இவர்களைத்தான் இடம் பெயர்ந்தவர்கள் எனச் சொல்வது' என திருமதி சோட்லி கூறினாள்.

'சரிதான் இடம்பெயர்ந்தவர்கள் என்றாள் என்ன அர்த்தம்?' என்றான் முதிய நீக்ரோ.

'பிறந்த இடத்தில் இல்லாமலும், போவதற்கு ஒரு இடமும் அற்ற நிலையில் உள்ளவர்களே இடம் பெயர்ந்தவர்கள். நானும் நீயும் எங்காவது ஓடி போகுமிடத்தில் எமக்கு ஒருவரும் இல்லை என்றால் எப்படியிருக்குமோ அதைப் போன்ற நிலையே அது' என விளக்கமாகக் கூறினாள் திருமதி. சோட்லி

'இருப்பினும் இப்போது அவர்கள் இங்குதானே இருக்கின்றனர்' என்று யோசனையுடன் கிழவன் கூறினான். 'அவர்கள் இங்கிருப்பதால் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றார்கள் தானே.'


'அது சரியானது தான்' என மற்றவனும் கூறினான் 'எப்படியும் அவர்கள் இப்போது இங்குள்ளனர்'

நீக்ரோக்களின் இவ்வகையான தர்க்கமற்ற பேச்சுக்கள் திருமதி சோட்லிக்கு எரிச்சலை ஊட்டுவது வழக்கம் 'அவர்கள் தங்களுக்குரிய இடத்தில் இப்போது இல்லை. மிகத் தூரத்தில் உள்ள அவர்களது சொந்த இடத்தில் எல்லாமே எந்தவித மாற்றத்துக்கும் உட்படாமல் இருக்கிறது. இங்கு அவர்களது இடத்தைவிட எல்லாமே மிகவும் நவீன மயமாகிவிட்டது. இப்போது நீங்கள் மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும்' எனத் தலையை ஆட்டியபடி கூறினாள். 'அவர்களின் ஒரு பில்லியன் வரை உள்ளதாக திருமதி. மக்கன்ரயர் கூறியிருக்கிறார்'

'வேறு என்ன சென்னாள்?' என்றான் நீக்ரோ இளைஞன்.

'இந்தக்காலத்தில் கறுப்பருக்கோ அல்லது வெள்ளையருக்கோ வேலை கிடைப்பது கடினமாக உள்ளது. திருமதி. மக்கன்ரயர் கூறியவற்றிலிருந்தே இவை எனக்கு விளங்குகின்றன' என ஒரு பாடலைப்பாடும் பாவனையில் சொன்னாள் திருமதி. சோட்லி

'நீ அவள் எதைச் சொன்னாலும் கேட்கக் கடமைப்பட்டுள்ளாய்' என கிழவன் குறிப்பிட்டுக் கூறினான்.அங்கிருந்து அகலப் போவது போல் முன்னே சென்று பின் தரித்து நின்றான்.



'போக்கிடமற்ற நீக்ரோக்கள் துன்பந்'ன் கடவுளிடம் தள்ளப்படப் போகிறார்கள் என்று அவள் சென்னாள்' என திருமதி. சோட்லி கணீரென்ற குரலில் கூறினாள். கிழவன் புறப்பட்டபடி 'அவள் இப்படித்தான் ஏதாவது ஒன்றை இடைவிட்டுவிட்டுக் கூறிக் கொண்டிருப்பாள்' என்றான்.

'ஆ......ஆ உண்மைதான்' என்றான் சல்க்.

'நீ மாட்டுத் தொழுவத்துக்குப் போய் திரு. சோட்லிக்கு ஏதாவது உதவி செய் அவள் உனக்கு எதற்காகக் கூலி கொடுக்கிறாள் என நினைக்கிறாய்' என திருமதி. சோட்லி சல்கிற்குக் கூறினாள் .

'அவர்தான் எனக்கு வேறொரு வேலை தந்து வெளியே அனுப்பியவர்' என்றான் சல்க். 'சரி அப்படியாயின் அதைச் செய் எனக் கூறிவிட்டு அவன் அங்கிருந்து நகரும்வரை அங்கேயே நின்றாள். மயிலின் தோகை அவளுக்கு நேரே இருந்தும் கூட அவள் அதனைக் கவனிக்கவில்லை. மரத்தில் ஏறிக்கொண்ட மயிலினது வால் கீழே தொங்கிக் கொண்டிருந்தது. அறிமுகமற்ற பற்பல கோள்களைப் போல் தோன்றிய கண்களைச் சுற்றி இருந்த பச்சை வண்ணத்திலான தோகை சூரிய ஒளிபட்டு ஒரு செக்கன் பொன்நிறத்திலும் மறு செக்கன் சால்மன்(Salmon) நிறத்திலும் ஜொலித்தது. இவற்றையெல்லாம் அவள், வெளிறிய பச்சை நிறமரங்களுக் கூடாகத் தெரிந்த ஆகாயத்தைப் பார்ப்பது போன்ற உணர்வுடனேயே பார்த்தாள் அவளது மனோராஜ்யம் வேறு வேலை ஒன்றைச் செய்து கொண்டிருந்தது. அதில் இடம் பெயர்ந்த பத்து மில்லியன் மக்களும் புதிய இடங்களுக்காக முட்டி மோதுவதும், தானொரு வீடு அளவிலான பெரிய சிறகுடைய பறவையாக மாறி நீக்ரோக்களை புதிய இடங்களை பார்க்கும்படி கூறிக் கொண்டிருப்பது போலவும் காட்சிகள் தோன்றின. அவள் மாட்டுத் தொழுவத்தின் பக்கமாகப் பார்த்தாள் அந்தக் காவிய வகையிலான கற்பனை அவளை மேலே தூக்கி நிறுத்தித்திருப்தியைக் கொடுத்தது.

அவள் குறுக்கு வழியால் நடந்தாள். இதனால் திரு. சோட்லி தன்னைக் காணும் முன்னரே கதவைப்பார்க்க அவளால் முடிந்தது திரு. சோட்லி தொழுவத்தின் வாயிலுக்கு அருகில் கட்டியிருந்த கறுப்பு வெள்ளை நிறமுடைய பெரிய மாட்டில் கடைசியாக பால்கறக்க இருந்ததால் அதன் அருகில் குந்தியபடி பால்கறக்கும் கருவியை அதற்குப் பொருத்திக் கொண்டிருந்தான். அவனது கீழ் உதட்டின் நடுவில் அரை அங்குல நீளமான சிகரெட் துண்டென்று ஒட்டிக் கொண்டிருந்தது.

'நீங்கள் தொழுவத்தில் புகைபிடிப்பதை கண்டாலோ அல்லது கேள்விப்பட்டாலோ உங்களை இரும்பை உருக்கி அடிப்பது போல் செய்து விடுவாள்' என்றாள் திருமதி. சோட்லி திரு. சோட்லியின் கன்னங்கள் இரண்டிலும் கழிவு நீர் வழிந்தோடியது நிரந்தரத் தழும்புகள் நிரம்பிய முகத்தை உயர்த்தி அவளை உற்றுப் பார்த்தான் சோட்லி சூட்டுப் புண்ணால் அவனது வாயில் இருபக்கங்களும் பிளந்திருந்தன. 'நீதான் இதுபற்றி அவளுக்குச் சொல்லப் போகிறாய் போல் உள்ளது.' என்றான் சோட்லி.

'சொந்தமாகவே மூக்கு ஒன்றும் அவளுக்கு இருக்கிறது' என்றாள் திருமதி. சோட்லி.

அவன் சிகரட் குறைத்துண்டை தனது நுனிவாயால் உயர்த்தி அதனை வாய்க்குள் எடுத்துக் கொண்டான். இதள்களை இறுக்கமாக மூடிக் கொண்டவன், மனைவிக்கு முழுமையாக மதிப்புக் கொடுக்கும் பார்வையுடன், இப்போதும் மெலிதாக எரியும் சிகரட் துண்டை புல்தரையில் துப்பினான். அவன் இந்த வித்தையை செய்த போது எந்தவித பிரத்தியேக கவனத்துடனும் செயற்படவில்லை.

'ஆ சான்சி என்றாள் திருமதி. சோட்லி.'கா கா' என்றவள் தனது கால் விரல்களால் ஒரு குழிசெய்து அதில் சிகரட் துண்டைப் போட்டு மூடினாள் அவன் அவளுக்கு அன்பு செய்யும் போதெல்லாம் இந்தவகையான விசமத்தையே செய்வது வழக்கம். காதல் செய்து முடித்தபின், அவளுக்கு கிற்றாரோ டிரம்ஸ்சோ அல்லது வேறு ஒரு அழகான பொருளோ என்றும் அவன் வாங்கி வந்ததில்லை.

தொடரும்....

# பன்முகம் _ 14

# அன்னை தெரேசா

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்டவர் அன்னை தெரேசா.

நாம் வாழுகின்ற காலத்திலேயே வாழ்ந்து நடமாடிய தெய்வம் இறை நம்பிக்கை, தாழ்ச்சி, தளராமை, பொறுமை, பகைவனையும் நேசிக்கும் பண்பு என்ற அனைத்துச் செல்வங்களையும் தன்னிடத்தே கொண்டிருந்தவர். அவருடைய எடுத்துக்காட்டான வாழ்க்கையில் இருந்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய எத்தனையோ விடயங்கள் உள்ளன


"உள்ளியதெல்லாம் உடனெய்தும்
உள்ளத்தால்
உள்ளான் வெகுளியெனின்"

என்கிறார் திருவள்ளுவர். உள்ளத்தாலும் ஒருவன் சினத்தினை நினையாதவனாக இருப்பானாகில் அவன் நினைத்தவை அனைத்தையும் பெற்றுக்கொள்வானாம். இந்தக் குறளுக்கு உதாரணமாக வாழ்ந்தவர் அன்னை தெரேசா.

"உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள், உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள், உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள், உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" என்று கூறிய இயேசு நாதரின் வார்த்தையை வாழ்வாகக்கொண்டவர்.

அன்னை தெரேசாவும், அவர் சபையின் உறுப்பினர் சகோதரிகளும் ஏழைமக்களுக்கு சேவை செய்வதற்காக வீடு வீடாகச் சென்று இரந்து நிற்பது வழக்கம். இது அவர்களின் பணியாகவும் இருந்தது.

இந்த வழக்கத்தின்படி ஒரு தனவந்தரிடம் சென்று ஏழைகளுக்காக தாம் செய்யும் பணிக்கு



உதவும்படி கையேந்தி நின்றார் அந்தத் தனவந்தர் என்ன மனநிலையில் இருந்தாரோ? அல்லது அன்னையின் தோற்றத்திலும் சேவையிலும் அவருக்கு நம்பிக்கையில்லையோ? ஆனால் அவர் மிகவும் முரட்டுத்தனமாக நடந்துவிட்டார். அன்னை இரப்பதற்கு அவரிடம் நீட்டிய உள்ளங்கையில் காறி உமிழ்ந்தார்.

அன்னை தெரேசாவின் முகத்தில் எதுவித அதிர்ச்சியோ, கவலையோ அவமானப்படுத்தப்பட்டதின் அறிகுறியோ தோன்றவில்லை, மேலும் மலர்ந்த முகத்துடன் "எனக்குரியதை இந்தக் கையில் கொடுத்து விட்டீர்கள், நன்றி. என் ஏழை மக்களுக்கு வேண்டியதை இந்தக்கையில் தாருங்கள்" என்று மறுகையையும் அவர் முன்னே நீட்டினார்.

காறி உமிழ்ந்து அவமானப்படுத்திய தனவந்தர் எதுவுமே பேசத் தோன்றாதவராக அன்னையின் முகத்தை வியப்புடன் பார்த்தார். சற்று நேரத்தில் அவர் முகத்தில் இருந்த வியப்புக்குறி மாறி சோகம் இழைந்தோடியது. இறுதியாக தனது சொத்தில் பெரும்பங்கையே அன்னையின் தொண்டு நிறுவனத்துக்கு எழுதி வைத்து விட்டார்.

அன்னை தெரேசாவின் சபையினால் கல்கத்தாவில் இறப்போருக்கான இல்லம் ஒன்று இயக்கப்பட்டுவருகின்றது. இந்த நிறுவனத்தின் பணி வீதியோரங்களில் நாதியற்றவர்களாய் கைவிடப்பட்டவர்களை அவர்கள் இனியும் சிலநாட்கள் மட்டுமே உயிர் வாழப் போகின்றவர்கள் என்பதை அறிந்திருந்தும் கூட அவர்களை அழைத்து வந்து பராமரித்து அவர்கள் இறந்ததின் பின்னர் அவர்களது ஈமக்கடமைகளைச்செய்வது.

அவர்கள் எந்தச் சமயத்தவர்களாயினும் சரி அவர்களது சமய அனுசாரங்களின் படியே ஈமக்கிரிகைகளைச் செய்வர். அன்னை தெரேசாவும் அவர் சபையும் கத்தோலிக்கம் சார்ந்து இருந்தும்கூட மனமற்ற சிந்தனைகள் சுயலாபநோக்கு எதுவுமின்றி இப் பணியை செய்வர். மனிதன் மனித மாண்புடன் மரிக்கவும், அவனுக்கு இறுதி மரியாதை செய்யப்படவும் வேண்டும் என்பதே இந்நிறுவனத் தின் நோக்கம்.

இறப்போருக்கான இந்த இல்லத்தின் வேலைகள் ஆரம்பித்த போது அன்னை தெரேசாவுக்கு பலத்த எதிர்ப்புகள் கிளம்பின. சமயம் மாற்றுவதற்கான இன்னுமொரு முயற்சி என்று விமர்சனங்கள் எழுந்தன. அந்நிலையத்துக்கு அண்மையிலே இருந்த காளிஅம்மன் கோவிலைச் சேர்ந்தவர்கள் கற்களால் எறிந்தும் கூட இடையூறு செய்தனர். ஆனால் அன்னையவர்களோ தனக்கேஉரிய பொறுமையுடன் அவரது சேவையை உணர்ந்த பெரியவர்கள், அதிகாரிகளின் ஆதரவுடன் நிலையத்தை கட்டி முடித்து தன்பணியை ஆரம்பித்து தொடர்ந்து வந்தார்.


சில வருடங்களின் பின் வீதியோரத்தில் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் மரணத்தை எதிர்நோக்கியபடி கிடந்த ஒரு நோயாளியை அன்னை அவர்களின் இல்லத்துக்குக் கொண்டு வந்தனர். அவரது இறுதிக்கட்டம். உயிர் பிரியப்போகும் அந்த வேளையில் அன்னை அவர்களை அருகே அழைத்து "என் வாழ்நாள் எல்லாம் அம்மனுக்குப் பூசை செய்வதின் பயனைப் பெற்று விட்டேன். அந்த அம்மனே எனது இந்த இறுதி நேரத்தில் உங்கள் வடிவில் எனக்குக் காட்சி தந்து கொண்டிருக்கிறார்." என்று கூறி உயிர் நீத்தார். அந்த நோயாளி வேறு யாருமல்ல இறப்போருக்கான இல்லம் ஆரம்பித்த காலத்தில் கல்லுகள் எறிந்து கலாட்டா செய்வித்த காளி கோவில் பூசாரியேதான்.

அன்னை தெரேசா இயேசு நாதரின் அடிமை தான் என்பதற்கு சாட்சியாகவும்.

"உள்ளிய தெல்லாம் உடனெய்தும்
உள்ளத்தால்
உள்ளான் வெகுளியெனின்"

என்ற பொய்யா மொழியாரின் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார் என்பதில் ஐயமில்லை.

[illegible]




# வேரின்கரம்

**ஆதிலட்சுமி சிவகுமார்**

சடசடவென்று செட்டைகளை அடித்தபடி ஏதோ கூரைக்கு மேலால் பறந்து போனது. அது தூரப் போகும்வரை செட்டை அடிக்கும் சத்தம் கேட்டது. பின் தேய்ந்து அற்றுப் போனது.

'யோகு...எடமேன... எத்தின மணி இப்ப...'

வீடு முழுவதும் இருள் மூடிக்கிடந்தது.

'யோகா... எடயோகா... எத்தின மணி இப்ப...'

'ரெண்டு மணியெணை...தண்ணி ஏதும் குடிக்கப் போறியளே...' யோகனின் மனைவிதான் மூடிய அறைக்குள்ளிருந்து கேட்டாள்.

'ஒண்டும் வேண்டாம் பிள்ளை... முழிப்பு வந்திட்டுது... அது தான் விடிஞ்சிட்டுதோ எண்டு கேட்டனான்... நீ படு...'

வீடு அமைதியானது.

ஆச்சி கால்களை நீட்டி திண்ணையில் சரிந்தாள். கண்கள் மூடிக்கொள்ள மறுத்து அடம் பிடித்தன. கொஞ்சநேரத்துக்கு முன் கனவில் வந்த முகத்தை நினைவுக்கு கொண்டு வந்தாள்.

'எட தேவா... என்ர குஞ்சு...' விம்மினாள்.

'தாயைத் தின்னிப் பிள்ளை எண்டு போட்டு... இடுப்பை விட்டு இறக்காம வளத்தன்... என்னை விட்டிட்டுப் போட்டியோ...' உள்ளூறப் புலம்பினாள்.

தேவன் வீரச்சாவாகி ரெண்டு வருடங்கள் ஆனபிறகும் - அது நேற்று நடந்து முடிந்ததாகவே அவள் உணர்ந்தாள்.

கனகத்தின் மூத்தவள் தவம். தேவன் கைக்குழந்தையாக இருந்த போது, நெருப்புக் காச்சல் வந்து அவள் இறந்து போனாள். தவத்தின் இரண்டு பிள்ளைகளும் கனகத்தின் மடியில்.

'கட்டையில போற நானிருக்க..என்ர குஞ்சுகளை ஒண்டொண்டாக் கொண்டு போறியே....' ஆற்ற முடியாத துயரம் பொங்குகிற வேளைகளில் ஆச்சி பெருங்குரலில் அழுவாள். கண்ணீரில் அவள் துயரம் வடியும்.

யோகனுடன் தான் ஆச்சியின் காலம். யாழ்ப்பாணத்திலிருந்து இரவோடிரவாக இடம் பெயர்ந்த பொழுது சயிக்கிளின் பின் இருக்கையில் ஆச்சியை இருத்தி தேவன் தான் நாவற்குழிப்பிள்ளையார் கோயில் வரை உருட்டிக் கொண்டு வந்தான்.

'எட ராசா.... இவ்வளவு கிழடு கட்டைகளும் நடந்து தானே வருதுகள்... இறக்கி விடன்... மெல்ல மெல்ல நடந்து வாறன்...'

'பேசாம இரண... நான் உருட்டுவன்....'

சயிக்கிள் முன் கைபிடிகளில் தட்டு முட்டுச் சாமான்கள் கொழுவியிருந்தன.

சனத்தோடு சனமாய் நகர்ந்து.... நகர்ந்து.... வள்ளமேறி... ஒருவாறாய் கிளிநொச்சி உதயநகருக்கு வந்தார்கள்...

**யாரோ** உறவினர்களின் **சிபார்சில் மனமிரங்கித்** தரப்பட்ட **சிறிய குடிசை**. அதில் இன்னுமொரு குடும்பமும் இருந்தது. அவர்கள் சங்கானையிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள்.

யோகன் பத்தாம் வகுப்புச் சோதினை எடுக்க வேண்டியவன். பள்ளிக்கூடம் போகாமல் விறகு வெட்டி விற்க ஆரம்பித்தான்.

'நீயும் படிப்பைக் குழப்பிப் போடாதை ராசா.... நீ படிச்சுத் தலை நிமிருறதைப் பாத்திட்டுத் தானடா நான் கண்மூட வேணும்....' என்று அடிக்கடி ஆச்சி கூறிவைப்பாள். ஆனால்.

ஒரு நாள் விடியப் பள்ளிக் கூடத்துக் கென்று போன அவன் வீடு வரவேஇல்லை.

'எல்லாக் குளங்களிலையும் தண்ணி ரொம்பி வழியுதாம் கூட்டாளியளோடை எங்கையும் நீந்தப் போய்... ஏதும் பிசகாப் போச்சுதோ...'

ஆச்சி தவித்துத் துடித்தாள். சாப்பிடாமல் கிடந்தாள்.

'பேசாமச் சாப்பிடணை... போனவன் வருவான் தானே...'

'அவன் வந்தாலொழியச் சாப்பிடன்...'

ஆச்சி றோட்டுக்கும் வீட்டுக்கும் ஓடுப்பட்டுத் திரிந்தாள். அவளுடைய நிலமையைப் பார்த்து விட்டு யோகனும் தெரிந்த இடங்களில் விசாரித்துப் பார்த்தான்.

மூன்றாம் நாள் தேவன் போன இடம் அறிந்ததும் - ஆச்சி அமைதியாகிப் போனாள்.

யோகனுக்குத்தான் தாங்க முடியவில்லை. திண்ணையிலிருந்து முகட்டைப் பார்த்து அழுது கொண்டிருந்தான்.

'ஏனடா இப்ப அழுறாய்...? அவன் நல்ல காரியமாய்த்தானே போயிருக்கிறான்....'

'எழும்பி உலையை வைபிள்ளை... எனக்குப் பசிக்குது...' எல்லோரையும் ஆச்சி இயல்பாக்கினாள்.

'நீ உவ்வளவு பாசமாய் வைச்சிருக்க... இப்பிடிச் செய்து போட்டானே....'

'ஏன்...'என்ன செய்தவன்... நீங்கள் செய்ய ஏலாதெண்டதை அவன் செய்யப் போட்டான்...'

கேள்வி கேட்பவரின் உச்சியிலடித்து அவர்வாயை மூடினாலும் - ஆச்சிக்கு உள்ளூரத் தவிப்பாய்த்தான் இருந்தது.

ஒரு நாள். மதியம் தாண்டிய பகற்பொழுது. ஆச்சி ஒழுங்கையின் திருப்பத்திலிருக்கும் வெற்றிலைக் கடைக்குப் போயிருந்தாள்.

'ஆச்சி சயிக்கிள்ளை ஏறணை...'


யோகன் பரபரத்தான்.

'என்னடா மேனை....?'

'கதையை விட்டிட்டு ஏறணை... வீட்டை போக...' ஆச்சிக்கு தேகம் பதறியது. ஒரு வேளை....

'ச்சீ.... அவனுக்கு ஆயுள் கெட்டி... அப்பிடி அவனுக்கு ஏதும் எண்டா இந்தக் கட்டை உயிரோடை கிடவாது....'

மனப் போராட்டத்தோடு சயிக்கிளில் ஏறி வீட்டில் இறங்கினாள். முற்றத்தில் நின்றவனை கண்களை இடுக்கிப் பார்த்தாள்.



உயர்ந்த உருவம்... வட்டமான முகம்... அரும்பிய மீசை..சிரிக்கும் கண்கள்...

'என்ர ஐயா வந்திட்டியே...'

தேவனை இனங்கண்டு கொண்ட மகிழ்ச்சியில் அரற்றினாள்.

'சாப்பிடவா...'

இழுத்துக் கொண்டு போய்த் திண்ணையில் இருத்தினாள்.

'ஆச்சியின்ர புளுகத்தைப் பாருங்கோவன்....' யோகனும், மனைவியும் சிரித்தார்கள்.

ஆச்சி அவனைத் தொட்டுப்பார்த்தாள். தடவிப் பார்த்தாள். பரவசப் பட்டுப்போய் கண் கலங்கினாள்.

'குண்டு குண்டாய்க் கொண்டு வந்து கொட்டினாங்கள்... எங்க ராசா நிண்டனி... எனக்கு உன்ர ஏக்கம் தான்...'

'...............'

'சண்டையளுக்கெல்லாம் போனனியே.....?'

'...............'

'உந்தத் துவக்கு சரியான பாரமாக்கிடக்கு.... தூக்கிக் கொண்டுதிரிய கை உளையாதே...?'

'....................'

'அப்புவும் முந்தி ஒரு இடியன் வைச்சிருந்தவர்.... பிறகு ஆரோ கூட்டாளிக்கு குடுத்திடார்....'

ஆச்சி அன்பின் மிகுதியால் குழந்தையாகிக் குதூகலித்தாள்.

மறுநாட் காலை அவன் புறப்படுவதற்கு ஆயத்தமான போது ஆச்சி காற்றுப்போன பலூனாய் துவண்டு போனாள்.

'போட்டு வாறன்.....'

யாருடைய முகத்தையும் பாராமல் பொதுவாக அவன் சொல்லிய போது - ஆச்சி அவனுடைய கையைப்பிடித்து.

'இந்தா...ஏதாலும் வாங்கு வாய் வைத்திரு...' என்று நூறு ரூபாத்தாளை அவன் கையில் வைத்தாள்.

'வேண்டாமெண... காசு ஒண்டும் வேண்டாம்...'

'முந்தியெண்டால் காசு வைச்சிருக்க விடாய்.....இப்ப.... வேண்டாமோ... பிடியடா....'

ஆச்சி அவனை ஒழுங்கைவரை கொண்டுபோய் வழி யனுப்பி விட்டு வந் தாள்.

ஒருநாள். நடுநிசி. குண்டுச் சத்தங்களும் செல்சத்தங்களும் அமளியாய்.... ஆச்சிக்கு நித்திரை குழம்பி விட்டது. அனேகமாக எல்லா வீடுகளிலும் ஆரவாரம்....

'யோகு.... எடயோகு.... சத்தம் எந்தப்பக்கம் கேக்குதடா...'

'ஆனையிறவுப் பக்கமாக கேக்குதணை...'

'என்ர குஞ்சு.... எங்கை நிக்குதோ....'

'உன்ரை குஞ்சு மட்டுமேயணை... எத்தினையாயிரம் பேர் நிப்பாங்கள்... பேசாமயிரு....'

ஆச்சியும் எழும்பி வந்து முற்றத்தில் அமர்ந்து கொண்டாள். விடிய விடிய குண்டுச் சத்தங்கள் வெகு தொலைவுக்குப் போய்க் கொண்டிருந்தன. அந்த இரவுப் பொழுதில் தான் தேவனும் வீரச்சாவடைந்திருக்க வேண்டும். மறுநாள் இரவு தான் ஆச்சிக்கு செய்தி வந்தது.

எத்தினை நாட்களாய்... எத்தனை மாதங்களாய் அழுதாளென்று ஆச்சிக்குத் தெரியாது.

'ஆச்சி....நானிருக்கிறன்... எனக்காக அழாதையணை.... எழும்பு...'

விம்மலும் கண்ணீருமாய் யோகன் நின்ற போது - ஆச்சி தன் கண்ணீரைக் கட்டாயப்படுத்தி அடக்கிக் கொண்டாள்.

ஆச்சியின் படுக்கைக்கு அருகே சுவரில் தேவனின் நெஞ்சளவு படம். இரவுபடுக்கப் போகும் பொழுதும் நித்திரையால் எழுந்தவுடனும் படத்தைக் கைகளால் தடவி கண்களில் ஒற்றிக் கொள்வாள்.

ஆச்சிக்கு இப்போது தூக்கம் அற்றுப் போயிருந்தது. தூரத்தில் எங்கேயோ சேவல் கூவுவது கேட்டது.

கண்களை மூடிக் கிடந்தாள்.

'ஆச்சி..ஆச்சி...'

திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள்.

'விடிஞ்சு போச்சணை... எழும்பன்...'

ஆச்சி எழும்ப... நினைவுகளும் சட்டென்று விழித்துக் கொண்டு அவளை ஆட்டிப் படைத்தன.

'தேத்தண்ணியக் கொண்டு வரட்டேயணை...?'

'இப்ப வேண்டாம் மேன.... எட தம்பி... இப்ப எங்கயும் போறியே...?'

'ஏனணை..?'

'என்னை ஒருக்கால் சின்னவனிட்டைக் கூட்டிக் கொண்டு போகவேணும்...'

'இப்ப கிட்டடியில தானே போய்... விளக்கேத்திப் போட்டு வந்தனி... பிறகென்னத்துக்கு...?'

'என்ர பிள்ளய இண்டைக்கொருக்கால் பாக்க வேணும் போல கிடக்கு... கூட்டிப் போறியே...'

'கொஞ்சநஞ்சத் தூரமேயண... றோட்டும் சரியில்லை...'

'வசுவில எண்டாலும் ஏத்திவிடு மேன.... நான் அவனை ஒருக்கால் பாக்க வேணுமையா....'

'ஆசையாக்கேக்கிறாவெல்லே.... ஒருக்கால் கூட்டிப் போங்கோவன்....'

'சரி... வெளிக்கிடணை... மழையும் வரும் போல கிடக்கு...'

யோகன் சயிக்கிளை எடுத்து வெளியே விட்டுக்காற்றடித்தான்.

ஆச்சி பரபரவென்று குளித்து வெளிக்கிட்டாள்.

'எனக்குத் தேத்தண்ணி ஒண்டும் ஊத்தாதை பிள்ளை... சின்னவனைப் போய்ப் பாத்திட்டு வந்து தான் குடிப்பன்...'

ஆச்சியை ஏற்றிக் கொண்டு யோகன் புறப்பட்டான். காற்றுடன் அள்ளுப்பட்டு வந்த புழுதியில் குளித்தபடி அவன் சயிக்கிளை மிதித்தான். ஆச்சி இரண்டு கைகளாலும் அவனை இறுக்கிக்கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

'ஆச்சி தேத்தண்ணி ஏதும் வாங்கித் தரட்டேயணை..?'

'வேண்டாம்...'

நீண்ட நேர ஓட்டத்தின் பின் துயிலுமில்லத்துக்கு வந்தார்கள். ஆச்சி இறங்கி விறுவிறுவென்று துயிலுமில்லத்துக்குள் போனாள். யோகன் சயிக்கிளை மரத்தின் கீழ் விட்டுப் பூட்டிவிட்டு பின்னே போனான்...

தேவனின் காலடியில் கைகளால் விறாண்டி ஒரு சிறிய கிடங்கை ஆச்சி உண்டாக்கினாள். மடியை அவிழ்த்து அதிலிருந்து சில்லறைக் காசுகளை எடுத்து கிடங்கில் போட்டு மூடினாள்.

'ஆச்சி.. ஏனணை உதிலை காசு போட்டு மூடுறாய்...?'

'என்ர குஞ்சு ராத்திரிக் கனவில வந்து ஆச்சி பத்துருவாதாண அஸ்கிறிம் குடிக்கப் போறன் எண்டு கேட்டது.... அது தான் கொண்டு வந்து குடுக்கிறன்...'

நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து புரண்டடித்து எழுந்த துயரம் அவன் கண்களை நிறைத்தது.

'வா போவம்....'

ஆச்சி எல்லாக் கல்லறைகளையும் கடந்து முன்னே போய்க்கொண்டிருந்தாள்.



# நூல்நோக்கு

பதின்மூன்று சிறுகதைகளைக்கொண்ட இத்தொகுப்பில் ஆங்கிலச் சிறுகதையொன்றும் உள்ளது. இக்கதைகள் அளவாக, அழகாக, ஆழமாக, அர்த்தமாக, அற்புதமாக, அறிவாக அலங்கரித்து நூலாய் அரங்கேற்றப்பட்டுள்ளது. இவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

பூப்போட்டு பூப்போட்டு :- "மரங்கள்வெட்ட வெட்ட புதிய மரங்கள் நடப்படுகின்றன. எம் வீரர்கள் மடிய மடிய..." என்ற இயற்கையினூடான ஒப்பீடு ஆசிரியரின் இயற்கை மீதான கூர் நோக்கைக்காட்டுகின்றது. "இயற்கை எனது நண்பன்..." என்ற தலைவரின் சிந்தனை அவர் சிந்தனையில் சில்லிடுகிறது. குழந்தையின் கேள்விகளுக்கு தாயால் கொடுக்கப்படும் விடைகள் பாராட்டத்தக்கவை. அநேகபெற்றோர் குழந்தைகளின்கூர்மையான கேள்விக்கு செவிசாய்ப்பதில்லை. இதனால் குழந்தைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகிறது. ஆசிரியர், படைத்த தாயைப்போல் நாமும் அவர்களின் வினாக்களுக்கு விடை கொடுப்போம். நாட்டின் எதிர்கால தூண்களை ஆரோக்கியமாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவையை ஆசிரியர் கோடிட்டு காட்டுவதுடன் இருமனம் இணைந்து இல்லற வாழ்வில் மறுமணம் தவிர்க்க முடியாது என தீபா படைத்துள்ளார்.

அன்பு:- "அன்பு" இந்த மூன்றெழுத்து மந்திரமே அகிலத்தை அழகுபடுத்துகிறது. நாம் அனைவரும் இதை உச்சரித்தால் ஆனந்தமாய் வாழலாம். அமைதியைக்காக்க வந்தவர்கள் அமைதியைக் குழப்பினர், குழப்புகின்றனர். அன்பினூடாக அனைத்து அம்சங்களையும் கருப்பச்சாறாய் தந்துள்ளார்.

சத்தத்தில் அதிரும் கனவுகள்:- தேசப்பற்றுக்கு வயது தடையாக அமையாது என்பதனை 'சிதம்பரம் ஐயா' என்ற பாத்திரமும் தனிப்பட்ட வாழ்வியல் தேசக்கடமைக்கு தடையாக அமைந்துவிடாது என்பதனை 'கதிர் என்ற பாத்திரமும் கூறிநிற்கின்றது. இது எம் தேசத்தின் நிதர்சனம். இது ஒரு காலத்தின் பதிவு.

கனவல்ல கதையுமல்ல:- "நீயே அதுவாகி" என்ற தத்துவக் கோட்பாட்டை ஆசிரியர் கையாண்டுள்ளார். போராளிகளின் உள்ளத்தை எக்ஸ்ரே எடுத்து போரியல் அறிவுடன் போர்க்கலைச் சொற்களை கையாண்டமை சிறப்பாக உள்ளது.

நேசிப்பும்:- "நேசிப்பு" இதுதான் மனித வாழ்வின் மொழிபெயர்ப்பு. அம்மா, நிழலில் வாழவேண்டியிருப்பதால் நிதர்சனத்தை அவளுக்கு தெரியவில்லை. இயற்கையின் வர்ணஜாலத்தை அவள் அறிந்திருக்கவில்லை. இந்நிலை மாற வேண்டும். மகன், சரியான நேரத்தில் சரியான முடிவையே எடுத்துள்ளார். இக்கதை எம்இளைஞர்களை வழிப்படுத்தும்.

போராட்டமே வாழ்க்கையாக:- எல்லையில் எம்மவர் எல்லைப் படைகளாய் நின்றபோது வீட்டில் அடுப்பு எரியவில்லை. ஆனால் கடமையில் எல்லைக் கற்களாய் நின்று எம்தேசத்தைக் காக்க இவர்களது தியாகங்கள் இப்படி எழுதப்படவேண்டியது அவசியமானது. ஆசிரியரது பணி மெச்சத்தக்கது.

நிமிர்வு:- இந்த நிமிர்வை அவளுக்கு கொடுத்தது எது? "... என் தங்கைகள் படைக்கும் சாதனையில் தலை நிமிர்ந்து கொள்கின்றேன்" என்ற தலைவரின் உண்மையின் வரிகள்தான் இவளுக்கு நிமிர்வைக் கொடுத்துள்ளது.

மலர் உதிர்ந்தபோது: மிகவும் தத்துவரூபமாக உருவகக் கதையாய் உள்ளத்தைத் தொடும்படி எழுதப்பட்டுள்ளது. கற்பனை கலாபூர்வமாக உள்ளது.

வித்தியாசமானவர்: தமிழினி, சந்தியா இருவருமே இவர்களது நிலையில் வித்தியாசமானவர்கள்தான். இதில் வலுவிழந்த போதிலும் மாற்று வலு உடையவராய் நிமிர்ந்து நின்று போராட்ட வாழ்க்கையில் தம் இல்லற வாழ்வியலில் இனிதாக வாழ்பவரைத் தொட்டுக்காட்டுவது எம் உள்ளத்தைத் தொட்டு நிற்கின்றது. வீரவடுத்தாங்கியவர்களை தம் வாழ்க்கைத் துணையாய் இணைத்துக்கொள்பவர்களை கருவில் கொண்டது ஆசிரியரின் உயர்ந்த உள்ளத்தை காட்டிநிற்கிறது. இவர்கள் என்றும் கனம் பண்ணத்தக்கவர்கள்.

இது விதியல்ல:- மதியை தொலைத்துவிட்டு விதியைத் தேடுகின்றனர். விழிப்புணர்வு ஊட்டியும் விடியாதவர்களை என்ன செய்வது? அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் தானே? அவர்களை அறிவியல் உலகுக்கு அழைத்து வருவோம். அவர்களின் அறியாமையை எண்ணிவருந்தும் விதம் ஆசிரியரில் அதிகபட்ச மரியாதையை ஏற்படுத்துகிறது.

நான் தங்கம்மா ஆவேனா?:- ஆவேனா? என வினா கொடுத்து நிற்காமல் விடைகாணப்படவேண்டியது ஒவ்வொரு பெண்ணிற்கும் உரிய உரிமை. ஒவ்வொரு மனிதனும் இக்கதையை படிக்க வேண்டும். விலங்குகள் கூட அதற்குரிய காலத்தில் உறவு கொள்வதாக அறியக் கிடைக்கிறது. மனிதன் ஏனோ மாண்பு இழந்தான்? அர்த்த நாதீஸ்வரத்தை ஏன்தான் அலங்கோலப்படுத்துகிறான்.

புரிதல்:- இச்சிறுகதைத் தொகுதிக்கு சிகரமாய் அமைவதுடன் இப்புவிக்கும் இதுதான் சிகரம். இராமனே சீதையை தீக்குளிக்கச் சொன்னான். இராமனை விட இந்த டேமியன் உயர்வானவன். டேமியன் தான் உலகின் உதாரணபுருசன். டேமியன்களால் இந்த தேசம் ஒளியூட்டப்படுகின்றது. டேமியன்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். எம்மை நாமே புரிந்து கொள்ள முடியாதவர்களாய் பலர் இருக்கையில் டேமியன் இமாலயமாய் எம் இதயங்களில்.




நூல் :
புரிதல் (சிறுகதைத்தொகுதி)

ஆசிரியர்:
தீபா குமரேஷ்

வெளியீடு:
ஆரண்யம் வெளியீட்டகம்

விலை:130/=

வஞ்சகத்தின் வேலிகள்:- (CROOKED FENCES)
இது ஓர் ஆங்கிலக்கதை இக்கதை எல்லாக்கதைகளுக்கும் வேலியாய் அமைவதால் இக் கதையைத் தொடவேண்டி உள்ளது. அந்த கறுப்பு யூலையை பூகம்பமாய் வர்ணித்துள்ளமை மிகவும் பொருத்தப்பாடானது. "ஆங்கிலம் பேசும் தமிழ் மக்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டனர்." என்ற அடைமொழி அழகாய் உள்ளது. 'லங்காராணி' நினைவில் பளிச்சிடுகிறது. இடம்பெயர்வு வாழ்வை வாசிக்கையில் 'பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது...' பாடல் வரிகளாய் வாய்முணு முணுக்க எண்ணங்கள் தாயகம் நோக்கி பயணிக்கிறது.

ஆசிரியர், இயற்கையின் நர்த்தனங்களில் தாண்டவம் ஆடுகிறார். சொல்லப்படவேண்டிய செய்திகளை இரத்தினச் சுருக்கமாய் சிறுகதை ஊடாக தந்துள்ளார். இது காலத்தின் குறளாக, குரலாக எம்கைகளில் அரும்பத உரையாக பொழிப்புரையாக, தெளிவுரையாக, விளக்கவுரையாக அப்பழுக்கற்ற விதமாய் இக்கதைகள் அமைந்துள்ளன.

வெவ்வேறு காலப் பகுதியில் இக்கதைகள் எழுதப்பட்டதாலேயோ அல்லது ஆசிரியரின் பிரியத்துக்குரியவர்களின் நாமமோ எதுவோ தெரியவில்லை பாத்திரங்கள் ஒரே பெயரைத்தாங்கியுள்ளது. இவற்றை தவிர்த்தல் நல்லது என்பது எனது கருத்தாகும்.

மொழியை லாபகமாக கையாண்டமையே இங்கு சிறப்பான அம்சமாகும். சிறுகதை எழுத்தாளராகவர விரும்புவோருக்கு இந்நூல் ஓர் அருமருந்தாகும்.

சிவேந்திரன்



# எப்போது உடையும்?

நேற்றுப்போல் இருக்கிறது
நீண்டுவளர்ந்த தென்னைகள்
நின்றணி செய்த
பாதைவழியே தொடங்கிய-எம்
நெடுந்துரப்பயணம்.

உயிர்பிரிதல் பற்றிய உறுத்தலில்
ஊர்பற்றிய உணர்வலைகள்
ஒருவரிடமும் இல்லை அப்போது
இப்போதுதான்
எஞ்சியவர்களில்மிஞ்சியவர் இதயங்களில்
ஊர்,
உடைந்துபோன வீடு,
உடமைகள்
இழந்துபோன உறவுகள்
அவர்தம் நினைவுகள்
என்றெல்லாம் ஏக்கமாய்.

ஒண்டிரண்டாய் குடிவந்து
ஊருக்கும் உயிர்வந்து
ஒருவருடமாகிறது
நாங்கள்மட்டும் நடைப்பிணமாய்
நண்பர்கள் வீட்டில்

நாள்தோறும் எதிர்பார்ப்பு
நனைந்துபோகின்றது கண்ணீரில்
பேச்சுக்கள்,
பேச்சுக்கான பேச்சுக்கள்,
அறிக்கைகள்,
ஆர்ப்பாட்டங்கள்
வாக்குறுதிகள் என்றனைத்துக்கும் அப்பால்
என்வீடு சிறைவைக்கப்பட்டிருக்கிறது.
எப்போது உடையும்?
உயர்பாதுகாப்பு வலயம்.

தம்பலகாமம்- த. ஜீவராஜ்



# அந்த நாட்களில்...

இனி கொஞ்சம் மரண ஓய்வு
உனக்கும் எனக்கும்.
ஓய்வு பதுங்கு குழிக்கும்,
அனல் கக்கும் குழல்வாய்க்கும்.
ஆயிற்று இனிப் படிக்கலாம்
அமர்ந்த பையன் பரபரத்தான்.
பள்ளி முன்றலில் வெள்ளை சொகுசூர்தி
ஈழத்துவோர்கள் இடம் பெயர்ந்து
மெருகேறி இறங்கின
படக்கருவிக்குள் வன்னிப்பாமரம்
படமாக்கப்பட்டது.
கொட்டில் வகுப்பும்
"யுனிசெப் பாயும்" பின்புலம்
பதுங்கு குழியும் கூட
அதுஎங்கள் உயிர்அறை
இப்போது காட்சியறை - இன்று
வன்னி "மியூசியம்"
பார்வையாளர் ஏராளம்.
மறையாக் காட்சிகள் மனதில்
மந்துவில் சந்தையும், வவுனிக்குளமும்
எப்படி மறக்கும்?
எவர் வந்து அணைத்தெடுத்தார்
எந்தக்கையும் தழுவவில்லை
எந்தத் திசையும் புலரவில்லை
எனக்கு நீயும் உனக்கு
நானும் மட்டும்...
தசைகளை சேர்த்தெடுத்து
ஊர் கூடி ஒப்பாரி வைத்தோம்
அழுகைகள் எதிர்ஒலியாய்
மீண்டும் எம்மிடமே
இது சோகமல்ல
நாம் சோகம் விற்பவருமல்ல
வன்னி கடந்த வழித்தடங்கள் இவை
ஊர் காண வாருங்கள் உறவுகளே
இது உங்கள் வேர் ஓடிய நிலம்
கரம் பற்றி வரவேற்கும்
பற்றுதல் பாசத்தால் அன்றி
பாசகத்திற்காய் அல்ல.
இது வன்னி மண்.

காவியா மதுராந்தகன்

# இளையநாதம்

# திருந்திய உள்ளம்



குமரன் அந்த ஊரிலேயே மிகவும் பணக்காரன். அவனுக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. ஆனால் தாராளமான மனம் அவனிடம் இருக்கவில்லை. அவன் ஆடம்பரமாகவே வாழ்வதை அதிகம் விரும்பினான். அதனால் தன்கையால் ஒரு ரூபா செலவு செய்தால் கூட வருந்துவான்.

இவன் தனது பன்னிரண்டாவது வயதில் நண்பனுக்கு புகைப்பதற்கு பணம் கொடுத்தற்காக அவனது தந்தை முற்றத்தில் இருந்த வேப்பங்கன்றின் மீது கட்டி விட்டார். அவனது தந்தை நேர்மையை நேசிப்பவர். அநியாயத்தை வெறுப்பவர். குமரனது செயல் காதுக்கெட்டியதும் தான் இந்த ஆர்ப்பாட்டம். அது இரண்டு மூன்று பிரம்புகள் முறிய நிறைவு பெற்றது.

அன்று வீட்டு வாசலைக் கடந்தவன். பலர்கையால் குட்டுப் பட்டு, சுடுநீர் கூட அவனது உடலில் ஊத்தப்பட்டது. பின் ஒரு பெரியவரின் உதவியுடன் வேலையில் இணைந்து உழைக்கத் தொடங்கியவன் இன்று ஒரு குடும்பமாகி விட்டான். ஆனால் தந்தையையோ தாயையோ நினைத்துப் பார்ப்பதேயில்லை.

மகனை இழந்த வேதனையை தாங்க முடியாத தாய் நோய்பிடிக்க உயிரைக் கொடுத்தாள். வாங்கிய கடனை அடைக்க முடியாத தந்தை வீட்டை விற்று தெருவுக்கு வந்தார். அவருடைய சொத்து காணாமல் போன குமரனுடைய படமும் இடுப்பில் சொருகியிருந்த பையுமே.

வழமையாக குமரனது வீட்டுக்குப் பிச்சைக்காக பலர் வந்து போவார்கள். வரும்போது குமரன் நின்றால் அன்று பிச்சைக்காரருக்கு எதுவுமே கிடைக்காது. வாயுழையும் வரை திட்டுவான். அவன் மனைவி கண்மணி இரக்கமுடையவள். அவள் கணவனுக்குத் தெரியாமல் எதையாவது கொடுத்து அனுப்புவாள்.

அன்று வேட்டியை அலம்பிக் கட்டிக்கொண்டு அந்த முதியவர் குமரனது வீட்டு வாசலில் தான் ஆரம்பித்தார். அவரது கஸ்ர காலம் என்னவோ குமரன் தான் வெளிப்பட்டான்.

"என்ன மனுசங்கடா. விடியவே என்ர பிழைப்ப கெடுக்க வந்துட்டான். போ... போய் உழைச்சுச் சாப்பிடு..."

அந்த ஏழையின் முகம் வாடிவிட்டது. நீண்ட மௌனத்தின் பின்.

"தம்பி உனக்கு நான் அப்பா மாதிரி. எதுவும் தராட்டியும் பரவாயில்லை. பண்பா கதைக்கயாவது தெரிய வேண்டாமா....?"என்றவாறு நடந்து படலையைக் கடந்தவரால் அடுத்தகாலடி எடுத்து வைக்க முடியவில்லை. தலைசுற்றத் தொடங்கியது நிலை தடுமாறிபடலையோரமாக சரிந்து விழுந்தார். பார்த்துக்கொண்டிருந்த குமரனுக்கு மனம் பொறுக்கவில்லை. ஓடிச் சென்று அசைத்த போது அவர் நிரந்தரமாக கண்களை மூடியிருந்தார்.

நழுவிக் கிடந்த பையை விரித்தபோது அவனாலேயே தனது கண்களை நம்ப முடியவில்லை. விறிட்டவாறு அணைத்துக்கொண்டான். அந்த வார்த்தைகள் அவனது இதயத்தை சுட்டெரித்துக் கொண்டே இருந்தன. 'எனக்கு மன்னிப்பு கிடைக்குமா...?பணத்தை நாளைக்கும் உழைக்கலாம். ஆனால் அப்பா, அம்மா இனி கிடைப்பார்களா.....?, இப்படியொரு வாழ்க்கை இனி வாழக்கூடாது இத்தனைக்கும் காரணம் அவனது கையிலிருந்த பையினுள், குமரனது பத்து வயதில் எடுத்த படம். அதுவேறு யாருமல்ல. அவனது தந்தையே. யாருமே அப்பா அம்மா சொல்கேட்டுத்தான் வாழோனும் அப்பதான் சந்தோசமா வாழலாம் என்பதை உணர்ந்து கொண்டான்.

**வி.பாணு**

# நகைச்சுவை



ஒருவன் :-
"எங்கண்ணன் நீர்மூழ்கிக்கப்பலில வேலைக்குச் சேர்ந்தான். ஆனால் சில நாட்களிலேயே அவனை வேலையை விட்டு அனுப்பிற்றாங்கள்."
மற்றவன் :-
"ஏன்?"
ஒருவன் :-
"புழுக்கமா இருக்கு நல்ல காற்று வரட்டும் என்று சன்னலைத் திறந்தானாம்."

சு.கௌரீசன்,
மு/வித்தியானந்தக் கல்லூரி,
முள்ளியவளை

# உயரமான அருவி

உலகிலேயே மிக உயரமான அருவி தென் அமெரிக்காவில் வெனிசூலா நாட்டில் உள்ள ஏஞ்சல் அருவி ஆகும். இதன் உயரம் 970அடி ஆகும்.

ராஜ்குமார்,
ஆண்டு - 11,
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

# நூலகம் செல்வோம்

"அறிவுடையோர் எல்லாம் உடையர்"

என்றார் வள்ளுவனார். வாசிப்பதனாலே மனிதன் பூரண மனிதன் ஆகின்றான். வாசிப்பதனாலே அறிவு வளருகின்றது. ஆழமாகச் சிந்திப்பதனாலே அறிவு கூர்மையடைகின்றது. நல்ல நூல்கள் சிறந்த ஆசான்கள். அடிக்காமல், ஏசாமல் அறிவு புகட்டும் ஆசான்கள் இவர் களல்லவா!

அறிவும், அனுபவமும் திறமையை வளர்க்கும். பண்பாட்டைப் பண்படுத்தும். புதுமையைப் பிறப்பிக்கும். அன்பு, கருணை, இரக்கம், உழைப்பு அனைத்தையும் ஊக்குவிக்கும். ஆதலால் நூலகங்களுக்குச் செல்வோம். வாசிக சாலைகளைத் தேடி நடப்போம். அங்கே பாவும் பாவலரும், இசையும் இசைப்போரும், முத்தமிழும் இன்சுவையும், வாழ்வும் வளமும், சமயங்களும் பிறமொழிகளும் நிறைந்திருக்கும் விஞ்ஞானிகள் விஞ்ஞானம் விளக்குவர். வீரர்களை, தியாகிகளை இனங்கண்டு கொள்ளலாம். சகோதர சகோதரிகளே!

நல்ல நல்ல ஆசான்களை நாமே தேர்ந்தெடுப்போம். எங்கள் வாழ்விற்காய் வாசிப்போம். நிறைய வாசிப்போம். அறிவு நிறைந்த வெற்றி மனிதராகுவோம். அறிவுச் செல்வமே அழியாத செல்வம் என்று உணர்வோம். ஆதலால் நூலகம் செல்வோம்.

கு. மணிமேகலை.

# விஞ்ஞானத் தகவல்கள்

01. உருக்கு முதல் முதலில் கண்டு பிடித்த நாடு எது?
    ஸ்ரோப்பா
02. அணுக்களில் லேசான அணு எது?
    ஹைட்ரஜன் அணு ஆகும்
03. தீப்பிடிக்காத ஒரே மரம் எது?
    "டமா ஸேக" மரம்
04. பாலில் இல்லாத ஒரே சத்து?
    இரும்புச்சத்து
05. கரும்பில் அதிகளவில் காணப்படும் வெல்லம் எது?
    சுக்ரோஸ்
06. செயற்கை முத்து உற்பத்தி செய்யும் நாடு எது?
    யப்பான்
07. முதல் முதலில் உலகப்படத்தை வரைந்தவர் யார்?
    தென்னாலி

இ. டிலைக்சன்,
கிளிநொச்சி ம.வி

# வாரம் ஒரு குறள்



விருந்தினரை உபசரிப்பது தமிழருகக்குரிய விசேட பண்பு. உபசரிப்பதில் உணவு கொடுத்தலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒருவரை "வாருங்கள்" என்று இன் முகத்தோடு அழைப்பதும், "அமருங்கள்" என்று ஆதரவளிப்பதும் அத்தோடு உணவளித்தலும் நிறைவானது. இது இரு பகுதியாருக்கும் இனிமையானதே. நாகரிகம் வளர்ந்து கொண்டு போகின்றது என்கின்றோமே தவிர இத்தகைய செயல்களை நாம் செய்யத் தயங்குகின்றோம். இது தவிர்க்கப்பட வேண்டும். அடுத்தவரை அன்புடன் நேசிக்கப் பழக வேண்டும். இந்தப் பழக்கத்தை சின்ன வயதிலிருந்தே பழக்கப் படுத்த வேண்டும். விருந்தினரைக் கண்டு வெறுக்கக் கூடாது. அப்படி நாம் அவர்களை வெறுப்போடு பார்ப்போமானால், அவர்கள் மனம் நொந்து போய் விடுவார்கள். இதனை வள்ளுவர் தனது குறளில்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந் திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**

என்று அழகாகச் சொன்னார்.

# பிள்ளையார்



பிள்ளையார் எங்கள் பிள்ளையார்
சிவனின் அருமைப் புதல்வனாம்
முருகனின் அன்பான அண்ணனாம்
எமக்கு நல்ல தெய்வமாம்.

யானை முகம் கொண்டவர்
ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு உடையவர்
கேட்டால் வரம் தருவாராம்.

பா. தனுசன்,
தரம் - 7A
C.C.T.M.S.
வவுனியா

# குறுக்கெழுத்துப் போட்டி 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | 03 | | | 06 |
| 07 | | | | | |
| 13 | | | | | |
| 19 | | | 22 | | |
| 25 | | | | | |
| 31 | | | | | |

## இடமிருந்து வலம்

01. ஐவர் கூடிய சபை
07. மீன் குழம்பி உள்ளது.
13. தந்திரம் குழம்பி உள்ளது.
19. காகிதம்.
22. உலகம் குழம்பி உள்ளது.
25. பழக்கம் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
31. கோழி தலை கீழாக உள்ளது.

## மேலிருந்து கீழ்

01. கழி விரக்கம்.
03. வர்ணம் குழம்பி உள்ளது.
06. பற்றற்ற நிலை ஓர் எழுத்தை இழந்து குழம்பி உள்ளது.

## குறுக்கெழுத்துப்போட்டி இல.12 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. குண்டலகேசி.
08. அம்புயம்.
15. கணையாளி.
20. சித்திரம்.
27. கருமை.
32. மாது.

**மேலிருந்து கீழ்**

01. குங்குமம்.
23. கரடி.
36. தை

## குறுக்கெழுத்துப்போட்டி இல.12 இன் பரிசுக்குரியவர்

கு. புவனேஸ்வரி,
கரியாலை நாகபடுவான்,
அ.த.க.பாடசாலை,
பல்லவராயன் கட்டு.

## குறுக்கெழுத்துப்போட்டி இல.12 இன் பாராட்டுக்குரியவர்.

கு. விஜிதன்,
5ம் வட்டாரம்,
குமுழமுனை.

செ. செல்வநிதி,
புகையிரத வீதி,
வவுனியா.

அ. கேஜீபன்
தரம் - 5
கிளி/இராமநாதபுரம் மேற்கு,
அ.த.க. பாடசாலை.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.14
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# பாதை திறப்பும் பரிதாப மரணங்களும்

பாதை திறப்பும் பரிதாப மரணங்களும். அண்டாடம் வாற செய்தியாப் போச்சு. கை தப்பக் கரணம் கரணந் தப்பினால் மரணம். என்னத்தைச் சொல்லுறியள். உந்த ஏனைன் சாலையில நடந்து போகவும் பயமாக்கிடக்கு. கண்ணை மூடி நித்திரை கொண்டா கூட்டங்கூட்டமா இயமதருமன்கள் எருமைக் கிடாவில ஏறி பாசக்கயித்தோட சுத்துறமாதிரிக் கனவு வருது.

நசிகேதனைத் தெரியுமோ. உந்த புராணக்கதையொண்டில இந்த நசிகேதன்தான் பிறந்து நாலுவயசிலதேப்பனக் கேக்கிறான் "மரணம் எப்ப வரும்." எண்டு. தேப்பன் சிரிச்சுப் போட்டு மோனுக்கு சொல்லுறான். "பிறந்தவர் இறப்பது திண்ணம்." எண்டு பழமுதிரப் பழமுதிர என்று பறை கொட்டென்று சொல்ல, காலதேவன் பூவுதிர பிஞ்சுதிரக் காயுதிரப் பழமுதிர என்று பறை கொட்டினான். இதால மரணம் எப்பவரும் எப்பிடிவரும் எண்டத யாராலும் சொல்லேலாது" எண்டார். யமனத் தலைமாட்டில வைச்சுக் கொண்டுதான் திரியுறம். ஒரு சினிமாப்படத்தில யமன் வாறார் இதே கேள்வியை அதில ஒரு நடிகர் கேக்கிறார். "பிரபோ..நீங்கள் எப்படி வருவீர்கள்?" எண்டு...பாட்டு.

புயலாய் வருவேன் - விபத்து
ரயிலாய் வருவேன்

எண்டு வகை சொல்லிப் பாடுவார் யமன்.

இப்ப எங்களுக்கு இந்த யமன். 'ஹெலி'யாய் வந்துபலி யெடுத்தார். பின்னர் 'கிபிரா'ய் வந்து குழிபறித்தார்.

'மிக்'காய் வந்து சுக்கு நூறாய்க் கிழித்தார். இன்னும் செல்லாய். கல்லாய் எல்லா வழியிலும்,பொல்லா மரணத்தை புதைத்துவைத்துப் பொறி வெடியாய் மிதிவெடியாய்.
போனதுவும் போதாமல்...

பாதைதிறந்து விட்டு போதையிலும் போகவைத்து. எப்பிடியோ தமிழற்ற கூப்பன் புத்தகத்தைக் குறைச்சு, வாக்குச் சீட்டின்ர தொகையையும் குறைச்சு மக்கள் தொகையிலும் சமநிலை பேணப்போகினமோ. எண்ட ஐயப்பாடு எனக்கு வந்திட்டுது.

சட்டம் எண்டுசொல்லுறது எப்பவும் மரபுகள் வழக்காறுகள வைச்சுத்தான் பேசலாம். சனம் மதிக்காத சட்டத்தை ஒரு நாளும் நடைமுறைப்படுத்த ஏலாது. இது உலகங்கண்ட உண்மை. இல்ல நான் தெரியாமக் கேக்கிறன். சட்டத்தை ஏன் சனம் மதிக்கேல்ல யெண்டா அதுக்கொரு தேவை இருக்கும். அது முறையான தேவையாகவும் இருக்கலாம். முறையில்லாத தேவையாகவும் இருக்கலாம்.

உப்பிடித்தான் பாருங்கோ-எங்கட பாதைதிறப்பும், பரிதாப மரணங்களும் நடக்குது. உந்த 'ஏனைன்' பாதை திறக்க


**மாயா**

முதல் கப்பலுகள்ள கொண்டு வந்து கிள்ளித்தெளிச்ச சாமானுகள்ள வாழ்க்கை நடத்தினது சனம். பிறகு சாமான் சக்கட்டுகள விட போக்குவரத்தும் அப்பிடியிப்பிடித்தான் பொழிஞ்சு போய் குண்டுகள் விழுந்து [illegible] புண்பட்டுப் போய்க் கிடந்த சாலையில ரோட்டுக்கு நோகுதோ வாகனத்துக்கு நோகுதோண்டு பக்குவமா ஓடி உந்த [illegible] காண இஞ்சையுள்ள தகரடப்பா வாகனங்கள்ள-சனம் போய் வந்தது தானே.

எடயப்பா-ஏனைன் பாதை திறக்குமுதல் கிளாலிக் கடலுக்கால கச இருட்டிலயும் திசை பிடிச்சு 'ஓட்டி'மார் 'போட்'ஓட.... எனக்கு இப்பவும் நினைவிருக்கு. போட்டு குலுங்கிக் குலுங்கிப் போக, அது ரோட்டுச சரியில்ல எண்டு ஓட்டி சொல்ல, உதை எப்பவாம் சூசையண்ணை திருத்தித்தாறதாம் எண்டு கேட்டு சிரிச்ச நாங்கள். பிறகு அதேமாதிரி யாழ்ப்பாணத்தால சூரியக்கதிரோட ஓடி வந்த வாகனங்கள் ரோட்டுவழிய அலையில குலுங்கிற படகுமாரித் தானே போனது. போதும் போதாததுக்கு வன்னியில அதுகள் எத்தின குளத்துக்க, மாரியில நீந்தப் பழகினதுகள். இரணைமடு'வான்' என்ன? அக்கராயன் 'வான்' என்ன? தருமபுரமென்ன? கோட்டை கட்டி'வான்' என்ன? மாரிகாலத்தில இந்த வாகனங்கள் நீந்திவர, இதுகளப் பக்கத்திலும் முதுகிலும் பிடிச்சு குழந்தப் பிள்ளைக்கு நீச்சல் பழக்கிற பெரியவை மாதிரி சனம் பின்னால பிடிச்சுக் கொண்டு வர அட அட அட என்ன கண்கொள்ளாக் காட்சியள் அதுகள்.

இப்ப....பாதை திறந்துவிட்டாச்சு. வண்ணத்துக் கொண்டு வரிக் கொண்டு எண்டு எத்தின வாகனம் வருது போகுது. பெரிய பெரிய கன்டெய்னர்கள். (கொள் கலன்) நீட்டு நீட்டு பவுசர்கள், கணக்கில்ல. பாரம் பாரமான இரும்புகள் கூட மின் கம்பங்கள்கூட வாகனத்தில வருகுது. ரோட்டுக்கு மண்போடுற அந்தப் பெரிய பச்சை மஞ்சள் வாகனங்கள் பிசாசுகள் போல ஓடித்திரியுது.

இதுக்க ஒரு ரகசியம். யப்பானால அக்காச்சி தங்கச்சி யெண்டும்,பிரிட்டனால சீனாவால மாமா மச்சானெண்டும் வந்து




போகினம். ஏனைன் ரோட்டால இவயட வாகனங்களும் இவை கொண்டு வாற சாமானுகளுந்தான் எக்கச்சக்கம் ச்சா எக்கச்சக்கம். ஆடு நனையுதே எண்டு ஓநாய் அழயில்ல. இறைச்சி பழுதாப் போகுமே-அதுக்குத்தான் அழுதது. அது போல தமிழர் போக வரமாட்டாம இருக்கினமெண்டு ரோட்டுப் போடயில்ல. இந்த ரோட்டக்காட்டி 'பங்கர்' வழுக்கிக்கொண்டு போற வாகனத்தைக் காட்டி, ரீ வீ காட்டி கடைக்குக் கடை "ஷோக் கேஸ்" காட்டி இதைப்பாத்து வாய்பிளக்க வாற வாகனம் எங்களுக்கு மேலால போயிரும். இதுக்குத் தான்-யாவாரம் செய்ய.

சரி.... சட்டந்தான் போட்டிருக்கே. இந்த இந்த இடத்தில இவ்வளவு வேகந்தான் எண்டு. பிறகேன் எல்லாரும் விமானப்படைக்கு ரெயினிங் எடுக்கினம். பின்ன- இஞ்ச ரோட்டில வேகமா ஓடிப்பழகினாத்தான் மேல விடுவினம். எங்க.... மேல. என்ன பகிடியே கதைக் கிறன் நான். பாதைதிறந்து இண்டைக்கு வரைக்கும் ஏனைன் வீதியில மாசம் இரண்டு மூன்று பேர் விபத்தில செத்திருக்கினம். மாசம் ஆறுபேர் காயமடைஞ்சிருக்கினம் விளையாட்டில்ல. இதில பாதிக்கப்பட்டவையளுக்கு எந்த நிவாரணமும் இல்லை. ஏனெண்டா வழக்குகள் முடிய முதலே இவையள் வழக்குக்கு வந்துபோறதில கஷ்டம் பாத்து நிண்டிருவினம்.

அடுத்தது தான் ஆக முக்கியம் பாருங்கோ. இந்த விபத்துக்கள் நடக்கிறதுக்கு என்ன காரணம் எண்டத நாங்கள் ஒருதரும் தான் அடியொட்டச் சிந்திக்கிறமில்லை.

அவசரம்... அவசரம்... அவசரம் தலைபோற அவசரம். வேற என்ன காலமவெள்ளண இருட்டோட சுன்னாகத்தில வெளிக்கிடுறவைக்கு 10-55க்கு கொழும்பு ரயில வவுனியாவில பிடிக்கிற அவசரம். 10-55க்கு கொழும்பால வவுனியாவில இறங்கி ஆட்டோ பிடிச்சு வந்தா பஸ் நிக்குமோ தெரியாது. ஒரு ஹையஸ அயர் பண்ணி 'யவ்னா'வுக்கு போய் 'இம்மீடியட்டா' 'கலம்புக்கு' போன்பண்ணி மம்மி வீட்ட வந்திட்டன் டாலிங் எண்டு கலம்பிலநிக்கிற மோனுக்குச் சொல்ல வேணுமெண்டா ஹையஸ் ஸ்பீட்டிலதான் போகோணும்.

ஏன்,ஏன் முகமாலையால வவுனியா போக வர இடையில வாகனம் பிழைப்பட்டு சுணங்கினாலும் ச்சுச்சு அஞ்சுமணிக்கு முதல் 'பொயின்ற கடக்கோணும் அங்காலயும் அது இஞ்சாலையும் அது பொயின்ரை கடக்கோணும்' பின்ன சட்டத்தை மதிச்சு சாவகாசமாப் போனா பொயின்ற் மூடிருவாங்கள். 5.30 எண்டா ரெட்கு றோஸ்காரன் கதிரையைத் தூக்கிக் கொண்டு போயிருவான். ஒரு பஸ் நிறைந்த பயணிகள் இடையில ஒரு இரவை அதுகும் இயல்பில்லாத இடத்தில கழிக்கிறது எவ்வளவு கஷ்டம். ஏழையளுக்கு பணக்கஷ்டம். பணக்காரரெண்டா அதைவிடக் கஷ்டம். பணக்கார நோயகர் படுக்கைவசதி காற்று, தூசு, பனி எல்லாமே அவைக்கு எதிரியா நிக்கும். பின்ன தங்கிறதெண்டு வந்தா ஏழைக்கும் சரி பணக்காரனுக்கும் சரி விவேக சிந்தாமணி சொல்லுமே ஒரு பாட்டில

பாலுக்கு சக்கரை இல்லையென்பாருக்கும் பருகையற்ற கூழுக்குப்போட உப்பில்லை என்பாருக்கும் கனகதண்டி மேலுக்குப் பஞ்சணை இல்லையென்பாருக்கும் காலுக்குத் தோற்செருப்பில்லை யென்பாருக்கும் கவலை ஒன்றே...

எண்டுசாமம் ஏம மெண்டில்லாம சாமான் லொறியள் ஓடித்திரியிற றோட்டு யாழ் கண்டிசாலை. அந்தநாளயில வாகனம் சூடேறாதெண்டு பொழுது படத்தான் லொறியள் வெளிக்கிடும். இப்படித்தான் கொழும்பாலும் சாமானேத்தின லொறியள் வரும். இடையில புளியங்குளம் தொட்டு மாங்குளம் மட்டும் கொத்து விறகெடுத்துக் கட்டுக் கட்டாய் கூரையில போட்டுக்கொண்டு வருவினம். கேக்கிறதார் மேய்க்கிறதார். 'மைகார்' 'மைரோட்,' 'மைபெற்றோல்' எண்டு போகும். இப்ப என்னவோ புரிந்துணர்வு உடன்படிக்கையாம் சனத்தைத் தாராளமா போகவிட்டிருக்காம். எங்க.... எங்கவிட்டவை பாதையத் தடுத்து வச்சுக்கொண்டு அஞ்சு மணியாச்சு ஐயா வரநேரமாச்செண்டு கட்டுப்பாடு போடுறியள். அவதிப்பட்டுத்தான் வாகனம் ஓடவேணும். அவனைச் சொல்லிக் குற்றமில்லை. 'அயரோ'டுறவன் லச்சக்கணக்கில முதல் போட்டவன் 'பினாஞ்சில' வாகனமெடுத்தவன் - கட்ட வேணுமெண்டா ஓடியோடித்தான் உழைக்கவேணும். நாடுகிடக்கிறகிடையில நரி ஞாயிற்றுக் கிழமை லீவு கேட்டுதாம். சாதாரணமா ஒரு நாட்டின் பிரசைக்கு தான் வாழும் நாட்டுக்குள்ள தான் விரும்பிய இடத்துக்கு சாதாரமா போகவர உரிமை இருக்கு. இஞ்ச... இது.

பாதையத்திறந்திட்டம் எண்டு ஊரெல்லாம் பேர், ஆனா முழுசாத் திறக்க மனம் வரயில்லை. பத்துக்கொத்து அரிசி பிடிக்கிற பையில பத்துக்கொத்து அரிசி தான் போடலாம். பன்னிரெண்டு கொத்துப் போட்டாலும் அது வெடிக்கத்தான் செய்யும். ஒரு நாளைக்கு இத்தினை வாகனந்தான் ஓடும் எண்ட தெருவில அதுக்கு மேல விட்டா ஒரு வீதி ஒழுங்கு இருக்கோணும். அதுகும் இல்லை. இன்னும் ஏனைன் பாதையில வீதி விபத்துக்கள் குறையேல்லை எண்டா அதுக்கு வீதியில போற வாகனத்தை மட்டும் குறை சொல்லாம அவங்கள நிதானமாப் போறதுக்கு நேரக்கட்டு பாட்டையும் நீக்க வேணும். பெரிய தெருக்களில தற்காலிகமாகவெண்டாலும் நடுவில தடைபோட்டு பாதையை அகலமாக்கி ஏதும் செய்யோணும். ஏனெண்டால் இஞ்சாலிப்பக்கம் ரயில்இல்லை. ரெண்டு பாதையாலபோகவேண்டிய சுமைய ஒரு பாதையாலதான் கொண்டு போறம். எண்டைக்கு எங்கட மண்ணில உண்மையா பாதை திறக்கப் போறாங்கள் இதே வாகனங்கள் அவங்கட கட்டுப்பாட்டுப் பகுதிக்க எப்படி விபத்துகள் இல்லாம ஓடுது. அதுபோல இஞ்சயும் ஓடும். பாதைய உண்மையா முழுநாளும் திறந்து விட்டுப்பாருங்கோ. பதற்றங்குறையும். அட.. போகலாந்தானே. எப்ப போனாலும் எண்ட ஆறுதல் வரும். அதுவரைக்கும் இந்தப் பாதையில போறவனை பதற்றத்துக்குளாக்கி இஞ்ச படுகொலைகளைத் திட்டம் போட்டுத்தான் செய்யினம் எண்ட மக்களின்ர கருத்தை ஆரும் மறுக்கேலாது.



இன்னும் பிரதான முதன் மைச்சாலையளின்ர அகலம் கூடவேணும். முறிகண்டிக்கும் கராயப்போக்குச் சந்திவரைக்கும் தான் விபத்துக்கள் கூடுது எண்டா காரணத்தை பாருங்கோவன். நகரம், கழிப்பிடவசதி, ஓய்வு கொள்ள முந்துற அவசரம். அங்கயும்போயென்ன பற்றாக்குறை வீதித் தரிப்பிடம் இதெல்லாம் விரைவாக முடிக்கவேணும். அஞ்சுமணி நெருங்கும் காலம் வெளிக்கிட்டு வாடகைக்கு யாழ்ப்பாணம் போறவர் வேகமா திரும்பி வவுனியா வரவேவேணும் தப்பினா ஒருநாள் தங்க வேண்டி வந்தா அவற்ற அண்டைய லாபமும் போய் முதல்லயும் சேதப்பட்டுபோம்.

நாலா பக்கத்தாலும் யோசிச்சுப் பாருங்கோ. பாதை திறப்புக்கும் பரிதாபமரணங்களுக்கும் எவ்வளவு நெருங்கின தொடர்பிருக்கெண்டு.. இது (இ)றைவன் (Driver) செயலல்ல இறை(அரசு)வன் செயல்.

குரலின் இசையில், வாழ்வின் இசை அழுந்தி விடும் ஆபத்து உள்ளது. - மகாத்மா காந்தி

# சிறுகதை இலக்கிய ஆய்வுரை

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

ஈழத்தமிழ இலக்கியப் பரப்பிலே தனக்கோர் நிலையான இடத்தை சிறுகதை பிடித்துள்ள காரணத்தால், அது பற்றிச் சில ஆய்வுக் குறிப்புகள் எழுதும் துணிவு பிறந்துள்ளது. மேலைத் தேய இலக்கிய கோட்பாடுகள் தமிழ் இலக்கியச் சிந்தனையூடாகப் படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற வேணவா எமக்குள் எழுந்துள்ளது.



ஈழத்து ஆய்விலக்கியம் ஈழத்தின் படைப் பிலக்கியத்தின் அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை என்பதை வாதிட்டு நிறுவவேண்டிய அவசியம் இல்லை. படைப் பிலக்கியம் வேறு, ஆய்விலக்கியம் வேறு என்று கொள்ளலாகாது. இவை இரண்டும் தமிழியலின் இருகூறுகளாகும். இலக்கிய உலகில் திறனாய்வு இன்றியமையாததொன்று. படைப்பையும் ஆய்வையும் பிரித்துப்பார்க்க முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று உறுதுணையாகச் செயற்படுகின்றன.

நிறைவுகளைப் பாராட்டியடி குறைகளைச் சுட்டிக் காட்டுவது திறனாய்வின் இயல்பு. திறனாய்வு மொழிவளர்ச்சிக்கு வழிகாட்டி. ஒரு படைப்புப் பற்றிய ஆழமான ஆய்வைத் திறனாய்வு எனலாம். அடிக்குறிப்பு, ஒப்பு நோக்கு, விரிவுரை, மேற்கோள், பிறமொழிச்செய்தி, கண்டனம் போன்ற ஆய்வுநூல் அம்சங்கள் இலக்கியப்பயிற்சி உள்ளோருக்குப் பெருவிருந்தாகின்றன. மேற்குலகில் ஆய்வு நூல்களுக்கு இலக்கிய அந்தஸ்துக் கிடைகின்றது.

ஏறத்தாழ 50-60 வருட வரலாற்றை ஈழத்துச் சிறுகதை இலக்கியம் கொண்டுள்ளது. நாவல் இலக்கியத்தின் வயது ஒரு நூற்றாண்டைத் தாண்டி விட்டது. அன்றும் இன்றும் ஈழத்துப் படைப் பிலக்கியங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. தமிழகத்தின் சிறுகதைகளும் நெடுங்கதைகளும் பெருவணிகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் வேறுபட்ட இலக்குடன் காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் ஈழத்துச் சிறுகதைகள் பொது நீதிநெறி பற்றிக் கூறுவனவாகவும் சுவையான குடும்பக்கதை சொல்வனவாகவும் அமைந்தன. தற்கால ஈழத்துச் சிறுகதைகள் பெரும்பாலும் வாழ்வின் நெருக்கடிகளை எடுத்துக் கூறுவனவாகவும் சமுதாய முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுவனவாகவும் விளங்குகின்றன.

"சிறுகதைத்" என்ற சொற்றொடர் தன்னைத்தான் விளங்க வைக்கும் தன்மை வாய்ந்தது. அதாவது நீளத்திலும் சொல் எண்ணிக்கையிலும் குறைந்த கதை என்று பொருள் கொள்ளலாம். சிறுகதை என்றால் என்ன வென்று ஐயம்திரிபற வரையறை செய்வது கடினம். அர்த்தமுள்ள வரையறுப்பு இதுவரை செய்யப்படவில்லை. சிறுகதை ரகங்கள் எண்ணற்றவை. தனது அடையாளத்தை இழக்காமல், சிறுகதை எந்தளவுக்கு நீள முடியும் என்பது தீர்மானிக்கப்படவில்லை.

ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதே சிறுகதை என்கிறார் எட்கார் அலன்போ (1809 -1849) (Edgar Allen Poe). இவர் நவீன சிறுகதையின் பிதாமகர் என்று கொள்ளப்படுபவர். இக் கருத்தை விரிவுபடுத்திய வேறு விமர்சகர்கள், 1000 சொற்களுக்கு உட்பட்டதே சிறுகதை என்கிறார்கள். இதை மறுத்து 20000 சொற்கள் வரை சிறுகதை நீளலாம் என்று அடித்துக் கூறுவோர் உளர். 20000 சொற்களுக்கு மேல் சென்றால் அது குறு நாவலாக மாறிவிடும் என்ற பொதுவான கருத்து மேற்குலகில் நிலவுகின்றது.

நாவல் எனப்படும் நெடுங்கதைக்கும் சிறுகதைக்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. அனேகமாக சிறுகதையில் ஒற்றை நிகழ்ச்சி மாத்திரம் நடைபெறக் காணலாம். சிறுகதை விவரிக்கும் காலப்பகுதியும் மிகவும் குறுகியது. சிறுகதையில் வரும் கதை மாந்தர்களும் எண்ணிக்கையில் குறைந்தவர்கள்.

பெருந்தொகைச் சம்பவங்கள், ஏராளம் கதை மாந்தர்கள், சிக்கனம் பாராட்டாத சொற்பிரயோகம், நீளமான காலப்பகுதிகள் என்பன நெடுங்கதையின் அம்சங்களாகும். பொதுவாக சிறுகதையின் நிகழ்ச்சிக்களம் ஒரு குறிப்பிட்ட இடத்தோடு நின்றுவிடும். இக்கட்டுப்பாடு நெடுங்கதைக்கு இல்லை. பல நாடு நகரமென அதை நகர்த்திச் செல்ல முடியும். கதை மாந்தர்கள் ஊடாக நீண்ட உரையாடல்களையும், தத்துவக்கருத்துக்களையும் வெளிப்படுத்தும் வசதி நெடுங்கதையில் உண்டு. சுவை குன்றாமல் கூறத் தெரிந்தால், எதைத்தான் ஒரு நாவலில் புகுத்த முடியாது என்கிறார் ஒரு விமர்சகர்.

ஒரேயொரு கதையம்சத்தைத் தெரிந்தெடுத்து அதைச் சுருக்கமாக விரிவுபடுத்தும் வசதி சிறுகதையில் கிடைக்கின்றது. அலங்காரச் சோடனைகள், சொற்சித்திரங்கள் என்பன அனுமதிக்கப்படுவதில்லை, அவை நெடுங்கதைக்கு மிகவும் பொருத்தமான அம்சங்கள். சிறுகதையின் வெற்றி சுருங்கக் கூறிவிளங்கவைப்பதில் தங்கியிருக்கிறது. அதற்காக சொற்களின் எண்ணிக்கை குறைவுதான் சிறுகதையின் முக்கிய அம்சம் என்று எண்ணக்கூடாது.

சிறுகதை ஆசிரியர்களை அவர்கள் கொண்டிருக்கும் பார்வை நோக்கின் அடிப்படையில் இரு வகைப்படுத்தலாம்:

(அ) தமது சமகால அரசியல், பொருளாதார, சமுதாயக்கட்டமைப்புச் சூழல் வரம்புக்குள் நின்று கொண்டு அவற்றின் ஊடாக உலகைக் காண்பவர்கள்.

(ஆ) மேற்கூறிய சூழல் வரம்பைத் தாண்டி பொது மானுடத் தளத்தில் நின்று தமது வாழ்வுப் பரப்பையும் உலகையும் நோக்குபவர்கள்.

சிறுகதையையும் பிறவகைப் படைப்பிலக்கியங்களையும் மேற்கூறிய வரைவுகளின் ஊடாகப் பார்க்க முடியும். இந்த வரைவுகள் எல்லா நாடுகளுக்கும் படைப் பிலக்கியங்களுக்கும் பொருத்தமாக அமைகின்றன. இரண்டில் எது உயர்ந்தது என்று கூற இயலாது. கதை சொல்லும் முறையில்தான் உயர்வு தாழ்வு தங்கியிருக்கின்றது.

பாஞ்சாலி சபதத்தின் அறிமுகவுரையிலே பாரதி, "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று செய்து தருவோன் நமது தாய்மொழிக்கு புதிய உயிர் தருவோனாகிறான்." என்கிறார். இதில் பொதிந்துள்ள கருத்துக்கள் சிறுகதையின் உடலமைப்புக்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றன.

நவீன ஆங்கிலச் சிறுகதைக்கு இன்னும் 200 வயது ஆகவில்லை. 1700ஆம் ஆண்டிற்கு முன் வாழ்ந்த கதை சொல்லுவோர் கவிதை வடிவத்தையே பெரிதும் விரும்பினர். இதைத் தொடர்ந்து 18ம் நூற்றாண்டில் நாவல் எனப்படும் நெடுங்கதையின் யுகம் மேற்கில் ஆரம்பித்தது. மிகவும் பெரியனவாகவும் பல பாகங்கள் கொண்டவையாகவும் அந்தக் காலத்து நெடுங்கதைகள் அமைந்தன. 19ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் இன்றைய வடிவத்திலான சிறுகதை பிரித்தானியா, அமெரிக்கா, ருஸ்சியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் தோன்றின.

(மிகுதி அடுத்த வாரம்...)


# தாலாட்டுப்பாடல்கள்

வல்வை. ந. அனந்தராஜ்

**நாட்டாரிலக்கியம்** இன்றும் சிறப்பாக வைத்துப் பேசப்படுவதற்கு காரணம், ஒரு மனிதனின் பிறப்பில் இருந்து இறப்பு வரையான வாழ்வியலை உணர்வு பூர்வமாக எடுத்துக் காட்டுவதேயாகும்.

பிறப்புச் சடங்கும், அதை அடுத்து முப்பத்தியோராவது நாள் தொட்டிலில் போடும் சடங்கும் அதனோடு இணைந்த பாடல்களும் தாய்மையின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகவுள்ளன. குழந்தையை தொட்டிலில் போட்டு நித்திரையாக்கும் பொழுது தாலாட்டுப் பாடப்படுகிறது.

"தாய்மை உலகுக்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு" என்று கூறியுள்ளார் தமிழண்ணல் (காதல் வாழ்வு)



நாட்டார் பாடல்களின் அமைப்பைக் கொண்ட தாலாட்டுப் பாடலை முதன் முதலில் தமிழில் பாடியவவர் பெரியாழ்வாராவார். இவர் கண்ணனைக் குழந்தையாக உருவகித்து தாலப்பருவம் என்ற பெயரில் தாலாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார்.

**"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்**
**பேணி உனக்குப் பரமன் விடு தந்தான்**
**மாணிக் குறளே தாலேலோ**
**வையம் அளந்தானே தாலேலோ"**

என்ற திருப்பா சுரத்தில் கண்ணணைத் தாலாட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

குழந்தையை தூங்கவைப்பதற்கும், உணவு ஊட்டுவதற்கும் தாலாட்டுப் பாடல்கள் தாய்மாரினாலும், மற்றவர்களினாலும் இசையுடனும் இனிமையுடனும் பாடப்படுகின்றன.

"குழந்தையை நித்திரையாக்கல், அமைதியாக்கல், பாலூட்டல், உடற்பயிற்சி, இசையுணர்வு, இறையருள் வேண்டல், தாயின் மகிழ்ச்சி வெளிப்பாடு, எதிர்கால இலட்சியம், பரம்பரை பெருமை கூறல்,குடும்ப நிலை கூறல், அருகில் இருப்போருக்கு தமது கருத்தை அறிவித்தல் போன்ற உபயோகங்களை உள்ளடக்கியதே தாலாட்டு"

என்று ஒரு விரிவான விளக்கத்தை தனது "ஈழத்து நாட்டார் பாடல்கள்" (1979) என்ற நூலில் கலாநிதி இ. பாலசுந்தரம் குறிப்பிட்டுள்ளார். எனவே தாலாட்டுப் பாடல் என்பது குழந்தையை மையமாக வைத்து அதாவது தாய் அல்லது உறவினர்களால் பாடப்படுவது. அதில் கருத்தாழமும் இருக்கும், வரலாறும் பொதிந்திருக்கும். இதனை அடிப்படையாகக் கொண்டே, வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம்,

"யாழ்ப்பாணத்து நாட்டார் வழக்கில் சொல்லமைதியை விடக் கருத்தமைதியே முக்கிய இடம் பெறுகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார். போலும்.

ஒபடுத்தப்படுவதன் மூலம் தந்தை, பாட்டி, மாமன், மாமி, என்போரை அடையாளம் காண்கின்றது. தாய் தன் ஒரு

குழந்தை பிறந்தவுடன் முதலில் அறிந்து கொள்வது தாயைத்தான் அதன்பின் அந்தத் தாய் அறிமுகப்படுத்துவதன் மூலம் தந்தை, பாட்டி, மாமன், மாமி என்போரை அடையாம் காண்கின்றது. தாய்தன் குழந்தைக்குப் பாலூட்டும் பொழுதே, தான் பாடும் பாடலு டாக இந்த உணர்வுகளை ஊட்டுவதுதான் தாய்மையின் சிறப்பாகும்.

தாலாட்டுப் பாடலில் குழந்தையை மையமாக வைத்தே கருப்பொருள் அமைக்கப்படுகிறது.

பொதுவாக எல்லாப் பிரதேசங்களிலும் வழக்கத்தில் இருந்து வரும் தாலாட்டுப்பாடல் அடிகளில்

**"ஆராரோ.... ஆரிவரோ.....**
**ஆராரோ.... ஆரிவரோ**
**கண்ணுறங்கு கண்ணுறங்கு"**

என்றே அமைந்து வருவதைக் காணலாம். அதனை அடுத்து வரும் அடிகளே தனது குடும்பம், குலப் பெருமை, ஊரின்பெருமை, உற்றார் உறவினர், வீரம் போன்றவற்றின் பொருள் பொதிந்த அடிகள் வருகின்றன.

வடமராட்சியின் வடக்கு பிரதேசங்களான தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி பிரதேசங்களில் பிள்ளை பிறந்து முப்பத்தியோராம் நாள் விமரிசையாக ஒரு சமயச் சடங்காகக் கொண்டாடப்படுகின்றது.

முப்பத்தியோராம் நாள் அன்று உற்றார் உறவினர், அயலவர்கள் எல்லோரும் அந்த வீட்டில் ஒன்று சேர்ந்து பெருவிழாவாகக் கொண்டாடுவர். குழந்தையின் தலை மயிரை மழித்து அறுகம்புல் கலந்த பாலினால் தலையில் வைத்து முழுகவார்த்துப் புதுச்சட்டை போட்டுக் கோயிலுக்குக் கொண்டு செல்வார்கள். அங்கு விசேட பூசைவழிபாடுகள் இடம் பெறும். பின்பு வீட்டிற்கு வந்ததும், குழந்தையின் தந்தை வழிப்பேரன் தொட்டிலில் முன் நிறைகுடம் வைத்துப் பிள்ளையார் பூசை செய்து, தொட்டிலுக்கு தீபம் காட்டுவார். அதனைத் தொடர்ந்து "தேவேந்திர முகூர்த்தம்" என்று கூறப்படும் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு தொட்டிலில் குழந்தையை இட்டு ஆட்டி விடுவார். தொட்டிலைத் தாய்வழிப் பெற்றோர் செய்து கொடுப்பர், குழந்தைக்கு அரைஞாண் கயிறு, சங்கிலி, பஞ்சாயுதம், காப்பு என்பன செய்து போடுவார்கள்.

அதனைத் தொடர்ந்து அங்கு இருக்கும் சிறியதாய், பெரியதாய், பேர்த்தி ஆகியோர் தொட்டிலை ஆட்டித் தாலாட்டுப் பாடலைப் பாடி மகிழ்விப்பார்கள்.

தொடரும்...

மனிதனால் செய்யப்பட்டுள்ளதை, எல்லா மனிதர்களாலும் செய்ய முடியாது. - எட்வர் யங்.

பயணக்கட்டுரை



# சோறு வேணும்

16.02.2003, ஞாயிறு மாலை 03 மணி. கிளிநொச்சி மகா வித்தியாலயம். படைப்பாளி தாமரைச் செல்வி அவர்களது 02வது சிறு கதைத்தொகுதி வெளியீட்டு விழா. அன்று காலை 9.30 மணிக்கு விபரம் கிடைக்கிறது.

மானுடத்தின் தமிழ்க் கூடலில் சங்கமித்த உறவு! கனம் பண்ணப்பட வேண்டியவர். மரணங்கள் மலிந்த பூமியின் மறக்கப்பட முடியாத அவலங்களை, அத்தியாயங்களை உள்ளதைஉள்ளபடியே பதிவாக்கும் உண்மை விளம்பியாய். ஆவணக் காப்பகமாய் அவர் என்னில் பதிவாக்கியிருப்பவர். அவரது மகத்தான பணியில் எனக்கென்றும் மதிப்பு.

பயணிப்பதாய் தீர்மானம் கொண்டாயிற்று. நீராடுகையில் கருக்கொண்ட கவியுடனும் பிரசவிக்காவிடின் அது குறைப்பிரகாசமாகி சிதிலம் ஆகி விடுவதை பல தடவைகள் அனுபவித்திருக்கிறேன். பிரசவமாக்கி விட்டு நிமிர்கையில் 10.30.

பேருந்து தரிப்பு நிலையம் போனபோது 11.30. 1.30 இற்கே பஸ் இருப்பதாய் அறிவித்தல். 1.30 இற்குப் புறப்பட்டு 3.00 மணிக்குச் சென்றடைய முடியுமா? கேள்வி பிறந்தது. முடியும் என்றே தோன்றிற்று. 2 மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும்.

நல்ல புத்தகங்கள்! நல்ல நண்பர்கள் போல கைவசம் இருக்கையில் காத்திருப்பு ஒன்றும் கடினமானதில்லை. வலிநிவாரணி போல "முனியப்பதாசன் கதைகள்" சிறு கதைத்தொகுதி கைவசம் இருந்தது.

எடுக்க வேண்டிய அவசியம் இன்றி டிப்ளோமா வகுப்பிற்காய் சென்று வந்திருந்த "நல்ல குருநாதரின்" அறிமுகம். அவருக்குத் தனித்த காவியம் படைக்கப்படல் தான் பொருத்தமானது. சில குறிப்புக்கள் மட்டும் தருகின்றேன்.பயண அனுபவமாய்.

மூங்கிலாறு 'முனியப்பதாசன்' அவர் .படித்தவர்களுக்கு குறிப்புப் போதும்.தெரியாதவர்களுக்கு சிலவரிகள்.

2002 ஆசிரியர் தினம். முதலிடம் பெற்ற எழுத்துருவாக்கம். 'ஒருநாள்லீவு' வாசித்தவர்களுக்குப் புரியும். இவர் அந்தரகம். அவருடன் பின்னிக்கொண்ட தேசாபிமானம். 'தேசம் உனக்கு என்ன செய்தது' என்பது விடுத்து 'தேசத்திற்கு என்ன செய்தேன்' என்ற வலியோடு.

ஆக்க கர்த்தாக்களையும் ஆள்பவர்களையும் கூட அச்சில் வார்ப்பவர் ஆசிரியர். ஆசிரியரின் குடைவு அநாவசியம் என்றே தோன்றிற்று. எடுத்துக்கொண்ட பணியில் செம்மை. அவரை உணர்தலே போதும்! தாழ்வு அநாவசியம். என்றே தோன்றிற்று

மூங்கிலாறு. ஆசிரியர் விடை பெற்றுக் கொள்கிறார். நல்லாசிரியர் ஒருவரை தரிசித்து விட்ட நிறைவு.

4 மணி வெளியீட்டுக் கொட்டகை வெளியீட்டுரையில் திரு. பாலகுமாரன் அவர்கள். 'வலுக் குறைந்தவர்கள்.' விடுத்து 'மாற்றுவலுவுள்ளோர்' 'கிஸ்ரீறியா' விடுத்து 'இயல்பிழப்பு' நோய் வேண்டியதாய்.

ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களின் எளிமையான மதிப்பீட்டுரை. மதிப்பீட்டுரை மறுத்து மாற்றங்களின் அவசியத்தைச் சுட்டி நின்ற நிலாந்தன் அவர்களின் சிறப்புரை.

மதிப்பீட்டுரை புத்தக வெளியீடு நடந்து வாசகர் வாசித்தறிந்த 'அறிதல்' கொண்டு 'பின்னாக' செய்யப்படல் வேண்டும் என்ற சிந்தை கவனத்தில் கொள்ளப்பட்டு கடைப் பிடிக்கப்பட வேண்டியதாய்.

எந்த மண்ணின் மக்களின் மையம் கொண்டு எ(அ)வர் அவலம் சொன்னரோ அவர்கள் வரை வாழ்ந்து அவர்கள் அறிவு நிலை கொண்டு, அவலங்கள் இன்றும் சீராக்கம் பெறாமைகொண்டு காலத்தில் கவனத்திற் கொள்ளப்படும் எனத்தேறினும் மேற்தட்டு வாசகரும் என்றும், பாமரர் அல்லர் படித்தவர் என்றும் துலங்குபவர்களின் தாக்கம் துர்ப்பாக்கியமானது. துகில் எழுப்பப்பட வேண்டியது.

நிகழ்வு நிறைவு பெறுகையில் 5.30. 'செவிக்குணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' செவிக்குணவு உள்ள போது தலைதூக்காத பசி இப்போது தலை காட்டிற்று.

காட்டிக் கொள்ளாது கலகலத்து விட முடியவில்லை. இயல்பு நிலை அது வெளிப்பட்டு விடும்.

தெரிந்தவர்களும் தெரியாதவர்களும், அறிமுகமானவர்களும், அறிமுகமில்லாதவர்களும் பலர். சமாதான கால உள்வருகை போல.

**-ஆதித்தநிலா-**

6.30ஆக இருக்க வேறும் கயல பயணத்தை ஆரம்பித்திருந்தது. முழுநிலவு கண்ணாடியையும் ஊடுருவி அற்புதமாய் காட்சி தந்தபோதும் ரசிக்கவில்லை, சமாதானம் என்ற சப்புக் கொட்டியும் மாற்றங்கள் எதுவுமே நிகழ்ந்து விடாததுபோல

அசதி..... அசதி.... குமட்டல்....

நிதானிக்க கண்களை மூடிய தியானத்தில், என் மௌனத்தைப் போல எங்கட மக்களும் தியானத்தை செய்யினமோ என்ற சிந்தை பரிசிடல் ஆசுவாசமாய்.

பசிதைதால் பத்தும் பறந்து போயவிடுகிறது. 7.20 இருக்கலாம் புதுக் குடியிருப்பு நகரம். பாண் வேணுவதாகாய் கயல் வைக்கிறது. வெறும் பொச்சுப்போல காச்சலுக்குத் தான் நான் பாண் சாப்பிட்டிருக்கிறன். ஏன் தான் பாணில உப்பிடிஒரு வெறுப்பு? இதைகுவிழுந்தி வைச்சிருக்கு, உலகப் பொலிஸ்காரன் உலகமயமாக்கலை வேண்டுவதைப்போல.

கடைக்கு முன்னாலேயே ககவிட்டேன். அநாகரிகம் தான். முடியவில்லையே! இன்னும் சில நிமிடத்துளிகளில் போய்விடலாம். கயரிடம் இருந்து விடை பெறுகையில நிதா உதவ முன்வந்தாள். நோர்வே போல் ஜப்பான்போல.

உதவிறது சரி. உபத்திரவமாகிவிடக்கூடாது. நடந்து எண்டாலும் நான் பையப்பையப் போய்ச் சேருவன். கேட்டால்தானே அவள் ஏறுறன் சரி. உங்கட உதவுறுளியை நிதானமா ஒட்டினாசரி. பள்ளங்கள் திட்டியில் விட்டீரோ அதில இருந்தே இறங்கி நடந்து போறுவன். அவள் ஒப்புக் கொண்டாள்.

7.35 தங்ககத்தில் ஆஜர். நேற்று மதத்தியானம் சாப்பிட்ட சோற்றுக்கு இன்றிரவாகியும் சோறு சாப்பிடாத பசியும், பாத்து ஒடுறன் எண்டு போட்டு இவளோடிய ஓட்டமும் தலை வெடிச்சிடும் போல உணர்வு. முட்டை வெள்ளைக்கரு எடுத்துப் பத்துப் போட்டுக் கொண்டு படுத்ததுதான். 11.10 இந்த விழிப்பு வந்திருந்தது. பசியோட படுக்கிறவனுக்கு முழு உறக்கம் வராது.

பசி! சோறுதான்வேணும். ரொட்டியும் இறைச்சியும் இருக்கு. கோதுமைப்பண்டங்களை எனக்கு பிடிப்பதேயில்லை. பொருமிக் கொண்டு கிடக்கும் போது உதைத் தணிக்க 'டைஜீனோ', பேதியோ வேணும்.

அழுது கொண்டே சிரித்துக் கொண்டிருந்தேன். எனக்கு அழத் தெரியாது என்று அசிங்கங்கள் அதிகரித்து அருமை பெருமையா அழுகையில் என் தங்கை கட்டியிருக்கிறாள். அரக்கி அரக்கி எண்டுவாள். இரக்கமில்லாதவன் நான் என்பது அவள் நிலைப்பாடு.

'சமாதானம்' நிச்சயமாய் இது இயல்பு நிலையாய் இருக்க முடியாது. இயல்பு நிலைக்கான சாத்தியத்தை எங்கும் காணோம். A9 ஓட்டமும் , பல நாட்டுப் பேச்சு வார்த்தைகளையும் தவிர.

நெகிழ வேண்டிய நேரமல்ல!. நெறிப்படுத்தலுக்கான நேரம்! நடுநிசி தாண்டி 1/2 மணித்தியாளம் கடந்து போட்டுது. இரண்டு கண்டம் கடந்தது போல இரண்டு முறடு தண்ணீர் விட்டுக் கொள்கிறேன். என் கண்ணீர் மையாய் வழிந்து கொண்டிருந்தது.

எனக்குச் சோறு தான் வேணும். ரொட்டியிருக்கு... சாப்பிடட்டாம். பசியை பகட்டுப் பண்டம் ஆற்றுமோ? சோற்றால் மட்டுமே என் பசியை ஆற்ற முடியும். ரொட்டி விருப்பம் எண்டு தான் எடுத்து வச்சவயாம். அருகிலிருந்தவள் சொன்னாள்.

எது எது எப்பெப்ப எனக்கு விருப்பம் எண்டு இத்தனை காலம் என்னோட இருந்த இவளாளேயே புரிஞ்சு கொள்ள முடியேல்ல. அவள் வந்து சில மாதங்கள் தானே!. சில மாதங்கள்... ம்... ஒரு வருசம் ஆகுது தானே.

எனக்குச் சோறுதான் வேணும் 'நிதி' அவள் மாதிரி பழஞ் சோற்றுப்பிரியை எங்கயன் மறைச்சு வைச்சிருப்பாள்! பொறி தட்டிற்று. இவ்வளவு நேரம் பார்க்காம அழுது கொண்டிருந்திருக்கிறன். சமாதானத்தை சல்லடை போட்டுப் பார்க்காத சமானியர்கள் போல

நல்ல ஒரு பிடி. புத்துயிர்ப்பு வந்திட்டுது. 12.45 புத்தகத்தைப் புரட்டுகிறேன். 'அழுவதற்கு நேரமில்லை' தாமரைச்செல்வி அவர்களின் சிறுகதைத் தொகுதித் தலைப்பு. பொருத்தமான தலைப்பு!

'அயர்வதற்கும் நேரமில்லை' அடுத்த அத்தியாயம் ஆரம்பிக்கப்பட வேணும். எண்ணம் என்னுள் குமிழியிடுகிறது.

எத்தனை அர்ப்பணிப்புகள்! இழப்புக்கள்! துயரங்கள்!... இழப்பதற்கு இன்னும் என்ன இருக்கு...?

'விழிப்புத்தான் விடுதலைக்கு முதறபடி' தேசியத் தலைவர் அவர்களது சிந்தனை வரிகள் வலுவூட்ட எனக்குச் சிறகுகள்! ஆயிரம் ஆயிரம் பல்லாயிரமாய்.....


எமது மக்களுக்கு
தமிழீழ வைப்பகம் வழங்கும்
சுரித நகையடைவுக்கடன் சேவை

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

குறைந்த வட்டி வீதம்

மாதாந்தம் 2% வட்டி மட்டுமே தற்போது அறவிடப்படுகின்றது.
(ஆண்டுக்கு வட்டியாக 24 நூற்றுக்கூறு மட்டும் )

கூடிய கடன் தொகை

தற்போது கடன் தொகையாக ஒரு பவுணுக்கு
ரூபா 6300/= வரை வழங்கப்படுகின்றது.

நீடித்த சேவை

தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும் மாலை
3.00 மணி வரை நகையடைவுக்கடன்
சேவையை வழங்குகின்றோம்.

தமிழீழ வைப்பகம்

உங்களின் நிறைவே எங்களின் மகிழ்ச்சி
வாருங்கள் உங்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறோம்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-8038)

# புறந்தள்ளப்படுமா யாழ் மக்களின் கோரிக்கை

கடந்த சில வாரங்களாக யாழ் மக்களினதும் பொது அமைப்பினதும் கடும் கண்டனங்களையும் ஆட்சேபங்களையும் மீறி படையினர் யாழ் நகரில் அமைந்துள்ள மாநகரசபை வளாகம் மற்றும் அதன் சுற்றாடல் பகுதியில் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் படைத்தரப்பு ஈடுபட்டுள்ளது.

இதன் காரணமாக மக்களின் ஆட்சேபனைகள் எழுந்ததை அடுத்து இம் முகாமை வேறு ஓர் இடத்தில் நிறுவுதல் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


இப் புதிய இராணுவ முகாம் அமைப்பது தொடர்பாக விடுதலைப்புலிகள் தமது ஆட்சேபத்தினை உத்தியோக பூர்வமாக அறிவித்தும் விட்டனர்.

இயல்பு நிலையைத் தோற்று விப்பது தொடர்பாக பேசிக்கொண்டாலும் அது நடைமுறையில் சாத்தியப்படுவதில்லை என்பதையே மாநகரசபை வளாகத்தில் அமைக்க முயற்சிக்கும் இராணுவ முகாம் விவகாரம் தெளிவு படுத்துகின்றது.

ஒரு புறம் இயல்பு நிலையைத் தோற்று விக்கவென உயர்பாதுகாப்பு வலயம் எனவும் பொதுமக்களின் வீடுகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றுதல் எனவும் பேசிக்கொண்டு மக்களின் சிவில் நிர்வாக வேலைத்திட்டங்களை பாதிக்கக் கூடிய இடங்களில் முகாம் அமைக்க முயற்சிக்கப் படுகின்றது.

பொதுவாகவே தமிழ் மக்கள் எப்போதும் இராணுவ பிரசன்னங்களை விரும்புவதில்லை அதனை அவர்கள் அச்சம் தோய்ந்த பார்வையோடும் தமது இயல்பு வாழ்வை பாதிக்கும் ஒரு சக்தியாகவே பாக்கின்றனர்.

இந்நிலையில் ஆறாங் கட்டப் பேச்சு வார்த்தையின் போது முதன் முதலாக விடுதலைப் புலிகளோடு உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தல்கள் பற்றி பேசப்பட்டுள்ள நிலையிலும் இந்த உள்ளூராட்சி சபை நிர்வாக அலகிற்குள் அடங்குகின்ற மாநகர சபை வளாகத்தில் இராணுவ முகாம் அமைக்க எடுக்கப்படும் முயற்சியானது புதிய பல சிக்கல்களை தோற்றுவிக்கவே செய்யும்.



உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக புலிகளின் நிலைப்பாடு எத்தகையது என்ற நிலை இன்னும் முழுமையாக தெளிவுபடுத்தப்படாவிட்டாலும் இந்த இராணுவ முகாம் விவகாரம் பிரச்சினைக்குரியதாகவே இருக்கும்.

இங்கு அமைக்கமுயற்சிக்கப்பட்ட புதிய இராணுவ முகாமானது சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட் டல்களிருந்து இராணுவம் வெளி யேறுவதற்கான நடவடிக்கை என தெரிவிக்கப்படலாம் ஆனால் மாநகர சபை வளாகத்துள் அமைக்கப்படுவதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளை தோற்றுவிக்கக்கூடிய இடத்தில் அமைப்பது என்பது எந்த வகையில் நோக்குவது?

மாநகரசபை வளாகத்தில் அமைக்கப்படுகின்ற இராணுவ முகாமானது யாழ்ப்பாண மாநகர சபைப்பிரதேசத்தில் பெரும் நிலப்பரப்பை விழுங்குவதோடு யாழ்நகரின் அண்மையிலிருந்து அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு பாரிய இராணுவ முகாமாகவும் இருக்கப்போகின்றது.

இதேவேளை புலிகளும் மாநகரசபை வளாகத்தில் அமைக்கப்படுகின்ற இராணுவ முகாமை நிறுத்தி அதற்குப் பதிலாக வேறு ஒரு இடத்தில் அமைக்கப் புலிகளுடன் ஆலோசிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இவ் ஆலோசனையை புலிகள் யாழ் மக்களின் சார்பாக கேட்டிருப்பதாகவே பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவுக்கு அரசியல் துறைப் பொறுப் பாளர் தமிழ்ச் செல்வன் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்கள் தமக்கு இடையூறாக இருக்கும் என கருதும் இப்பகுதியில் அமைக்கப்படும் இராணுவ முகாமை மக்களின் சார்பு நிலையில் நின்று சிந்தித்து ஒரு பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதே முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிக்கு அனுகூலமாக இருக்கும்.

**தாரகன்**

மக்களின் கோரிக்கைகளை புறந்தள்ளி இராணுவ நலன்களை மட்டும் அரசு கவனத்தில் எடுக்குமாயின் தமிழ் மக்களின் அபிலாசைகளை எந்த காலத்திலும் தீர்க்க முடியாத அரசாகவே இருக்கும்.

ஒரு வேளை படைத் தரப்பின் கட்டுப்பாடு சனாதிபதி சந்திரிகாவின் கைகளிலேயே இருப்பதால் இதற்கு வேறெதனையும் செய்ய முடியாதுள்ளது என புறந்தள்ளக்கூடும்.

இப்படைமுகாம் அமைக்கும் இராணுவத் தரப்பிற்கு மக்களிற்கான இப்பிரதேசத்தின் தேவை நன்கு புரியும்.

ஏனெனில் இச் சுற்றுப் புறத்தில் தான் யாழ்ப்பாணத்தின் முக்கிய பாடசாலைகளும், அரசினால் 1983இல் எரியூட் டப்பட்டு தற்போது புனர் நிர்மானம் செய்யப்பட்டுள்ள யாழ் பொது நூலகமும் அமைந்துள்ளது.

இதனால் யாழ்ப் பாணத்தில் கல்விக்கும் அறிவுத் தேடலுக்கும் இன்னும் ஆபத்து நீங்கிவிட்டில்லை என்பது போலவே இருக்கின்றது.

இதுவே படைத்தரப்பு யாழ் மக்களை விசனமடைய செய்வதற்கு காரணமாகவும் இருக்கும்.

அரசு இச் சமாதானக் காலத்தில் எந்தளவிற்கு இடையூறு அற்ற சுமுகமான நிலையை தமிழ் மக்களிற்கு வழங்குகின்றது என்பதிலேயே அரசின் மீதான தமிழ் மக்களின் பார்வையில் மாற்றங்களை தோற்றுவிக்கலாம்.

ஆனால் மாற்றங்களை தீர்வுகளாக கணிப்பிடப்பட்டால் தமிழ் மக்கள் ஏமாந்து போக மாட்டார்கள் என்பது கடந்தகால உண்மைகளாக இருக்கின்றது.

இந்த வகையில் யாழ் மாநகரசபை வளாகத்துள் அமைக்க முயற்சிக்கும் இராணுவ முகாமினை பொறுத்தமான மாற்று இடம் ஒன்றிற்கு நகர்த்த இருக்கும் முயற்சியே பொறுத்தமானதாக இருக்கும்.


"திரியொன்று உருகாமல் ஒளி இங்கு இல்லை
விதையொன்று மடியாமல் பயிர் வளர்வதில்லை"

**திருமறைக் கலாமன்றம்**

வழங்கும்
துவக்கால ஆற்றுகை

**பலிக்களம்**

(திருப்பாடுகளின் காட்சி)

காலம் : ஏப்ரல் 10, 11, 12, 13-2003 நேரம்: மாலை 7.00 மணி இடம் : மன்ற அரங்கு
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
4 நாட்களுக்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் - ஆசனப் பதிவு 20 ரூபா மட்டுமே

இறைமகன் இயேசுவின் கல்வாரிப்பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. / Fax : 021-2222393
E-mail: cpajaffna@eureka.lk
website:www.cpateam.org

(3060)



**கண்ணிவெடி**

**விழிப்புணர்வு வாரம்**

**01-07,04,2003**

**கைவிடப்பட்ட அரண்கள், பதுங்குகுழிகள், இராணுவ முகாம்கள், பயன்தரு மரங்கள் உள்ள பகுதிகள், நீர்நிலைகள் முதலிய இடங்களில் மிகவும் விழிப்போடு செயற்படுங்கள்**

வெண்புறா நிறுவனம்

(சி-8043)



**முதலாம் ஆண்டு நினைவுகளில்...**

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 07 | 05 |
| 10 | 04 |
| 1916 | 2002 |



**அமரர் திரு. மரியாம்பிள்ளை - பிரான்சிஸ்**

[சின்னராசா மாஸ்ரர்] சில்லாலை

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறிடுமோ உங்கள் நினைவு
வையத்தில் நீங்கள் வாழ்ந்தது போல்
இன்றும் எம் நெஞ்சில் வாழ்கின்றீர்

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
1ஆம் ஒழுங்கை,
கோயில் புதுக்குளம்,
வவுனியா.

"மல்லிப்பூ வாசம்"
சில்லாலை.

(சி-8045)

# நேர்நோக்கு

## சமூகநிலைக்கு உதவாது

யாழ் நகரின் இருதயப் பகுதியில் படைமுகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் சிறிலங்கா இராணுவம் தீவிரமாக இறங்கியது. இதற்கு மக்கள் மத்தியிலிருந்துகடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இப்பொழுது சன நெருக்கடிமிக்க பகுதியிலிருக்கும் படைமுகாமை அகற்றி அங்குள்ள படையினரை யாழ். நகரில் தொடர்ந்தும் வைத்திருக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும், அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள படை முகாம்களை அகற்றும் விவகாரம் இவ்வாறு ஒரு நெருக்கடி நிலையிலேயே காணப்படுகிறது.

அதாவது பொது இடங்கள், ஆலயங்கள், வீடுகளிலுள்ள படைமுகாம்களை அகற்றுவதற்கு ஒப்புக்கொண்ட அரசாங்கம் இன்னமும் பல முகாம்களை அகற்றவில்லை. அத்துடன் சில முகாம்களை அகற்றப்பேச்சுவார்த்தைகள் நடத்த இணக்கம் காணப்பட்டு காலக்கெடுக்கள் குறிக்கப்பட்டபோதும் அகற்றப்படவில்லை. அவ்வாறு சுபாஸ் விடுதியிலும் ஞானம் விடுதியிலும் நிலை கொண்டுள்ள படையினரை வெளியேற்றுவதற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்தும் அங்கிருந்து அவர்கள் அகற்றப்படவில்லை.

இப்பொழுது அந்தப் படையினரை அகற்றுவதற்கு அவ்விடத்தைவிட முக்கியத்துவம் வாய்ந்த யாழ். நூல்நிலையப் பகுதியில் புதிய முகாமொன்றை அமைக்க சிறிலங்காப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு முகாமைமூடி வெளியேறும் படையினரை எங்கு தங்கவைப்பது என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. இதனை படைத்தரப்பை விட அரசாங்கத்தரப்பே எழுப்புவதானது படையினரின் செயற்பாட்டுக்கு அரசாங்கமும் ஆதரவு என்பதையே வெளிப்படுத்துகிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வெறுமனே ஒரு யுத்தநிறுத்த ஒப்பந்தமாக புலிகளோ தமிழ் மக்களோ பார்க்கவில்லை. இதன் மூலம் தமிழ் மக்கள் இராணுவ நெருக்குவாரங்களிலிருந்து விடுபட வேண்டும். இயல்பு வாழ்வுக்குத் திரும்பவேண்டும். சமாதான சூழல் ஒன்று உருவாக வேண்டும். அவ்வாறான தொரு சூழலிலேயே சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான புறநிலை ஏற்படும் என விடுதலைப்புலிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இராணுவ நெருக்குவாரங்களுக்கு மத்தியில் அரசியல் தீர்வொன்று குறித்துப்பேச முடியாது எனத்தெரிவித்து வருகின்றனர். ஆனால் இவ்விடயத்தில் ஒப்பந்தம் செய்து கொண்ட அரசாங்கமோ ஒப்பநத்தை மதித்து நடக்கவேண்டிய படைத்தரப்போ நேர்மையாக நடந்துகொள்ள முற்படவில்லை. பல லட்சக் கணக்கான மக்களின் நலனை விட இராணுவ நலனிலேயே அக்கறை கொண்டவர்களாக இருந்து வருகின்றனர்.

ஒப்பந்தத்திற்கு ஏற்ப படை முகாமை அகற்றுவது போலக்காட்டிக்கொண்டு அவற்றுக்கு அருகிலேயே புதியமுகாம்களை அமைக்க முயற்சித்தது இயல்புநிலை தோன்ற எவ்விதத்திலும் உதவப்போவதில்லை என்பதுடன் புதிய நெருக்கடிகளையும் உருவாக்கக் கூடியதாகும்.

இது போன்றதே உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்களின் குடியிருப்புகளில் அவர்களை மீளக் குடியமர அனுமதி மறுப்பதாகும்.

இவ் வாறானதொரு ஆக்கிரமிப்பு மனோபாவம் தொடருமாயின் எத்தனை வருடங்கள் கடந்தாலும் சுமுகமான நிலை ஏற்படவும் மாட்டாது நிரந்தர அமைதிச்சூழல் திரும்பவும் மாடடாது எனத்துணிந்து கூறலாம்.

**வேலவன்**

(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஐ.நா ஆயுத பரிசோதகர்கள் குழுத்தலைவர் கான் பீலிக்ஸ் ஈராக்கில் சட்ட விரோத ஆயுத உற்பத்திக்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று உறுதி யாகக் கூறியிருந்தார். அத்துடன் அவரின் பரிந்துரையில் அடிப்படையிலேயே அல்சமுத் ஏவுகணைகளையும் ஈராக் அழித்தது. அத்துடன் தனது ஆயுதப் பட்டியலை ஈராக் ஒப்படைத்தது குறித்து பீலிக்ஸ் திருப்தி தெரிவித்திருந்தார். "ஒரு யுத்தம் ஏற்படுமாக இருந்தால் இரசாயன உயிர் கொல்லி ஆயுதங்களை ஈராக் பாவிக்காது" என தான் நம்புவதாகவும் கூறியிருந்தார். இதை எந்தவகையில் ஏற்றுக் கொள்வது? தனது பரிந்துரைகள், அறிக்கைகள் அனைத்தையும் உதாசீனம் செய்துவிட்டு அமெரிக்கா போர் தொடுத்திருக்கின்றது. இனி அமெரிக்கா பிரயோகிக்க இருக்கும் பயங்கர ஆயுதங்களை பீலிக்ஸ் பரிசோதனை செய்ய முடியுமா? அப்படி இருக்கும் போது மீண்டும் மீண்டும் ஈராக்கின் இரசாயன ஆயுதங்களை மாத்திரம் கதைத்துக் கொண்டிருக்க முடியுமா?

அத்துடன் பீலிக்ஸ் கவலை தெரிவித்திருந்தார். தங்களை இன்னும் சிறிது காலம் அனுமதித்திருந்திருந்தால் தங்களின் பணியை செவ்வனே முடித்திருப்போம் என்றும். ஆனால் தங்களை ஈராக்கிலிருந்து அவசரமாக வெளியேற்றியது தவறு எனவும் கூறினார். என்றாலும் ஆய்வுகளின் முடிவில் கான்பீலிக்ஸ் தெரிவிக்கும் முடிவுகளை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளுமா? ஈராக்கை அழித்தே விடுவது என்னும் கொள்கையில் இருந்து ஜோர்ஜ் புஷ் மாறப்போவதே இல்லை.

அமெரிக்காவின் இந்த போரினால் அழிவடையப் போவது ஈராக் மட்டுமல்ல. ஒவ்வொரு நாடும் ஏதோ ஒரு வகையில் பாதிப்பை அடையப்போகின்றன. அதிலும் குறிப்பாக வளர்முக நாடுகள் பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேரலாம். உலக சந்தைக்கான எண்ணை விநியோகம் குறைந்து செல்லும் போது எண்ணை தட்டுப்பாடு நிலவப் போவது வளர்முகநாடு களில் தான். அத்துடன் பல வளர்முகநாடுகளிலிருந்து சென்று மத்திய கிழக்கு நாடுகளிலும் வளைகுடா நாடுகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களின் நிலை கேள்விக்குரியது.

இப்படியான பாதிப்புகள் ஒருபுறம் இருக்க அமெரிக்க பிரஜைகள் கூட நிம்மதியாக வாழ முடியாத சூழல் உருவாகியுள்ளது. அமெரிக்காவில் பாதுகாப்பு நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இரவும் பகலும் அமெரிக்கர்களும் பிரித்தானியர்களும் பின்லேடன் போன்றவர்களுக்கு நடுங்கிக் கொண்டிருக்கும் நிலை. பின்லேடன் அண்மையில் வெளியிட்ட அறிக்கைகள் அச்சுறுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன. பல மூத்த முஸ்லிம் அமைப்புகள் கொதித்துப் போயுள்ளன. இந்த நிலைமைகள் பல நாடுகளிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கும் கேந்திர நிலையங்களிற்கும் ஸ்தீரமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. செப்டம்பர்11 போன்ற சோகமான பல நாட்கள் மலர்வதற்கு ஜோர்ஜ் புஷ்ஷும் பிளேயரும் வழி வகுத்துள்ளனர்.

மற்றவரின் சுதந்திரம் பாதுகாக்கப்படும் போது தான் தனது சுதந்திரம் பாதுகாக்கப்படும் எனும் உண்மையை அமெரிக்காவும் பிரிட்டனும் அறியும் போது தான் உண்மையான தீவிரவாதத்தை ஒழிக்கமுடியும். அதுவரை இவ்விரு நாடுகளும் தீவிரவாதத்தை தூண்டிக்கொண்டே இருக்கும்.


## எழுத்தாளர்களுக்கு!

எழுதத் தெரிந்தும் எழுதாது உறங்கும் எமது எழுத்தாளர்களே! உங்களிற்கு எழுத்துத்துறையில் ஆர்வமில்லையா? அல்லது எங்களோடு உங்களிற்கான தொடர்பு இல்லையா? கவலையை விடுங்கள். உங்கள் சுயவிபரத்துடன் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு நாங்கள் எங்களது கரங்களைத் தருகிறோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
வெள்ளிநாதம்
யாழ்.சாலை,
கிளிநொச்சி.


### திருத்தம்

21.03.2003. அன்றைய வெள்ளிநாதத்தில் வெளியான தமிழீழ மாவட்டநீதிமன்றின் இடைக்காலத் தீர்வை என்ற விளம்பரத்தில் வரைந்தவர் குலசங்கர் என்பதற்கு பதிலாக குலசேகர் என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 12



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 12

....................................................................

....................................................................

....................................................................


....................................................................

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 11



க. தர்சினி,
673/7, கல்மடுநகர்,
இராமநாதபுரம்.

### பரிசுக்குரிய வரிகள்

**தொண்டர் ஆசிரியரோ போராட்டம் - அதனால்**
**படிப்புகளோ எமக்கில்லை**
**பள்ளியின் உடைந்த ஜன்னல்வழி - தெருவை**
**பார்க்கிறோம் வேடிக்கை.**

### பாராட்டுக்குரிய வரிகள்

எங்களை உங்களுக்குத் தெரியவில்லையா? ஏன்
உங்களுக்கு A-9 வீதி மட்டுமா தெரிகிறது.
எங்கள் உணர்வுகளுக்கு அறிவுத் தீனி போடும்
ஆலயங்களைக் கூட காணவில்லையா உம் கண்கள்.

தி. தியாகம்,
கணேசபுரம், கிளிநொச்சி.

மரத்தடி நிழலிலே பயின்றோம் கல்வியை - மாவீரர்
தியாகத்தால் மீட்டோம் எம் பள்ளியை
உடைந்த சுவர்களின் நடுவிலும் - நாம்
உறுதி தளராது பயின்று வெற்றியுடன் நிமிர்வோம்.

T. ஜெனார்த்தனன்,
வருவாய்ப்பகுதி.
கிளிநொச்சி.

கம்பியூட்டர் கற்பிக்கும் காலமிதாம்
இந்தக்கட்டடத்தில் கணணிகளும் பதித்திருக்காம்.
மாணவர்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டாம்
மீறிவெளியில் வந்தால் அம்மையார்க்கோ பிடிக்காதாம்.

ரவிசோசினி,
அம்மன் வீதி,
வற்றாப்பளை.

எதிரியால் எங்கள் பாடசாலைக்கட்டடங்களை
மட்டும் தான் உடைக்க முடிந்தது.
ஆனால் எங்கள் கல்வியை ஒரு போதும்
அசைக்க முடியாது. இது எங்கள் முடிவு.

சி. நவம்.
இல. 242 சிவசுந்தரம், வீதி,
வட்டக்கச்சி.

கல்வியெம் கவசமானதால் சிதைந்தன பள்ளிகள்
கள்ளமில்லா மொட்டுகள் கணக்கற்று கருகின - எனினும்
எழுகிறார் பல்லாயிரம் இளவல்கள்
பாறைவெடிப்பில் பசும்வேர் படர்ந்தென...

க. குகதாசன்.
நிமலன் புகைப்படக் கலையகம்
...ம் சாலை, கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான ...ப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.





# தேசியபெண்கள் மாநாடு




27.03.2003 அன்று மட்டக்களப்பு நகரில் பெரும் எழுச்சியுடன் ஆரம்பமாகிய தமிழீழ தேசிய பெண்கள் மாநாட்டில் பதிவாகிய காட்சிகள்.

மட்டக்களப்பு செபஸ்தியன் சந்தியில் ஆரம்பித்த எழுச்சிப் பேரணி பெருந்தொகையான பெண்கள் அணியுடன் பதாகைகள் தாங்கிய வண்ணம் ஊர்திகள் முன் நகர பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் நகர்ந்து விபுலானந்த இசைநடனக் கல்லூரியை அடைந்தது.




பின்னர் அங்கு ஆரம்பமாகிய மாநாட்டு நிகழ்வுகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் தமிழீழப் பெண்களை தமிழீழ விடுதலைப்போரில் ஒருங்கிணைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது. பெண்களின் ஒடுக்குமுறைக்கெதிரான போரில் அனைவரது பங்காற்றுகையின் முக்கியத்துவம் இந்த மாநாட்டின் மூலம் உணர்ந்து கொள்ளப்பட்டது. சமூக பெண்கள் மேம்பாட்டு பேரவையின் ஆதரவுடன் இடம்பெற்ற இவ் தேசிய மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் தளபதி கேணல் கருணாவும் கலந்து சிறப்பித்தார். இம்மாநாட்டில் இடம்பெற்ற கலைநிகழ்வுகள் பெண்களின் உரிமைகளை எடுத்துப் பேசுவனவாகவும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துக் காட்டுவனவாகவும் அமைந்திருந்தன.









இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 21 | 04-04-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 45



அமுதன் ஓப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

- தரமான முறையில்
- கணினி முறையில்
- குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம். யாழ். சாலை, கிளிநொச்சி.


# எட்டப்பட்ட உடன்பாடுகளை அமுல்செய்வதே

# சமாதான முயற்சிகள் முன்னேற உதவும்

## நோபல் பரிசு பெற்ற ஜோன் கியூமுடனான சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**சமாதான முயற்சிகளில் அடுத்தகட்ட முன்னேற்றம் ஏற்பட, ஏற்கனவே கண்ட உடன்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுதான் முக்கிய அம்சமாகுமென சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஜோன் கியூம் அவர்களுடனான சந்திப்புக்குறித்து கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.**

செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில்:

இன்றைய சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும், தற்போதுள்ள சூழ்நிலை சம்பந்தமாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு முழுஅளவில் நம்பிக்கையூட்டக்கூடியவகையில் அதனைச் செயற்படுத்துவதனூடாகவே சமாதானத்திற்கும், அமைதி முயற்சிகளுக்குமான ஒத்துழைப்புக்களைப் பெற்று மக்களை இதில் இணைத்துக் கொள்ளமுடியும் என எடுத்துக் கூறியுள்ளோம்.

தற்பொழுது உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறி மக்கள் மீளக்

(iv ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட ஜோன் கியூம் தலைமையிலான குழுவினர்.

## பேச்சுவார்த்தை நல்ல முடிவை எட்டுமென நினைக்கிறேன்

### சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஜோன் கியூம்

(அலுவலக செய்தியாளர்)

நான் சிறிலங்காவின் அழைப்பின் பேரில் இங்கு நடக்கும் சமாதானத்தைப் பற்றிப் பரிசீலிக்க வந்துள்ளேன். நான் அறிந்து கொண்டமட்டில் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. அப்பேச்சுவார்த்தை நல்ல முடிவை எட்டுமென நினைக்கிறேன் என நேற்று வன்னிக்கு வருகைதந்த ஜோன் கியூம் அவர்கள் தெரிவித்தார். செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. மற்றைய கட்சியினரும் இந்த ஒப்பந்தத்தில் நம்பிக்கை வைத்து செயற்படுகின்றார்கள். இந்த ஒப்பந்தத்தில் எவ்வித பிரச்சினை

(iv ஆம் பக்கம் பார்க்க)



ஜோன் கியூம் அவர்கள் கிளி. பத்திய கல்லூரியைப் பார்வையிட்ட போது.

## அடுத்த சுற்றுப்பேச்சு வார்த்தைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்!

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஏழாம் கட்டப் பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதி வரை ஜப்பானில் நடைபெறும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் யூன் 7ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்பாக நடைபெறவிருக்கும் இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தையாக அமைவதால் இப் பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழு இன்று கூடுகிறது

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் இரண்டாவது சந்திப்பு இன்று கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ் உபகுழுவின் சந்திப்பிற்கு அனுசரணையாளர்களாக நோர்வேக் குழுவினர் கலந்து கொள்வர் இச்சந்திப்பில் கலந்து கொள்ளும் அரச தரப்பு பிரதிநிதிகளான டாக்டர் குமாரி ஜெயவர்த்தனா, டாக்டர் தீபிகா உடகம, குமுதினி சாமுவேல், வைசுன் சக்காரியா, டாக்டர் பசீலரிபாஸ் ஆகியோர் வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர். இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள

(iv ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.கொட்டடி - நாவாந்துறைப் பகுதி

## மீனாட்சிபுரத்தைப் புதிய முகாமிற்காக இராணுவம் கையகப்படுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொட்டடி நாவாந்துறை, பிரதேசத்தில் உள்ள மீனாட்சிபுரம் பகுதியை படை முகாம் அமைப்பதற்கு கையகப்படுத்தும் நடவடிக்கையில் சிறிலங்காப் படையினர் ஈடுபடக்கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி வரைபடங்களை சிறிலங்காப் படையினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளமை இந்தச் சந்தேகம் ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்துள்ள சுமார் ஐம்பது குடும்பங்களை மீனாட்சிபுரம் பகுதியில் மீள்குடியமர்த்த அவர்களுக்கு இருப்பிடங்களை அமைத்துக் கொடுக்கும் பணியை 'இன்டெக்' அமைப்பு தற்போது மேற்கொண்டு வருகின்றது. இந்த இருப்பிடங்கள் ஒவ்வொன்றும் தலா 32,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் யாழ். நகரின் கரையோரப் பிரதேசத்தில் படையினர் அமைக்கவுள்ள படைமுகாமுக்காக மீனாட்சிபுரம் பகுதியும் கையகப்படுத்தப்படலாம் என்ற அச்சம் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகள் குறித்து கருத்துக்கணிப்பு நடைபெறும்?

### அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்துவது பற்றி சிறிலங்கா அரசு கவனம் செலுத்தி வருகிறது.

சர்வமதத் தலைவர்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைகளை ஏற்று மக்களின் கருத்துக்களை நேரடியாக அறிந்து கொள்ளும் நோக்கில் வெகுசன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.

அமைச்சரவைப் பேச்சாளர் ஜிஎல்பீரிஸ் அமைச்சரவை முடிவு

(iv ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு ரூபா அதிகரிப்பு

ஈழநாதம் நாளேட்டின் விலை நாளை முதல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். இதன் படி நாளை முதல் நாளேட்டின் விலை ஏழு ரூபாவாக இருக்கும்.

## வரிவிளம்பரம்

### பணம் தவறிவிட்டது

02.04.2003 புதன்கிழமை பி.ப 3.30 இற்கும் 4.00 மணிக்கும் இடையில் துணுக்காய் வைத்திய சாலை முன்வாசலில் சிறு தொகைப் பணம் தவறிவிட்டது. இப்பணத்தைக் கண்டெடுத்தவர்கள் துணுக்காய் வைத்திய சாலையில் ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2917)

### விற்பனைக்குண்டு


நல்ல நிலையில் உள்ள யமகா 80 சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் சிறிலங்கா, தமிழீழ புத்தகங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: யோன் கல்வி நிலையம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. (2826)

### மீட்டல் வகுப்பு

முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி நிலையத்தில் பயிலும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பகுதி ஆசிரிய மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் 05,06ம் திகதிகளில் நடைபெறும் என சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் அறியத்தருகின்றார். (26)

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 21-10-1978



வீரச்சாவு: 04-04-1996

### 2ஆம் லெப். செந்தில்வாசன்

**[சுப்பிரமணியம் தமிழவன்]**

நெஞ்சமெல்லாம் நிறைந்த
அஞ்சா வீரனே!
வெஞ்சமராடிய வேங்கைத்
தமிழவனே!
அளவெட்டியில் அன்று நீ
பகை சாய்த்தாய்
அமுதான தமிழுக்காய் – உன்
உயிர் நீத்தாய்
உனது கனவெல்லாம்
நனவாக்க
உனது பாதச் சுவடுகளில்
பாதம் பதித்து
படையணிகள் நகர்ந்து
செல்லும்
கண்ணுறங்கு களத்தின் வீரனே!

நிரந்தர முகவரி: ஏழாலை, யாழ். (சி-8055)

தகவல்: **நந்தகோபன்,** 36/2, விசுவமடு, முல்லை

## பயணியர் ஊர்திகள் புதிதாகக் கொள்வனவு செய்வோர் கவனத்திற்கு

மேற்படி ஊர்திகள் கொள்வனவு செய்வோர் பயணியர் போக்குவரவு ஊர்தி வழியனுமதிப் பணியகம்-புதுக்குடியிருப்புடன் தொடர்பு கொண்டு தாங்கள் விரும்பும் வழித்தடங்களை உறுதி செய்தபின் கொள்வனவு செய்வது அவருக்கு நன்மைதரும் என்பதையும், அல்லாமல் கொள்வனவு செய்யப்படும் ஊர்திகள் அவர் விரும்பும் வழித்தடங்களில் பணிக்கு அனுமதிக்க முடியாத சிக்கலைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதையும் பணிவுடன் அறியத்தருகின்றோம்

குறிப்பு:- வழியனுமதிப் பணியகத்துடன் தொடர்புகொண்டு உறுதி செய்பவர் வரிசை ஒழுங்கிலேயே ஒப்புதல் வழங்கப்படும்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப்பணியகம்.

(சி-8054)

## நடத்துநர் பணி நேர்முகத் தேர்வு

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 09-04-2003, 10-04-2003ஆம் நாள் சனி, ஞாயிறு காலை 10.00 மணி தொடக்கம் பகல் 03.00 மணிவரை தமிழீழப் போக்குவரவுக்கழகம்- பேருந்துப்பகுதி - புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8054)

## பணிநிலை வேண்டுகை

**ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையாளர்கள் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகைதரவும்.**

நேர்காணல் நடைபெறும் இடம் :- ஆயப்பகுதி – நடுவப்பணியகம், கிளிநொச்சி.

காலம் :- 12 – 04 – 2003, மு.ப. 10.00 மணி

**பணிநிலை :-**

| | | | |
|---|---|---|---|
| 01) ஆய அலுவலர் | (இருபாலாரும்) | 05) சமையலாளர் | (ஆண்கள்) |
| 02) ஆய உதவியாளர் | (ஆண்கள்) | 06) சமையல் உதவியாளர் | (ஆண்கள்) |
| 03) எழுதுநர் | (ஆண்கள்) | 07) பாதுகாப்புப் பணியாளர் | (ஆண்கள்) |
| 04) தட்டெழுத்தாளர் | (ஆண்கள்) | 08) மொழிபெயர்ப்பாளர் | (ஆண்கள்) |

**கல்வித் தகைமை :-**

| | | |
|---|---|---|
| பணிநிலை | 01,03 | இற்கு க.பொ.த.(உ/த) சித்தியடைந்திருத்தல். |
| பணிநிலை | 02 | இற்கு க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். |
| பணிநிலை | 04 | இற்கு க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல். |
| பணிநிலை | 05 | இற்கு உணவு வகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல். |
| பணிநிலை | 06 | இற்கு 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல். |
| பணிநிலை | 07 | இற்கு தேகாரோக்கியமும், நன்நடத்தையுமுடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது. |
| பணிநிலை | 08 | இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக்கூடியவர், எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். |

**சிறப்புச்சலுகை :-** கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்து தரப்படும்.

**ஆயம்,
நிதித்துறை,
தமிழீழம்.**

(சி-8050)

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை.

# வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**

**"ஆஅவ" கடன் இல. 1846 - SRI(SF)**

# கேள்விகோரல் - இல.05

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன். கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத் தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | VA/NECORD/HS/09 | மகப்பேற்று விடுதி மற்றும் மருத்துவ மாது விடுதி அமைத்தல் வ/உலுக்குளம் | 1,000.00 | M 7 | 42,000.00 |
| 02 | VA/NECORD/HS/10 | மகப்பேற்று விடுதி மற்றும் தரம் -V மருத்துவ அதிகாரி விடுதி அமைத்தல் வ/சிதம்பரபுரம். | 1,000.00 | M 7 | 49,000.00 |
| 03 | VA/NECORD/AG/08 | கனகராயன்குளத்தில் கமநலசேவைகள் நிலையம் புனரமைப்பு | 1,000.00 | M 7 | 22,000.00 |
| 04 | VA/NECORD/WS/01 | நீர் வழங்கல் திட்டம் புனரமைப்பு நெடுங்கேணி | 1,000.00 | M 7 | 35,000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்டாட்" உடன் மேற்படி M7 க்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.

IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்பதிகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : 024-22589, பக்ஸ் 024-22590, ஈமெயில் : necordva@sltnet.lk.

06. ஒப்பந்த ஆவணங்களை ஏப்ரல் 4 இலிருந்து ஏப்ரல் 25, 2003 வரை முற்பகல் 09.30 இலிருந்து பிற்பகல் 03.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, பந்தி 2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

07. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் NECORD அலுவலகத்தில் ஏப்ரல் 21 முற்பகல் 10.00 க்கு நடைபெறும்.

08. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும். பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.

09. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியாவிற்கு ஏப்ரல் 30, 2003 பிற்பகல் 3.00க்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

**க. கணேஷ்,**
தலைவர், மாவட்ட கேள்விச்சபை/
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

*(சி.8056)*

# பாக்தாத்தை நெருங்கிவிட்டோம் - அமெ.


# அமெ. தரப்புக் கூறுவது சுத்தப்பொய் - ஈராக்

பாக்தாத் நகரின் தென் பகுதியை நெருங்கிவருவதாகவும் - பாக்தாத்திற்கு 10 கிலோ மீற்றர் தூரம் வரையில் முன்னேறியிருப்பதாகவும் அமெரிக்கத் தரப்பு கூறுகின்றவேளை, ஈராக்கியத் தரப்பு இதனை மறுத்துள்ளது.

இதேவேளை, பாக்தாத் நகருக்கு முன்னேறிய அமெரிக்கப் படைகள் யூப்பிரடீஸ்-ரைகிறிஸ் நதிகளுக்கு மேலாகவுள்ள முக்கிய பாலம் ஒன்றை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்கத் துருப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாக்தாத்தின் தெற்கே ஈராக்கியக் குடியரசுப் படைகள் குவிக்கப்பட்டு. வருவதாகவும் இரவில் இவர்களின் வடக்கே குர்திஷ் போராளிகள் முன்னேற முற்பட்டசமயம் அங்கு கடும்போர் இடம்பெறுவதாக அறியப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்க. பிரிட்டிஷ் படையினர் கொத்தணிக் குண்டுகளை வீசி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பாவிப்பதற்கு தடை



அமெரிக்கா இழந்த எவ்.ஏ-18 ஹோனெற் விமானமும், யு.எச்.-60 உலங்கு வானூர்தியும்

படைகள் பழைய நிலைகளுக்கு திரும்பியுள்ளதாக பி.பி.ஸி. செய்தி ஒன்று கூறுகின்றது.

பாக்தாத்திற்கு தெற்கே நடமாட்டம் அதிகமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்க தாக்குதல் ஆதரவுடன் ஈராக்கின் விதிக்கும் ஒப்பந்தத்தில் பிரிட்டன் கைச்சாத்திட்டுள்ள போதிலும் அது அதனை புறந்தள்ளியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாக்தாத் மீதும், பஸ்ரா மீதும் இவை பயன்படுத் தப்பட்டுள்ளன.

ஆயிரம் இறாத்தல் நிறை கொண்ட கொத்தணிக் குண்டுத் தொகுதியில் பாரிய சேதத்தை விளைவிக்கும் பத்து சிறிய குண்டுகள் உள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாக்தாத்தை கூட்டுப்படைகள் எந்தப் பகுதியிலும் நெருங்கவில்லை. இது கூட்டு படையினரின் அப்பட்டமான பொய்ப்பித்தலாட்டப் பிரச்சாரம் என்று ஈராக்கிய தகவல் அமைச்சர் அல்- ஸகாக் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைன் விமான நிலையத்துக்கு அருகே நெருங்கி வருவதாகவும் கூட்டுப்படையினர் கூறிவருவது ஒரு ஏமாற்று பேச்சு என்றும் தெரிவித்த அவர் தனது தோல்விகளை மறைக்க இந்த பொய்ப் பிரச்சாரத்தில் அமெரிக்க இறங்கியுள்ளது என்றார்.

## பிணை வழங்க மறுப்பு

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி பொதுத்தேர்தல் தினத்தன்று நடைபெற்ற உடத்தலவின்ன படுகொலை வழக்கின் முதலாவது எதிரியான முன்னாள் பிரதிப்பாது காப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட 15 பேருக்கு நீதிமன்ற நீதிபதிகள் குழுவின் மூன்றில் இரண்டு பேரின் விருப்பத்துக்கு ஏற்ப பிணை வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட கடந்த ஜனவரி 21 ஆம் திகதி முதல் முதலாம் எதிரி அனுருத்த ரத்வத்த அவரது புதல்வர்களான லொகான் ரத்வத்த, சானுக ரத்வத்த உட்பட 15 பேர் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதிவாதிகள் அனைவரையும் இம்மாதம் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு இந்த வழக்கு விசாரணையை நடாத்தும் மூன்று மேல் நீதிபதிகளைக் கொண்ட ரயல்அட்பார் குழு நேற்று உத்தரவிட்டுள்ளது.

### சமாதான...

களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இதுவரை நடந்த சமாதான முயற்சிகள் பற்றிய விடயங்களையும் இறுதி அரசியல் தீர்வை அடைவதற்கான யோசனைகளையும் உள்ளடக்கிய சமாதான கட்டளைச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதற்கு முன்னர் மக்கள் கருத்துக் கணிப்புக்களை நடத்துவதே உசிதமானது என்று கல்விமான்கள் கருதுகிறார்கள். இதன் மூலம் சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்த முடியும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

### பெண்கள்...

இவ் இரண்டாவது உபகுழு மாநாட்டில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளன. இம்மாநாடு நாளையும் நடைபெறவுள்ளது. (பா)

### அடுத்தசுற்று...

பெறுவதாக அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றிகரமாக நடைபெறுவதனால், உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு பெருமளவு நிதி கிடைக்கும் என்று அரசு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

வளைகுடாவில் யுத்தம் நடைபெறுகின்ற போதிலும் நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக சிறிலங்கா தொடர்ந்தும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். இரு தரப்பினராலும் தற்போது எதிர்நோக்கப்படும் பல்வேறுபட்ட அரசியல் ரீதியிலான சிக்கலுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான சகல முயற்சிகளும் அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் குறித்து அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் எடுத்துக் கூறப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

### பேச்சுவார்த்தை...

யும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சிறிலங்காவின் மக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். அத்துடன் வன்செயல்களும் மலிந்துள்ளன. இந்தப் பிரச்சினைக்கு தகுந்த வழி பேச்சுவார்த்தையே. அத்துடன் ஒப்பந்தமுமே! இவை இரண்டும் நடைமுறையிலுள்ளன. பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் பிரதிநிதிகள் ஒரு முடிவுக்கு வருவார்கள் என நினைக்கின்றேன். எதற்கும் பேச்சுவார்த்தையே நல்ல முடிவாகும்.

கேள்வி: தங்களுக்கு பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் நோக்கம் உண்டா?

எனது பதில் மிகவும் இலகுவானது. நான் எதையும் எந்த நேரத்திலும் செய்யத்தயாராக உள்ளேன். எனக்கு இவ்விடயம் பற்றி என் நாட்டில் அனுபவம் உண்டு. அதுமாத்திரமல்ல அதனால் எத்தனை பாமர மக்கள் தங்கள் உயிர்களை இழக்கின்றார்கள். இவ் உலகில் மக்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக சமாதானத் திற்குப் பாடுபட வேண்டும்.

கேள்வி: அயர்லாந்தில் நடந்த வைகளையும் சிறிலங்காவில் நடப்பதையும் ஒப்பிடலாமா?

உங்கள் நாட்டின் பிரச்சினையும் அயர்லாந்து பிரச்சினையும் ஒரு மாதிரியானவை. ஆனால் அயர்லாந்தில் வன்முறை தொடங்கியபோழுது நாம் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட்டோம். நாங்கள் இதைப்பற்றி பேச்சுவார்த்தை நடாத்தினோம். ஒப்பந்தம் செய்தோம். அந்த ஒப்பந்தத்தையும் அயர்லாந்து மக்கள் முன் வைத்தோம். அதன் பலனையும் கண்டோம். நீங்களும் நாம் செய்ததுபோல் செய்தால் பலனை அடையலாம். சிறிலங்காவின் அதிகமான மக்கள் சமாதானத்துடன் வாழ விரும்புகின்றார்கள். அதற்கு இரண்டு சாராரும் பேச்சுவார்த் தையின் முடிவில் ஒப்பந்தம் செய்வதே. நான் எல்லாக் கட்சியினருடனும் கதைத்து விட்டேன். அவர்கள் சமாதானத்துக்காக பாடுபடுவதாக வாக்களித்துள்ளனர். அவைகளை செயற்படுத்தி நல்ல சமாதான முடிவை அடைவீர்கள் என நினைக்கின்றேன் என்றார். (பா)


## நேர்முகத்தேர்வு

### பணிநிலை வேண்டுகை விளம்பர இல 45

மேற்படி விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 06.04.2003 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி டிப்போச்சந்திக்கு அருகாமையிலுள்ள தமிழீழ போக்குவரத்துக்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்குரிய சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

-நிர்வாகம்.

(சி-8049)


### எட்டப்பட்ட...

குடியேறாமல் இருப்பதும் இன்றும் இயல்பு நிலை தோன்றாமல் இருப்பதும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு நெருக்கடியான சூழ்நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

அத்தோடு அடுத்தகட்ட முன்னேற்றங்களுக்கு ஏற்கனவே கண்ட உடன்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தான் முக்கியமான அம்சமாகும். அதேநேரம் வடக்கு- கிழக்கில் எங்களுடைய பிரதேசங்களில் மக்கள் குடியேறியுள்ளபோதும் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் நெருக்கடிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே அதற்கு அடிப்படைக் கட்டுமானங்களை கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு சர்வதேச உதவிகள் பெருமளவிற்கு தேவைப்படுகின்றது. அதைப் பற்றியும் இங்கு கதைத்துள்ளோம்.

நேற்றுக் காலை 10.20 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் ஜோன் கியூம் உடன் சிறிலங்காவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவன்ஸ், ஜரீஸ் உயர்ஸ்தானிகர் பிலிப்மைக் டொனா, தெற்காசிய பிராந்திய அலுவலக லண்டன் பொதுநலவாய அலுவலக பிரதித்தலைவர் ஜேம்ஸ் டொறிங் இன்பக்ஸ் மற்றும் நிறுவன இணைப்பாளர் றைறோன் ரூபர் டினன்ஸ் ஆகியோர் வந்திறங்கிய போது இவர்களை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் வரவேற்றுள்ளார்.

அடுத்து விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் காலை 10.45 மணிக்கு இடம்பெற்ற சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், ஜோர்ச் பவாநந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாதான நோபல் பரிசு பெற்ற ஜோன் கியூம் அவர்களுடன் வந்த குழுவினர் புலிகளுடனான சந்திப்பினை பகல் 12.30 மணியளவில் முடித்துக்கொண்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியினையும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கென அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இடத்தினையும் பார்வையிட்டனர். பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர். (பா)

## சாவு அறிவித்தல்

### அமரர் கதிர்காமர் நடேசு

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் நடேசு அவர்கள் 03-04-2003 அன்று இராமநாதபுரத்தில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர்-தங்கம் அவர்களின் அன்பு மகனும், கோமளத்தின் அன்புக் கணவரும் சத்தியபாமா(கமநலசேவை நிலையம், வட்டக்கச்சி) தேவகி (சுவிஸ்), பகீரதி(சுவிஸ்), ஜெயசீலன், கிருபாவதி, சிவானந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன், (கண்டாவளை) தியாகலிங்கம் (சுவீஸ் ), உதயகுமார் (சுவீஸ்), சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பெரியதம்பனை பூமணி, காலஞ்சென்ற நாகமணி பசுபதி, நாகமுத்து நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற லிகிதர் நாகேந்திரம், காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் தியாகராஜா, இராசம்மா அருமைத்துரை, கண்ணம்மா கருணாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-04-2003 இன்று வெள்ளிக்கிழமை பி.பகல் 2 மணியளவில் நடைபெற்று இராமநாதபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

முருகன்கோவில் வீதி,
வட்டக்கச்சி,
இராமநாதபுரம், கிளிநொச்சி. (3061)

தகவல்
ஜெயசீலன் (மகன்)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.